Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் – 40 | விலை – 40 ரூபா செய்தி : 021 493 0000 விளம்பரம் : 021 49[illegible] 111

சுடர் :35 கதிர் :66 தை 19ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 02 பெப்ரவரி 2020 வள்ளுவர் ஆண்டு 2051



## ஓவர் விசுவாசம் உடம்புக்கு ஆகாது!

மைத்திரி போக, கோத்தா வந்தார்... டும்..டும்..டும்!! இப்பிடி நியூஸ் வந்தவுடனேயே எங்கட அதிகாரிகள் ரண்டு பேர், இப்ப லோக்கலில பவர் காட்டுற பெற்றோல் செற் எம்.பியின்ர காலில போய் விழுந்திச்சினமாம். அதுக்கு கைமேல பலனும் கிடைச்சு, அந்த ரண்டு பேரையும் இப்ப வேற வேற இடங்களில உச்சாணிக் கொம்புக்கு கிட்டவா இருத்தியாச்சு. இந்த விசுவாசத்துக்கு அந்த ரண்டு பேரும், கிடைச்சதுக்கும் மேலால 'ஓவரா' கூவுகினம் என்டு பரவலாக் கதை அடிபடுகுது. 37



## யாழ். - கொழும்பு விமான சேவை நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 2

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கு பயணிகள் விமான சேவை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பிட்ஸ் எயார் நிறுவனம் இந்தச் சேவையை நடத்தவுள்ளது. 08

### தப்பித்து ஓடினார்

## 'கொரோனா' நோயாளி?

### தெல்லிப்பழையில் சம்பவம்

யாழ்ப்பாணம், பெப். 2

கட்டாரிலிருந்து சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்திருந்த தெல்லிப்பழையைச்சேர்ந்தவருக்கு கொரோனா வைரஸ் 37

## மயங்கி வீழ்ந்தவர் சாவு

யாழ்ப்பாணம் பெப்.2

தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த ஒருவர் மயங்கி வீழ்ந்து, உயிரிழந்தார். இந்தச் சம்ப 08



# விக்னேஸ்வரனின் பானை உடைகிறது

### கூட்டுக்குள் இணைய சிறிகாந்தாவின் தமிழ்த் தேசியக் கட்சியும் மறுப்பு

யாழ்ப்பாணம், பெப்ரவரி 2

**ரெலோவிலிருந்து பிரிந்து சென்று புதிய கட்சியை உருவாக்கிய சிறிகாந்தா தலைமையிலான தமிழ்த் தேசியக் கட்சி எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை தனித்து எதிர்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளது. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியில், தமிழ்த் தேசியக் கட்சி இடம்பெறும் என்று தகவல்கள் வெளிவந்திருந்த நிலையில், அந்தக் கட்சியின் தலைவர் ந.சிறிகாந்தா மேற்படி அறிவிப்பை நேற்று விடுத்துள்ளார்.** 37

## முட்டி மோதும் அமைச்சர்கள்

யாழ்ப்பாணம், பெப். 2

காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் தலைவரை நியமிப்பது தொடர்பில் ஆளும் கட்சியின் இரு அமைச்சர்களுக்கு இடையில் மோதல் எழுந்துள்ளதாக அறியமுடிகின்றது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆளும் கட்சியினர், 37

## விபத்தில் சிக்கி வயோதிபர் பலி!

யாழ்ப்பாணம். பெப்.2

மோட்டார் சைக்கிளில் வந்தவர் மோதியதில், வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார். மிருசுவில் கெற்பேலி, மிருசுவிலைச் சேர்ந்த 08

## புதிய இந்தியத் தூதர் நேற்று நியமனம்

கொழும்பு, பெப். 2

மூத்த இராஜதந்திரி கோபால் பக்லே இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சு நேற்று அறிவித்துள்ளது. அவர் விரைவில் தமது கடமைகளை பொறுப்பேற்பார் என்று எதிர்பார்க்கப் 07

## சுரேஷுக்கு ஆப்பு!

யாழ்ப்பாணம், பெப். 2

ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் பெயரை தமிழர் ஐக்கிய முன்னணி என்று பெயர் மாற்றுவதில் உடன்பாடு கிடையாது என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செய 08

## சீனாவிலிருந்து மாணவர்கள் நேற்று அழைத்து வரப்பட்டனர்



கொழும்பு, பெப். 2

கொரோனா வைரஸ் ஆபத்து நிறைந்த சீனாவின் வூஹான் நகரில் சிக்கியிருந்த 33 இலங்கை மாணவர்களைப் பாதுகாப்பாக இலங்கைக்கு அழைத்து வந்துள்ளனர் விமானக் குழுவினர்.

வூஹான் நகரிலி 07

## உரிமைகளைக் கேட்பது இனவாதக் கூச்சலா?

### அத்துரலிய ரத்ன தேரருக்கு சரவணபவன் எம்.பி. பதிலடி

யாழ்ப்பாணம், பெப். 2

இந்த நாட்டில் சமவுரிமையைக் கேட்பது இனவாதமா? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழர்களுக்கான உரிமைகளை, உரித்துக்களைக் கேட்கின்றது. அது இனவாதமா? இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப் 37

## வடக்கு ஆளுநர் பற்றி போட்டுக் கொடுப்பு

யாழ்ப்பாணம், பெப். 2

வடக்கு மாகாண ஆளுநர் அவருடைய பதவியேற்புக்கு அரசை ஆதரித்து வருகின்ற கட்சிகளை அழைத்திருக்கவே இல்லை என்றும் ஆனால் தமிழ்த் தேசியக் கூட் 07

அடகு வட்டி மேலும் குறைக்கப்பட்டுள்ளது

தங்கப்பவுண் ஒன்றிற்கு

அதிகூடிய முற்பணம் எம்மிடம் இருந்து

முற்பணத் தொகை மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது

LB FINANCE 0112 200 200

## இல்ல மெய்வன்மைப் போட்டி

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியின் இல்லமெய் வன்மைப் போட்டி நாளை திங்கட்கிழமை பி.ப 2 மணியளவில் கல்லூரியின் அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற வுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக, வடமா காண கல்வித்திணைக்களத்தின் உடற்கல்வி மற்றும் விளையாட்டு உதவிக்கல்விப்பணிப்பாளர் இ.இராஜ சீலன் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தி னர்களாக, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கோப் பாய்த்தொகுதி அமைப்பாளர் செ.செல்வச்சந்திரன் மற்றும் வடமாகாண கல்வித்திணைக்களத்தின் சமூ கவிஞ்ஞான ஆசிரிய ஆலோசகர் சி.குலேந்திர ராசா ஆகியோரும் கௌரவ விருந்தினர்க ளாக ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகரும் பழைய மாணவனு மான ச.அருந்தவரட்ணம் மற்றும் ஓய்வுநிலை ஆசி ரியர் திருமதி.தி.அப்புத்துரை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ந)

*** *** ***

அச்சுவேலி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் புதன்கிழமை பிற் பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெ றவுள்ளது.

பாடசாலை அதிபர் சி.திரிகரன் தலைமையில் நடை பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளு மன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன்,சிறப்பு விருந்தி னர்களாக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன், வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பி னர் அ.செல்வராசா, கௌரவ விருந்தினராக அச்சு வேலி மத்திய கல்லூரி ஓய்வுநிலை பகுதித் தலைவர் யோ.செல்லமுத்து ஆகியோர் கலந்துகொள்வர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

*** *** ***

யாழ்ப்பாணம் பெரியபுலம் மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை திங்கட்கிழமை பிற்ப கல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெ றவுள்ளது.

வித்தியாலய அதிபர் ந.ப்ரமேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக பழைய மாணவர் இசைவாணர் முத்துக்குமாரு கோபாலகிருஷ்ணன், சிறப்பு விருந்தினராக கிருபா லேணர்ஸ் உரிமையாளர் லயன் அ.கிருபாகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

*** *** ***

தோண்டாவில் சி.சி.த.க.பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நாளை திங்கட்கிழமை பி.ப 2 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி.சி நந்தகுமார் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற வுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலயத்தின் ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் பத்மநாதன் சசிக்குமார் அவரது பாரி யார் திருமதி.தூரிகா சசிகுமார் தம்பதியினர் கலந்து கொள்ளவுள்ளனர். சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு பெற்ற அதிபர் இளையதம்பி தேவராஜா திருமதி. ஜெகதீஸ்வரி தேவராஜா தம்பதியினர் கலந்துகொள் ளவுள்ளனர். (ந)

### சரவணபவன் எம்.பியின் ஏற்பாட்டில்

# முன்னாள் போராளிகளின் குடும்பங்களுக்கு நிதியுதவி

யாழ்ப்பாணம், பெப்.2

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப் பட்ட முன்னாள் போராளிகளின் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி பள்ளிக்குடாவில் நேற்று இடம்பெற்றது.



முன்னாள் போராளிகளு டைய பிள்ளைகளின் கல்வியை ஊக்குவிக்கும் வகையில், நாடாளு மன்ற உறுப்பினர் ஈ.சர வணபவனின் ஏற்பாட்டில் இந்த உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பி னர் ஈ.சரவணபவனின் வேண்டுகோளுக்கு இணங்க, கனடா தமிழ் அக்கடமியின் தலைவர் வி.எஸ். துரைராஜா ஒன் றரை இலட்சம் ரூபா நிதியை இதற்காக ஒதுக்கி யிருந்தார். ஒவ்வொரு குடும்பங்களின் வாழ்க் கைத் தரம் மற்றும் குடும்ப அங்கத்தவர்க ளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அந்த நிதி பகிர்ந்த ளிக்கப்பட்டது. இந்த உதவி குறித்த குடும்பங்க ளுக்கு மாதாந்தம் செய்து கொடுப்பதாகவும் துரைராஜா உறுதியளித் தார். குடும்பங்களுக் கென வங்கிக் கணக்குக ளைத்திறந்து மாதாந்தம் அவர்களுக்கு குறிப்பிட்ட நிதியை வைப்பிலிடவுள் ளதாகவும் அவர் தெரி வித்தார்.

இந்த நிகழ்வில், நாடாளு மன்ற உறுப்பினர் ஈ.சர வணபவன், அவரது பாரி யார் திருமதி யசோதை சரவணபவன், கனடா தமிழ் அக்கடமியின் தலைவர் வி.எஸ். துரை ராஜா, நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப் பாளர் செ.பிரதாப், கைதடி சனசமூக நிலையங்க ளின் ஒன்றியத் தலை வர், நாடாளுமன்ற உறுப்பினரின் கிளி நொச்சி இணைப்பாளர், முன்னாள் போராளிகள், நாடாளுமன்ற உறுப்பின ரின் ஆதரவாளர்கள், பள்ளிக்குடா, மற்றும் கோணாவில் பிரதேசங்க ளைச் சேர்ந்த முன்னாள் போராளிகளின் குடும்ப உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்ட னர். (ப)

## பொருளாதார மத்திய நிலையம் இன்னும் இழுபறியிலேயே

யாழ்ப்பாணம், பெப். 2

வவுனியாவில் பொரு ளாதார மத்திய நிலை யம் அமைக்கப்பட்டு ஓர் ஆண்டு நிறை வுற்றபோதிலும் அதனை இயக்க இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர். கட்டடம் கட்ட ஆரம்பிக்கும்போது இடப் பிரச்சினை, கட்டத் தொடங்கும் போது நிதிப் பிரச் சினை, கட்டிமுடித்த பின்னர் தேர்வில் பிரச்சினை என்று பொருளாதார மத்திய நிலையம் இன்றுவரை நெருக்கடியாகவே உள்ளது. குறித்த நிலையத்தில் இடங் களை வழங்குவதற் காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு அதற்ன மைய நேர்முகத் தேர்வுகளும் இடம்பெற் றன. இருப்பினும் முன்னேற்றமில்லை என்று தெரிவிக்கப்படு கின்றது. (த-105)

## சைக்கிள்கள் கையளிப்பு



கிளிநொச்சி, பெப்.2

கிளிநொச்சி கோணாவில் பிரதேசத்திலுள்ள முன்னாள் போராளிகளின் குடும்பங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப் பட்ட மாணவர்கள் மூவருக்கு நேற்றையதினம் துவிச்சக்கர வண்டிகள் வழங்கிவைக்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப் பினர் ஈ.சரவணபவனின் வேண்டுகோளுக்கு இணங்க அவரது சகோதரரான பிரிட்டனில் வசிக்கும் ஈ.நவநீதன் அந்தச் துவிச்சக்கர வண்டிகளை வழங்கிவைத்தார். (ப)

## பல்கலை மாணவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவுகள்

யாழ்ப்பாணம்,பெப்.2

வடக்கு ,கிழக்கில் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த வறுமை நிலையில் உள்ள 300 மாணவர்களுக்கு கொடுப் பனவுகள் வழங்கப்பட்டன.

லண்டன் சிறி கனக தூர்க்கை அம்மன் ஆலயத்தால் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கே புலம்பெயர் அமைப் பொன்றினால் இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்றுக் காலை கோணாவளை வீதி கொக் குவிலில் உள்ள யாழ் விஷன் மண்டபத்தில் இடம்பெற்றது. தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் 99 பேருக்கு நேற் றைய தினம் இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. ஒரு மாணவருக்கு தலா 3ஆயிரம் ரூபா வீதம் நான்கு ஆண்டுகள் இந்த நிதி மாதாந்தம் வைப்பிலிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. யாழ்.விஷன் இந்து மன்றத் தலைவர் க.சுசீந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நல்லை ஆதீனம்உள்ளிட்ட இந்துக் குருமார்கள் கலந்து கொண்டு ஆசிக்களை வழங்கினர்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா. வேதநாயகன் கலந்து கொண்டார்.சிறப்பு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடக்கு மாகாண முன்னாள்எதிர்க்கட்சித் தலைவர் சி. தவ ராசா,வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் இளங் கோவன்,நல்லூர் பிரதேச சபை தவிசாளர் தியாகமூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ)



# உலகத் திருக்குறள் மாநாடு

யாழ்ப்பாணம் பெப்.2

உலகத் தமிழராய்ச்சி நிறுவனம் சென்னை, மதுரை காமராஜர் பல் கலைக்கழக தமிழ்த்துறை மற்றும் இதய நிறைவு தியான அமைப்பு என்பனவற்றுடன் இணைந்து தஞ் சாவூர் தமிழ்த்தாய் அறக்கட்டளை நிறுவனம் 'உலகத் திருக்குறள் இரண்டாவது மாநாட்டை,' எதிர்வ ரும் 21,22 மற்றும் 23, ஆகிய தினங்களில் யாழ்ப்பாண பல்க லைக்கழகத்தில் நடத்துவதற்கு எண்ணியுள்ளது. இந்த ஆய்வு மாநாட்டுக்கு, ஆய்வாளர்களிடம் இருந்து ஆய்வுக்கட்டுரைகள் வர வேற்கப்படுகின்றன.

ஆய்வுக்கட்டுரைகள் திருக்குறளு டன் தொடர்புபட்டதாகவும், சொந் தப் படைப்பாக இருப்பதும் அவசி யமாகும். கட்டுரைகள் ஏ4 தாளில் 8 பக்கங்களுக்கு மேற்படாமல் இருப்பதுடன் கணிப்பொறி Ms.word இல் 1.5 இடைவெளி யில் Baminii எழுத்துருவில் தட்டச் சுச் செய்து அனுப்பப்பட வேண் டும். கட்டுரையின் முடிவில் அரை வாசி அளவிலான புகைப்ப டம்,தொடர்பு முகவரி, தொடர்பு எண், என்பனவற்றை kuralconference@gmail.com மற்றும் suriysakn@gmail.comஎன்ற மின் னஞ்சல் முகவரிக்கு 05.02. 2020 க்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப் பட்டுள்ளது.

தேர்தெடுக்கப்படும் கட்டுரைகள் ஆய்வு மாநாட்டில் நூலாக ஆய் வாளர்களுக்கு வழங்கப்படும். (ந)

# கொரோனாவை பயன்படுத்தி சீன எதிர்ப்பை ஏற்படுத்தாதீர்!

## மஹிந்த அமரவீர தெரிவிப்பு



கொழும்பு,பெப்.2

கொரோனா வைரஸை பயன்படுத்தி சீன எதிர்ப்பு அலையை எவரும் உருவாக்க வேண்டாம் என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் மஹிந்த அமரவீர.

அம்பாந்தோட்டையில் கடந்த வியாழக்கிழமை நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொரோனா வைரஸ் காரணமாக நாட்டில் உள்ள ஏனைய வைரஸ்கள் தொடர்பில் தற்போது எவரும் பேசுவதில்லை.

ரஞ்சன் ராமநாயக்கவின் செயற்பாடுகளை மறந்துள்ளனர். தினம் தினம் நாட்டில் பலர் டெங்கு நோய்க்கு உள்ளாகுகின்றனர். கொரோனா வைரஸ் போன்று டெங்குவை ஒழிப்பதற்கு நாம் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

சிலர் சீன நாட்டினரை கண்டால் அருகில் செல்லவும் அச்சப்படுகின்றனர். இந்த நாட்டில் பல வருடங்களாக வசிக்கும் சீனர்களை கண்டாலும் அச்சமடைகின்றனர். வேலைத்தளங்களிலும் சீனர்கள் அருகில் எவரும் செல்வதில்லை. அவ்வாறு எவரையும் ஒதுக்கி வைப்பது நல்லதல்ல.

சீனா இலங்கைக்குப் பெரும் உதவிகளை வழங்கியுள்ளது.

அவற்றை மறக்கக் கூடாது. இன்றளவும் பெரும் அபிவிருத்திகளையும், உதவிகளையும்,'முதலீடுகளையும் சீனா இலங்கைக்கு வழங்குகிறது.

அவர்களுடைய நாட்டில் ஒரு பிரச்சினை ஏற்பட்டுள்ளது. அது உலகளாவிய ரீதியில் பரவலடைகிறது.

எமது நாட்டுக்குள் வைரஸ் பரவாமல் இருப்பதை தடுக்கவே நாம் செயற்பட வேண்டும்.

கொரோனா வைரஸை பயன்படுத்தி சீன எதிர்ப்பு அலையை உருவாக்க வேண்டாம். சர்வதேசத்துடன் சிறந்த உறவை நாம் கட்டியெழுப்பியுள்ளோம்.என்றார் அமைச்சர் அமரவீர. (எ-24)

# அதிவேகம்: தண்டம் ரூ.16,500



கிளிநொச்சி, பெப். 2

பொலிஸாரின் சமிக்ஞையை மீறி அதிவேகமாக வாகனம் செலுத்தியவரை எச்சரித்த நீதிமன்று, 16 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்தது. பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வேகமாக வாகனம் செலுத்தினார் என்று குற்றஞ்சாட்டி பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இதேவேளை, இதே பொலிஸ் எல்லைக்குள் ஆபத்தான முறையில் வாகனம் செலுத்தியவருக்கு கிளிநொச்சி நீதிமன்று 6ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்தது. (த-6)

# கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,பெப்.2

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியால் டிப்ளோமா தர கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த உயர்தர மற்றும் என்.வி.கியூ தகைமை உடைய மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும். தொலைத்தொடர்பு தொழில் நுட்ப தேசிய டிப்ளோமா என்.வி.கியூ மட்டம் 5 மற்றும் 6 (முழுநேரம்), நிர்மாண தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா என்.வி.கியூ மட்ட 5 (முழுநேரம் மற்றும் பகுதிநேரம்), ஓட்டோமொபைல் (தன்னியக்க மோட்டார் வாகன) தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா என்.வி.கியூ மட்டம் 5 (முழுநேரம் மற்றும் பகுதிநேரம்) கணிய அளவையியல் தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா என்.வி.கியூ மட்டம் 5 (முழுநேரம்), கணக்கியல் தேசிய டிப்ளோமா என்.வி.கியூ மட்டம் 5 மற்றும் 6 (முழுநேரம்),ஆங்கில ஆசிரியர் தேசிய டிப்ளோமா என்.வி.கியூ மட்டம் 5 (முழுநேரம்), தொழில்நுட்பவியல் தேசிய சான்றிதழ் மின்னியல் மற்றும் இலத்திரனியல் என்.வி.கியூ மட்டம் 5 (பகுதிநேரம்) மேலும் உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளக் கூடியதான வெல்டிங் மற்றும் மெசினிங் போன்ற கற்கைகளும் ஆரம்பமாகவுள்ளன.

மேற்குறிப்பிட்ட கற்கை நெறிகளுக்கு தகுதியானவர்கள் விண்ணப்பிக்க முடியும். மேலதிக விவரங்களுக்கு கல்லூரியின் தொழில்வழிகாட்டல் நிலையத்துடன் 02122 12403 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு நிர்வாக உதவி இயக்குநர்கே.சாந்தகுமார் அறிவித்துள்ளார். (ஐ)

# கைதடி முத்துக்குமாரசாமி ம.வியின் மெய்வன்மைப் போட்டி

கொடிகாமம்,பெப்.2

கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்றுமுன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் தா.கணேசபாலேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ சரவணபவன் கலந்துகொண்டார்.

மேலும் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.மதிதரன், கௌரவ விருந்தினர்களாக பழைய மாணவரும் பொறியியலாளருமான சு.சுதர்சன், தென்மராட்சி கல்வி வலய முகாமைத்துவ உதவியாளர் க.விக்கினேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் செ பிரதாப், கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியத் தலைவர் இ கந்தசாமி, சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சு,கேதீஸ்வரன், தென்மராட்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர்கள், அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர் 80 ,100, 400 மீற்றர் ஓட்டப் போட்டிகள், வளையம் போடுதல், வளைந்து நெளிந்து ஓடுதல், பொதி பொறுக்குதல், அஞ்சல், கலப்பஞ்சல், ஆண் பெண்களுக்கான கயிறிழுத்தல் உள்ளிட்ட விளையாட்டுக்கள் நடைபெற்றன.விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ஐ-159)







## இதயத்தின் முக்கியத்துவம்

இதயநாடி நோய்கள் மீள்நிலைக்கு...

நாடி அடைப்புகள் கரைக்கப்படுகின்றன

எமது முறை எவ்வித அறுவை சிகிச்சைகளுமற்றது

சத்திரசிகிச்சையும், ஸ்ரென்ட் பதித்தலும்தான் சிகிச்சைமுறைகளாக நாடி அடைப்புகளுக்கு பரிகாரமாக இருந்தது. எங்கள் இயற்கை மூலிகை தயாரிப்புகள் குறைந்த விலையில்,அடைப்புக்களை, கல்சியப்படிவுகளாக இருந்தாலும் கூட மாற்றுப் பரிகாரமாக அமைகின்றன.

உலகப்பார்வையில் சத்திரசிகிச்சைதான் நாடி அடைப்புகளுக்கு பரிகாரமாக கருதப்படுகிறது.



Hotline:
0777555600 | 0777708310 | 0777708330

FAIR PHARMA (PVT) LTD

APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI & ISO 9001: 2008 QMS CERTIFIED COMPANY

செலிங்கோ ஹவுஸ்,10வது மாடி கிழக்கு,இல:69,ஜனாதிபதி மாவத்தை,கொழும்பு - 01.
Tel:0114 388200 / 4 388 100 / 4 388 101 / 4 388 102
Web: www.ayurveda.lk | E-mail: fairpharmasrilanka@yahoo.com

எங்களால் குணப்படுத்தப்படுகிறது
- இருதயநோய்
- நோய் எதிர்ப்பு சக்தி
- புற்றுநோய் தணிப்பு
- ஈரல் பாதிப்புக்கள்
- மூட்டு வாதம்
- மூட்டுவலி / முதுகு வலி
- புரோஸ்டேற் பிரச்சினைகள்
- ஒற்றைத் தலைவலி
- புழையழற்சி
- மனஅழுத்தம்
- இருமல் / சளி
- படுக்கைப்புண்கள்
- நாட்பட்ட காயங்கள்
- நீரிழிவு நோய்கள்
- வைரஸ் தொற்றுக்கள்
- பாலியல் குறைபாடு
- மண்குஷ்டம்

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## எப்பிடியிருந்தவர்கள் இப்படியாகிவிட்டார்களே!!

இன்னும் 25 வருடங்களில், இலங்கையில் குறிப்பிடத்தக்களவு வீதமானோர் சீனர்களாகவே இருப்பார்கள் என்று சில வருடங்களுக்கு முன்னர் 'நகைச்சுவையாக' சொல்லப்பட்டு வந்தது. அந்தளவுக்கு சீனர்களின் தலையீடும், பிரசன்னமும் இலங்கையில் அதிகரித்திருந்தது. குறிப்பாக கொழும்புத் துறைமுகநகர் உருவாக்கத்துக்காகவும், 'ஷங்கரிலா' போன்ற பிரமாண்டமான ஹோட்டல்களை நிர்மாணிப்பதற்காகவும், வீதி அபிவிருத்திப் பணிகளுக்காகவும் பல்லாயிரக்கணக்கான சீனத் தொழிலாளர்கள், இறக்குமதி செய்யப்பட்டிருந்தனர். கூடவே அந்தச் சீனத்தொழிலாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக சீன வணிக நிலையங்களும் புதிதாகத் திறக்கப்பட்டன. அவ்வளவு ஏன், கொழும்பில் பல இடங்களில் அறிவிப்புப்பலகைகளில் கூட சிங்கள மொழிக்கு அடுத்ததாக சீனமொழி இடம்பெறுமளவுக்கு, இலங்கை ஒரு குட்டிச்சீனாவாக மாறத் தொடங்கியிருந்தது.

தனியே வர்த்தக நடவடிக்கைகள் மட்டும் இலங்கைக்குச் சீனச்சாயத்தைப் பூசவில்லை, அரசியல் ரீதியாகவும் இலங்கை சீனாவை அண்டியே இருக்கும் நிலையும் உருவானது. மஹிந்த ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் மற்றைய நாடுகளை விடவும் அவர் சீனாவையே அதிகம் நம்பினார். சீனாவுக்கும் இலங்கையின் நட்பு மிக அவசியமானதாக இருந்தது. சீனாவின் முத்துமாலை அல்லது பட்டுப்பாதை திட்டத்தின் மையப்புள்ளியே இலங்கை தான். இலங்கையைத் தன் கைப்பிடிக்குள் கொண்டுவந்து விட்டால், தென்னாசியாவையே வளைத்துவிட சீனாவால் முடியும். அதனால் மஹிந்த எவ்வளவுக்கு சீனாவை நேசித்தாரோ, அதேயளவு சீனாவும் இலங்கையின் நட்பை அதிகம் விரும்பியது. இந்தக் காதலின் விளைவாக இலங்கையில் இடம்பெற்ற பல அபிவிருத்தித் திட்டங்களுக்கு சீனா வட்டியில்லாக் கடன்களை அள்ளி அள்ளிக் கொடுத்தது. எவ்வளவுக்கு இலங்கை தன்னிடம் கடனாளியாகின்றதோ அந்தளவுக்கு காலடியில் வந்து கிடக்குமென்பது சீனாவின் கணிப்பு. இன்னும் சொல்லப்போனால், நக்குண்டார் நாவிழந்தார் கதைதான்.

இருப்பினும் சீனாவே எதிர்பார்க்காதளவுக்கு இலங்கையில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்த போது, சீனத் திட்டங்களுக்கு இலங்கையில் முதலில் தடை விதிக்கப்பட்டது. இருப்பினும் முன்னர் கொடுத்த கடனை வைத்து இலங்கையை மடக்கியது சீனா. பழையபடி சீனாவின் காலனித்துவ நாட்டுக்கான அத்தனை வேலைகளையும் இலங்கை செய்யத் தொடங்கியது. இப்போது மீண்டும், சீனாவுக்கு மிக நெருக்கமான ராஜபக்ஷ குடும்பத்தினரிடம் ஆட்சியதிகாரம் சென்றுள்ள நிலையில், சீனர்கள் என்றாலே 'ஐயோ ஆளை விடு' என்று எல்லோரும் குதிக்கால் பிடரியில் படுமளவுக்கு ஓடத்தொடங்கியுள்ளார்கள்.

அந்தளவுக்கு இலங்கையர்கள் சீனரைக் கண்டு வெறுத்து அல்லது பயந்து ஓடும் நிலைக்கு கொண்டு வந்தமைக்கான எல்லாப் புகழும் 'கொரோனா'வுக்குத்தான். இந்த வைரஸ் வந்தாலும் வந்தது, உலகெங்கும் சீனர்களைக் கண்டாலே மக்கள் மூக்கைப் பொத்திக் கொண்டு அலறுகிறார்கள். சுவாசத்தின் மூலமும் கொரோனா பரவும் என்பதால் முகக்கவசம் அணிந்தும் கூட பலர் சீனர்களை 'ஒதுக்கி வைக்கத் ' தொடங்கியுள்ளனர். அதே நிலை இலங்கையிலும் குறிப்பாகக் கொழும்பில் அதிகமாக நடக்கத் தொடங்கியுள்ளது. சிலநாள்களுக்கு முன்னர் சீனர் ஒருவர் பஸ் ஒன்றில் ஏறியதை அடுத்து அதில் இருந்த பயணிகள் அனைவரும் ஒட்டுமொத்தமாக அடுத்த தரிப்பிடத்தில் இறங்கிச் சென்றுள்ளனர்.

இதைவிட சீனாவில் கற்கைநெறி ஒன்றைப் பயிலச் சென்றிருந்த இலங்கை மாணவர்களை விசேட விமானம் மூலம் அழைத்து வந்து இப்போது அவர்களுக்கு தியத்தலாவையில் உள்ள இராணுவ மருத்துவமனையில் விசேட சிகிச்சைகள் வழங்கப்படத் தொடங்கியுள்ளன. சீன உல்லாசப் பயணிகள் இலங்கைக்குள் நுழைய உத்தியோகப் பற்றற்ற தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. கூடவே இங்கே ஏற்கனவே வந்து தங்கியுள்ள சீனர்கள் மீதான கண்காணிப்பும் இறுக்கப்பட்டிருப்பதோடு, அண்மைக் காலத்தில் இலங்கைக்குள் அவர்கள் வந்திருந்தால் உடனடியாக மருத்துவப்பரிசோதனைசெய்யுமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

இப்படி ஒருகாலத்தில் சிவப்புக் கம்பளம் விரிக்கப்பட்டு வரவேற்கப்பட்டு, இலங்கை அரசால் தலையில் வைத்துத் தூக்கிக் கொண்டாடப்பட்ட சீனர்களை, அதே அரசே இப்போது துரத்தியடிக்கும் நிலைக்கு 'கொரோனா' வைரஸ் கொண்டுவந்து விட்டுள்ளது. ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னர் முஸ்லிம்களை எப்படி அச்சத்துடன் சிங்கள மக்கள் பார்த்துப் பயந்தார்களோ, இப்போது அதே அச்சத்துடனேயே சீனர்களையும் பார்க்கத் தொடங்கியுள்ளனர்.

இலங்கையில் எப்பிடி இருந்த சீனர்களை இப்படி ஆக்குமளவுக்கு ஆப்பு வைத்து விட்டதே 'கொரோனா'!!

# கொரோனாவைத் தடுக்க சுகாதார அமைச்சு உதவி

**கொழும்பு, பெப்.2**

**நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் சிகிச்சை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சுகாதாரப் பணியாளர்கள் உள்ளிட்டவர்களின் பாதுகாப்புக்காக சுகாதார அமைச்சு 60 மில்லியன் ரூபா பெறுமதியான பாதுகாப்பு உபகரணங்களை வழங்கியுள்ளது என்று சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.**

கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் ஆலோசனைக்கு அமைய அமைக்கப்பட்டுள்ள தேசிய செயற்பாட்டுக் குழுக் கூட்டம் அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தலைமையில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த அரசு முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்களுக்கு உலக சுகாதார அமைப்பு ஆதரவு தெரிவித்துள்ளது.

உலக சுகாதார அமைப்பு கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான உபகரணங்களை வழங்குவதற்கும் முன்வந்துள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்காக மருத்துவ வழங்கல் பிரிவின் மூலம் ஐ.டி.எச். மருத்துவமனை உட்பட 12 மருத்துவமனைகளுக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன- என்றார். (எ)

## கலைமகள் வித்தியின் மெய்வன்மைப் போட்டி

வவுனியா, பெப். 2

வவுனியா பாவற்குளம் கலைமகள் வித்தியாலய வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி அதிபர் சிவாகரன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் முரளிதரன், ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் விஜயகாந்தன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (த-222)



## கொரோனாவைத் தடுக்க மேலைத்தேய, சுதேச சிகிச்சைகளை ஆராயவும்

### ஜனாதிபதி கோத்தா பணிப்பு

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டால், குணப்படுத்தக்கூடிய மேலைத்தேய மற்றும் சுதேச மருத்துவ முறைகள் பற்றி அந்தத் துறையிலுள்ள நிபுணர்களை அழைத்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ சுகாதார அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்

சுகாதார, வெளிவிவகார, சுற்றுலா மற்றும் உயர் கல்வித்துறை அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற விசேட கலந்துரையாடலின்போது ஜனாதிபதி இந்தப் பணிப்புரையை விடுத்தார்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடைய முதலாவது நோயாளி தற்போது நல்ல ஆரோக்கியமான நிலையில் உள்ளார். வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கு மருத்துவர்களால் முடிந்துள்ளது என்றும் ஜனாதிபதி பணித்தார் என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்தது. (த)

# தனியார் கல்வி நிறுவனங்களிலும் மாணவருக்கு விடுமுறை வேண்டும்

### பெற்றோர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.2

யாழ்ப்பாண மாநகர பிரதேசத்தில் உள்ள அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களும் வாரத்தில் ஒரு நாள் விடுமுறை வழங்க வேண்டும் என்று சில பெற்றோர்களால் கோரிக்கை விடுக்கப்ப ட்டுள்ளது.


தனியார் கல்வி நிறுவனங்கள் யாவும் வாரத்தில் விடுமுறை எதுவும் வழங்காமல் தொடர்ந்து செயற்படுவதால், மாணவர்கள் பாதிக்கபடுகின்றனர். எனவே மாணவர்களுக்குக் கல்வி நிறுவனங்கள் வாரத்தில் ஒரு நாளைக்கேனும், விடுமுறை வழங்க முன்வர வேண்டும் என்று அவர்கள் கோரியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்குட்பட்ட பகுதியில் உள்ள தனியார் கல்வி நிறுவ னங்கள் வாரத்தில் ஒரு நாள் மாணவர்களுக்கு விடுமுறை வழங்கி வருகின்றன. தனியார் கல்வி நிறுவனங்கள் வாரத்தில் ஒரு நாள் மாணவர்களுக்கு விடுமுறை விழங்க வேண்டும் என்று பிரதேச சபைகளின் கூட்டங்களில், தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறை வேற்றப்பட்டு வருகின்றது. இவ்வாறான நிலையில் யாழ் நகரிலும், தனியார் கல்வி நிலையங்கள் ஒரு நாள் விடுமுறை வழங்கவேண்டும் என்று பெற்றோர்கள் கோரியுள்ளனர்.

"ஏற்கனவே மாநகராட்சி மன்றத்தில் கூட்ட அமர்வின் போது இது போன்ற தீர்மானம் ஒன்று கொண்டுவரப்பட்டது. மாநகர பிரதேசத்தில் உள்ள சகல கல்வி தனியார் நிறுவ னங்களும் ஞாயிற்றுக்கிழமைகளில் கற்றல் செயற்பாடுகளை நிறுத்தி மாணவர்களுக்கு விடுமுறை வழங்க வேண்டும் என்று தீர்மானம் ஒன்று கொண்டு வரப்பட்டது. அந்தத் தீர்மானம் சபையில் நிறைவேற்றப்படவில்லை.

வாரத்தில் ஒரு நாள் மாணவர்களுக்கு விடுமுறை வழங்க வேண்டும். குறிப்பாக வெள்ளிக்கிழமைகளில் மாணவர்கள் பிற்பகலில் ஆலயங்களுக்குச் சென்று தரிசனம் செய்யவும் ஏனைய தேவைப்பாடுகளை மேற்கொள்வதற்கும் விடுமுறை வழங்குவதற்குரிய தீர்மானம் ஒன்றை அடுத்த சபை அமர்வில் கொண்டு வருவதற்கு எண்ணியிருக்கிறேன்" என்று இது தொடர்பில் யாழ்ப்பாண மாநகர துணை முதல்வர் ஈசன் தெரிவித்தார். (ஐ-17)

# பொ.ஜ.முன்னணி பெயரை மாற்றுவதற்கு இணக்கம்!



கொழும்பு, பெப்.2

**பொதுஜன ஐக்கிய முன்னணியின் பெயரை 'சிறிலங்கா நிதஹஸ் பொதுஜன சந்தான' என மாற்றுவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மாநாட்டில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. 'சிறிலங்கா நிதஹஸ் பொதுஜன சந்தான' கூட்டணியில் கதிரை சின்னத்தில் பொதுத் தேர்தலில் போட்டி யிடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

பொதுஜன ஐக்கிய முன்னணி என்ற கூட்டமைப்பை உருவாக்கியே 2010 ஆம் ஆண்டுக்கு முன்னர் நடைபெற்ற சில தேர்தல்களில் சுதந்திரக் கட்சி போட்டியிட்டிருந்தது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பையும் உருவாக்கி பல தேர்தல்களை சு.க. சந்தித்துள்ளது.

இந்த நிலையில், கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது பொதுஜன பெரமுனவுடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்பாட்டின் பிரகாரம் 'சிறிலங்கா நிதஹஸ் பொதுஜன சந்தான' என்ற கூட்டணியை உருவாக்கி பொதுத் தேர்தலை சந்திக்க சு.க. தீர்மானித்துள்ளது.

நேற்றுமுன்தினம் கொழும்பு டார்லி வீதியில் அமைந்துள்ள சு.கவின் தலைமையகத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் மாநாடு நடைபெற்றது. அதில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பங்காளிக் கட்சிகளாக இருந்த கட்சிகளின் தலைவர்களும் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். இம்மாநாட்டில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பெயரை 'ஸ்ரீலங்கா நிதஹஸ் பொதுஜன சந்தான' மாற்றியமைக்கவும் கதிரை சின்னத்தில் பொதுத் தேர்தலை சந்திக்கவும் அங்கீகாரம் வழங்கப்பட்டது. இந்தக் கூட்டணியின் பொதுச்செயலாளர் மற்றும் பொருளாளர் பதவிகளை பொதுஜன பெரமுனவுக்கு வழங்கவும் முடிவு செய்யப்பட்டதுடன், யாப்பிலும் பல திருத்தங்களை மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கப்பட்டது. விரைவில் பொதுஜன பெரமுனவுடன் பேச்சு நடத்தி உத்தியோகப்பூர்வமான அறிவிப்புகள் வெளியிடப்படுமென சு.கவின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். (எ-24)



# துரோகிகளை தூக்கியெறிந்து ரணிலின் கையை பற்றுங்கள்

## சஜித்திடம் அகிலவிராஜ் வேண்டுகோள்

கொழும்பு, பெப். 2

கட்சிக்குத் துரோகம் இழைக்கும் துரோகிகளைத் தூக்கியெறிந்துவிட்டு ரணிலின் கரங்களை இறுகப் பற்றிக்கொண்டு நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ள சஜித் பிரேமதாஸ முன்வரவேண்டும்."

இவ்வாறு வலியுறுத்தியுள்ளார், ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் அகிலவிராஜ் காரியவசம்.

அவர் மேலும் கூறியதாவது:

ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகத் தொடர்வதற்கும், சஜித் பிரேமதாஸ ஐக்கிய தேசிய முன்னணியின் புதிய தலைவராகவும் பிரதமர் வேட்பாளராகவும் செயற்படுவதற்கும் ஐ.தே.கவின் மத்திய செயற்குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கட்சியின் மத்திய செயற்குழு நேர்மையுடன் செயற்பட்டு கட்சியின் ஒற்றுமை கருதியே இந்த முடிவை எடுத்தது.

இந்தத் தீர்மானத்தை அவமதிக்கும் வகையில் சஜித் ஆதரவு அணியினர் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்கள்.


இப்படியான விசமத்தனமான கருத்துக்கள் கட்சிக்குள் பிளவு இருக்கின்றது என்பதைக் காட்டுகின்றது. இது கட்சியின் பலத்தைக் குறைவடையச் செய்யும். சஜித் பிரேமதாஸவை வைத்துக்கொண்டு சுயலாப அரசியல் தேட சிலர் முயற்சிக்கின்றனர். அதற்கு சஜித் பிரேமதாஸ ஒரு போதும் இடம்கொடுக்கக்கூடாது.

சஜித் இதை உணர்ந்து செயற்பட வேண்டும். கட்சிக்குத் துரோகம் இழைப்பவர்களை சஜித் கைகழுவிவிட வேண்டும். தூய்மையான ரணிலின் கரங்களை அவர் இறுகப் பற்றவேண்டும். அப்போதுதான் நாடாளுமன்றத் தேர்தலில் எமது கட்சி வெற்றி பெறும் - என்றார். (து-22)

# மட்டுவில் அ.த.கவின் செயற்பட்டு மகிழ்வோம்

கொடிகாமம்,பெப்.2

மட்டுவில் வடக்கு அ.த.க பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. அதிபர் சரவணை கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ சரவணபவன், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் சி.சிவதாசன், மருத்துவ கலாநிதி திருமதி லியோன் புஸ்பராணி, கௌரவ விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் செ.பிரதாப், மோகனதாஸ் சனசமூக நிலையத் தலைவர் சி.இரகுநாதன், சாவகச்சேரிப் பிரதேச சபை உறுப்பினர் சு.கேதீஸ்வரன், கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியத் தலைவர் இ கந்தசாமி எனப் பலர் கலந்துகொண்டனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வெற்றிக் கேடயங்களும் வழங்கப்பட்டன. (க-159,131)



# அங்கஜனுக்கு எதிராக நெடுந்தீவில் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 2

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் தன்னிச்சையாகச் செயற்படுகின்றார் என்று குற்றஞ்சாட்டிய நெடுந்தீவு மக்கள், அவருக்கு எதிராக நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நெடுந்தீவு பிரதேச செயலகம் முன்பாக இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

"புதிய அரசில் அமைச்சுப் பதவி எதுவும் வழங்கப்படாத நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன், ஒருங்கிணைப்புக் குழுத் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதன் பின்னர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரை விட தனக்கு அதிக அதிகாரம் உள்ளதாக நினைக்கிறார், செயற்படுகின்றார். மக்கள் விரும்பி தெரிவுசெய்த திட்டங்களைக்கூட தனது சுயநலத்துக்காக பிரதேச செயலக அதிகாரிகளுக்கு கடும் தொனியில் உத்தரவிட்டு மாற்றி அமைத்து எங்களைப் பழிவாங்குகின்றார்." என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

"கிராமத்துக்கு ஜனாதிபதி வழங்கிய 2 மில்லியன் ரூபா திட்டத்தை தமது பிரதேசத்தின் நலன்களை மையமாக கொண்டு பிரதேசத்தின் கிராம அலுவலர், பொருளாதார அலுவலர், சமுர்த்தி அலுவலர், கிராமத்தின் பொது அமைப்புகள், மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் முன்னிலையில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட முன்மொழிவுகளை ஒருங்கிணைப்பு குழு தலைவர் தனது சுயநல அரசியலுக்காக மாற்றி தேவையற்ற திட்டங்களை தமக்குத் திணிக்கின்றார். நாம் முன்மொழிந்த திட்டங்களே எமக்குத் தேவை" என்றும் போராட்டத்தில் அவர்கள் தெரிவித்தனர். (து)

# சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு

சாவகச்சேரி,பெப்.2

சாவகச்சேரி கலாசார மத்திய நிலைய அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் நான்காம் திகதி முற்பகல் 10 மணிக்கு வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மாள் கோவிலுக்கு அருகில் அமைந்துள்ள கலாசார மத்திய நிலையத்தில் நடைபெறும். நிகழ்வில் 2019 ஆம் ஆண்டு கலாசாரப் போட்டிகளில் தேசிய நிலையில் முதலிடம் பெற்ற வளவாளர்களுக்கு விருதுகள் வழங்கல், கலாசாரப் போட்டிகளில் மாகாண நிலையில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கல் மற்றும் வரணி நந்தியோர நாணல்கள் இலக்கிய மன்றத்தால் ஆடிப் பிறப்பை முன்னிட்டு நடாத்தப்பட்ட கலாசாரப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான மதிப்பளிப்பு போன்றவை நடைபெறும். நிகழ்வில் மீசாலை கிராமிய நிலையத்தின் ஆங்கிலம், பாடல் மற்றும் ஆங்கிலப் பேச்சு, கைதடி கிராமிய நிலையத்தின் நடனம், நுணாவில் கிராமிய நிலை யத்தின் வயலின் இசை உள்ளிட்ட கலை நிகழ்வுகளும் நடைபெறும். கலாசார மத்திய நிலைய அபிவிருத்திச் சங்கத்தலைவர். சி.மகிந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக தென்மராட்சி உதவிக் பிரதேச செயலர். திருமதி வி.கௌசிகன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி அபிவிருத்திக்குக் கழகத் தலைவர் பேராசிரியர் க.கந்தசாமி, கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சிக் கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் இ.க.ஆனந்தராசா, பனைதென்னை வள அபிவிருத்திச் சங்க தென்மராட்சிக் கொத்தணியின் பொது முகாமையாளர் க.அருட்செல்வம் ஆகியோர் கலந்து கொள்வர். (க-9)

# கிராமத்துக்கு ஒரு வீடு திட்டம் நேற்று ஆரம்பம்

**கொழும்பு, பெப்.2**

**நாட்டில் உள்ள 14 ஆயிரத்து 22 கிராம சேவகர் பிரிவுகளிலும் ஒவ்வொரு வீட்டை அமைக்கும் 'கிராமத்துக்கு ஒரு வீடு நாட்டுக்கு எதிர்காலம்' வேலைத்திட்டம் நேற்று முதலாம் திகதி நாடுமுழுவதும் ஆரம்பித்து வைக்கப்பட்டது என்று வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் இந்திக அநுருத்த தெரிவித்தார்.**

பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அனைத்து வீடுகளும் பயனாளிகளுக்கு இலவசமாகவே வழங்கப்படும். ஒவ்வொரு வீடும் ரூபா 6 இலட்சம் செலவில் அமைக்கப்படும். அதன் ஆரம்ப நிகழ்வு குருணாகலை மாவட்டத்தின் கிரிபாவ கிராமத்தில் சுபவேளையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளது. அன்று நாட்டில் உள்ள 160 தேர்தல் தொகுதியிலும் வீடுகளை அமைப்பதற்காக அடிக்கல் நடப்படும்.

புதிய அரசின் 'வளமான நாடு சுபீட்சமான நோக்கு' கொள்கையின் படி மிகவும் வறுமையில் உள்ளவர்களுக்கு வீடுகளை அமைக்கும் "கிராமத்துக்கு ஒரு வீடு நாட்டுக்கு எதிர்காலம்" வேலைத்திட்டம் நேற்று முதலாம் திகதி நாடு முழுவதும் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மூலம் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் இயங்கும் ஒன்றிணைந்த நிறுவனங்களின் உதவிகளும் அதற்காகப் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன. 14 ஆயிரத்து 22 வீடுகளையும் அமைப்பதற்கு ரூபா 8 ஆயிரத்து 400 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த அனைத்து வீடுகளும் இவ்வருட இறுதிக்குள் கட்டி முடிக்கப்படும்.



இதற்கான நிதியானது ஏற்கனவே தேசிய வீடமைப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படவுள்ளது. அரச செலவீனங்கள் குறைக்கப் பட்டுள்ளதால் சேமிக்கப்பட்டுள்ள நிதியும் பயன்படுத்தப்படும். ஒவ்வொரு வருடமும் இந்தத் திட்டத்தை முன்னெடுக்க அரசு தீர்மானித்துள்ளது. வீடுகளின் கூரைகள் ஓடுகள் மூலமே அமைக்கப்படும். தேசிய கைத்தொழிலை ஊக்குவிக்கும் முகமாக ஓடுகள் மூலம் வீட்டுக் கூரைகளை அமைக்குமாறு பிரதமர் பணித்துள்ளார்.

எதிர்காலத்தில் இத்திட்டம் நடுத்தர மக்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் வீடுகளை அமைத்துக்கொள்ள முடியாதவர்களுக்கும் கடன் முறைமையில் நடைமுறைப்படுத்தப்படும்.

கடந்த நான்கரை வருடத்தில் 7 ஆயிரம் வீடுகள் மாத்திரமே அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 5 ஆயிரத்துக்கும் குறைவான வீடுகளே முழுமைப்படுத்தப்பட்ட வீடுகளாகும். நாம் அமைக்கும் வீடுகள் முழுமைப்படுத்தப்பட்டவையாக இருக்கும். சுற்றுச்சூழலுக்கு பாதகமில்லாது அமைக்கப்படும் - என்றார். (எ)

## கிராமத்துக்கு ஒரு வீடு திட்டம் வலி. மேற்கில்

மூளாய்,பெப்.2

கிராமத்துக்கு ஒரு வீடு என்ற புதிய செயற்றிட்டத்தின் பூர்வாங்கப் பணிகள் வலிகாமம் மேற்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் இந்தச் செயற்றிட்டம் நாடு முழுவதும் முன்னெடுக்கப்படும். யாழ். மாவட்டத்தில் இந்தச் செயற்திட்டத்துக்கான ஆரம்ப ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அந்த வகையில் வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் இந்தத் திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன. அடுத்த கட்ட நடவடிக்கை மிக விரைவில் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (க-121)



## கலந்துரையாடல்

மன்னார்,பெப்.2

சுதந்திர தினத்தை முன்னிட்டு மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ள நிகழ்வுகள் தொடர்பான கலந்துரையாடல் மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக் கிழமை நடைபெற்றது.

இக் கூட்டத்தில் மன்னார் மாவட்ட செயலக மேலதிக செயலாளர் எஸ்.குணபாலன், ஐந்து பிரதேச செயலாளர்கள் மற்றும் மாவட்ட செயலக முக்கிய அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர். சுதந்திர தினம் அன்று மாவட்ட செயலகத்தில் காலை 8 மணிக்கு தேசியக் கீதத்துடன் சுதந்திரக் கொடி ஏற்றி வைக்கப்படும்.

இதைத் தொடர்ந்து நான்கு மதத் தலைவர்களின் ஆசி உரைகள் நடைபெறும். இதன் பின்னர் மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன் றாஸ் சுதந்திர தினம் தொடர்பான உரை நிகழ்த்துவார். அன்றைய தினம் சகல மாவட்ட செயலக அலுவலர்களும் சீருடையுடன் இவ் நிகழ்வில் கட்டாயம் பங்குப்பற்ற வேண்டும் எனவும் வலியுத்தப்பட்டது.

இதன்பின்னர் மரம் நடும் நிகழ்வும், சிரமதானமும் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு கிராம அலுவலகப் பிரிவுகளிலும் கிராம மக்களை ஒன்றுகூட்டி ஒரு வீட்டில் ஒரு மரக்கன்றாவது நடப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக சகல கிராம அலுவலகர்களுக்கும் பிரதேச செயலாளர்கள் அறிவுறுத்த வேண்டும் என்று மாவட்டச் செயலரால் வலியுறுத்தப்பட்டது. (ஐ-60)

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 16 . 01 . 1935 | 01 . 02 . 2020 |

### திருமதி சின்னம்மா இரத்தினசிங்கம்

கைதடி கிழக்கைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் சின்னம்மா நேற்று (01.02.2020) சனிக்கிழமை மாலை 6.00 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்துரை இரத்தினசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான குஞ்சாலி. பொன்னையா. செல்லம்மா மற்றும் பாஸ்கரன் தவமணி ஆகியோரின் அன்பு சகோதரியும் காலஞ்சென்ற சின்னத்துரை இராசரத்தினம், நேசம்மா, ஞானம்மா நல்லம்மா ஞானப்பரஞ்சோதி, சிவபாக்கியம் சிவஞானசுந்தரி மற்றும் பாஸ்கரன் ஆகியோரின் மைத்துனியும் இரவீந்திரகுமார், இராஜ்குமார். இரஞ்சிதா ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலாஜினி, ஜெயமேனகா (முன்பள்ளி ஆசிரியை) ஆகியோரின் மாமியும் தனுசன் (C.D.O) கயூரன் (லண்டன்), மிதுஷிகா (அவுஸ்திரேலியா).றஜிந்தன், கீர்த்தனன் (லண்டன்), சஞ்ஜீவன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் இராமச்சந்திரன் (அவுஸ்திரேலியா). இராமேஸ்வரன், இராதாம்பாள், குபேந்திரராசா காலஞ்சென்ற குபேந்திரராணி மற்றும் குபேந்திரமலர், பகீரதன், கலைவாணி ஆகியோரின் மாமியாரும் சிவாஜினி (கொழும்பு). சிவமதி (லண்டன்), சிவதாசன் (லண்டன்) காலஞ்சென்ற பிரபாகரன் மற்றும் கௌரி (பிரான்ஸ்) கரிகரன், கலாஜினி (சுவிஸ்) ஆகியோரின் பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(02.02.2020)** ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 3.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊத்தல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் :குடும்பத்தினர்**

**கைதடி கிழக்கு, கைதடி** **077 633 1559**

## விவசாயிகளை கவனியுங்கள்!

*மஸ்தான் எம்.பி.கோரிக்கை*



மன்னார்,பெப்.2

தமது ஜீவனோபாயத் தொழிலான விவசாயத்தையும், பண்ணைத் தொழிலையும் பல்வேறுபட்ட காரணிகளால் செய்ய முடியாமல் அல்லலுறும் மக்களின் அவல நிலையைப் போக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் சிறந்த விவசாயிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று விவசாயிகளுக்கு எதிராக வறட்சி, நிர்ணய விலையின்மை, சந்தை வாய்ப்புக் குறைவு உள்ளிட்ட பிரச்சினைகள் பூதாகரமாக எழுந்துள்ளன. அதேவேளை மேய்ச்சல் தரையின்மை, கால்நடைகளுக்குக் குடி தண்ணீர்ப் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகளை பண்ணையாளர்கள் எதிர்நோக்குகின்றனர்.

விவசாயிகளுக்கு ஊக்குவிப்புக்களைச் செய்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதன் மூலம், எமது தாய்நாட்டில் அபிவிருத்தி அதிகரிப்பது மாத்திரமன்றி, விவசாயத்தில் தன்னிறைவு அடைந்த நாடாக எம்மை வளர்த்து விட முடியும். விவசாயத்துக்குப் பெயர் போன மாதோட்டப் பூமி மன்னார் மாவட்டத்தில் தான் அமைந்துள்ளது. -என்றார். (க)

## திருநெல்வேலி தேனு களஞ்சியத்துக்கு

## வேலைக்கு ஆள்கள் தேவை

- பொதி கட்டுநர்
- வயது 18-50 வரை

நேர்முகத்தேர்வு **03.02.2020** திங்கட்கிழமை

தொடர்பு:- 077 213 1448

## நல்லூரான் திருமண சேவை

**இலங்கையில் வரன் தேடும் மணமகன் விபரங்கள்**

- கனடா 28 வயது இந்து (V) 5இல் செவ்வாய்
- பிரான்ஸ் 33 வயது இந்து (V) 11இல் செவ்வாய்
- கனடா பொறியியலாளர் 33 வயது இந்து (V) 2இல் சூரி + செவ்
- பிரான்ஸ் 36 வயது இந்து (V) 3இல் செவ்வாய்
- லண்டன் பொறியியலாளர் 36 வயது இந்து (V) 9இல் செவ்வாய்
- பிரான்ஸ் 36 வயது இந்து (K) 2இல் செவ்வாய்
- பிரான்ஸ் 38 வயது இந்து (V) 7இல் செவ்வாய்
- அமெரிக்கா 38 வயது இந்து (V) 1இல் செவ்வாய் - விவாகரத்து
- அமெரிக்கா 40 வயது இந்து (V) 9இல் செவ்வாய்
- அவுஸ்ரேலியா 41 வயது இந்து (N) 5இல் செவ்வாய்
- லண்டன் 44 வயது இந்து (V) 12இல் செவ்வாய் - விவாகரத்து

**பதிவுக்கட்டணம் இலவசம்**

**076 415 6365**

## மரண அறிவித்தல்

### செல்வி மகாதேவன் சுகேந்தினி

(முன்பள்ளி ஆசிரியர் SOS சிறுவர் கிராமம்)



வாகீஸ்வரி வீதி கோண்டாவில் வடக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி மகாதேவன் சுகேந்தினி நேற்று **(01.02.2020)** சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் சரோசினிதேவி தம்பதிகளின் அன்பு மகளும், சாளினி (ஆய்வுகூட ஊழியர், யாழ் போதனா வைத்திய சாலை), விஜிதரன்(ஆசிரியர்- யாழ்/ தம்பாட்டி அ.த.க வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான கந்தையா- சிவக்கொழுந்து, கிருஷ்ணன் - சிவக்கொழுந்து ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தர்மலிங்கம் - பராசக்தி, பதி- நகுலேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சபா - பாமா, சந்திரன் - ஜெயந்தி, ஜெயகுமார்- கலைச்செல்வி, சின்னராசா- ஈஸ்வரி ஆகியோரின் பெறாமகளும், காலஞ்சென்றவர்களான பேரின்பநாயகம் மல்லிகாதேவி மற்றும் வனராஜா- வசந்தா, குமாரசாமி- அன்னலட்சுமி, தவராசா- செல்வரஞ்சினி, சிவகுமார்- சரோசாதேவி ஆகியோரின் மருமகளும், கபில்தேவ் (ஊழியர், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்) அவர்களின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று **(02.02.2020)** ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் **2.00** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு, கோட்டைக்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வாகீஸ்வரி வீதி,**
**கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

தொடர்பு:- 077 621 5328

## மரண அறிவித்தல்

### திருமதி
### இராசம்மா தருமபாலகிருஷ்ணன்




ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் தும்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா தருமபால கிருஷ்ணன் அவர்கள் நேற்று முன்தினம் (31.01.2020) வெள்ளிக் கிழமை இறைபதம் அடைந் துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், மற்றும் சுப்பிரமணியம் தருமபாலகிருஷ்ணனின் அன்பு மனைவியும், த.இராசமோகன் (எலக்றிசியன் 1ம் கட்டை), யோ.சந்திரா (தும்பளை), த.விக்கினேஸ்வரன் (ஐங்கரா களஞ்சியம், பிரதான வீதி, பருத்தித்துறை), இ.சித்திரா (ஒட்டுசுட்டான்), த.மனோகரன் (லண்டன்), ச.தாட்சாயினி (ஜேர்மனி), த.ரகுராஜன் (நுவரெலியா), த.கண்ணன் (Frindly Plastic centre கொழும்பு), காலஞ்சென்ற த.முருகையன் மற்றும் த.பராபரன் (சுவிஸ்), த.குருபரன் (பிரதி அதிபர் மன்/கௌரியம்பாள் அ.த.க.பாடசாலை திருக்கேதீச்சரம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இ.லலிதாம்பிகை, காலஞ்சென்ற சி.யோகநாதன் மற்றும் வி.பிரபாதேவி, மு.இந்திரகுமார் (ஓய்வு பெற்ற அலுவலகர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை ), ம.சுகிர்தாம்பிகை (லண்டன்), த.சந்திரகுமார் (ஜேர்மனி), ர.சுகந்தி (நுவரெலியா), க. தமிழேந்தி (ஆசிரியை கொழும்பு), மு.சசிகலா (தும்பளை), ப.நித்தியவதனா (தும்பளை), கு.இந்து (நுபால திபர் மன்னார்), ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.02.2020) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

### வடக்கு...

டமைப்பை அழைத்து இருந்தார் என்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் முறையிடப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்தவுக்கும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட்டு உள்ள சுமார் 25 சிறிய கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் அலரி மாளிகையில் கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்ற சந்திப்பின்பேதே வடக்கு, கிழக்கு மாகாணங்களின் ஆளுநர்கள் தொடர்பாக முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன.

ஒரு இலட்சம் இளையோருக்கான அரச தொழில் துறை வேலை வாய்ப்பில் ஒவ்வொரு சிறிய கட்சி மூலமாகவும் தலா 100 பேரை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், குறைந்த பட்சம் 50 பேரையாவது இவ்விதம் நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரினார்கள். அதற்குப் பதில் அளித்த மஹிந்த ராஜபக்ஷ அவ்வளவு பெரிய தொகையை ஒதுக்கி தருவது சாத்தியம் அல்ல, ஆனால் தலா 25 பேரை இந்தச் சிறிய கட்சிகள் மூலம் நியமிக்க நடவடிக்கை எடுப்பார் என்று உறுதி வழங்கினார்.

அமைச்சரவைக் கூட்டங்களில் இந்தச் சிறிய கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தி தர வேண்டும் என்கிற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதற்குப் பதில் அளித்த மஹிந்த ராஜபக்ஷ அதை அவர்கள் விரும்ப மாட்டார்கள், இருப்பினும் மாதத்தின் கடைசி அமைச்சரவை கூட்டத்தில் பங்கேற்க வைக்க அவர்களுடன் பேசி முயற்சி எடுப்பார் என்று தெரிவித்தார். அதே போல மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டங்களில் சிறிய கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்பதற்கும் வழி ஏற்படுத்தி தர வேண்டும் என்றும் கோரப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் செயற்பாட்டாளர்களாக இருந்தவர்களுக்கு பதவிகளை வழங்கி உள்ளார் என்றும் இது தொடர்பாக அந்த மாவட்டத்தைச் சேர்ந்த சிறிய கட்சிகளின் பிரதிநிதிகளுடன் ஆலோசித்துக்கூட இருக்கவில்லை என்றும் பிரதமருக்கு முறையிடப்பட்டது. அவ்வாறு நடந்திருக்க வாய்ப்பில்லை என்று புருவங்களை உயர்த்தியபடி தெரிவித்த மஹிந்த ராஜபக்ஷ இதை விசாரிப்பதாக பதில் வழங்கினார். (ஒ.5)

## சக்தி டிரேடர்ஸ்

கிளிநொச்சியில் யுனிபொண்ட் UniBond நிறுவனத்தின் ஏகமுகவர் விற்பனை நிலையம்

### திறப்பு விழா

05.02.2020

தரமான தரை ஓடு (மாபிள்) ஒட்டும்பசையின் ஏகவிநியோகஸ்தர்கள் நிலையத்தின் திறப்புவிழா 2020.02.05ம் திகதி புதன்கிழமை அன்று காலை 9: 00 மணியளவில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் அன்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 129, கண்டிவீதி, கரடிபோக்கு, கிளிநொச்சி
Tel: 077 185 3496, 077 067 5788

## துயர் பகிர்தலும் நன்றி நவில்தலும்

### நீரின் புளோறிற் அமலதாசன்

இவரது மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் இவர் கடந்த 21.04.2019 உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடைபெற்ற குண்டு வெடிப்புச்சந்தர்ப்பத்தில் காயமுற்று கொழும்பு வைத்தியசாலையில் கடந்த 9 மாதங்களாக இருந்தபோது இவரை பராமரித்த மருத்துவர்கள், தாதியர்கள், கரித்தாஸ் - தேசிய நிறுவனத்தினர்க்கும் கொழும்பு - கரித்தாஸ் ( செற்சறண) நிறுவனத்திற்கும் மற்றும் இவருக்கு சகல விதத்திலும் சிரமம் பாராது உதவிபுரிந்த அருட்தந்தையர், அருட்சகோதரிகளுக்கும் ஏனைய வழியில் உதவிகள் புரிந்த அனைவருக்கும் யாழ்ப்பாணம் கரித்தாஸ் - கியூடெக் குடும்பத்தின் சார்பாக எமது நன்றிகளைத் தெரிவித்து நிற்பதுடன் இவரது ஆன்ம இளைப்பாற்றிற்காக இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

**யாழ் ஆயர், இயக்குநர், பணியாளர்கள்**
**கரித்தாஸ் கியூடெக், யாழ்ப்பாணம்**

### சீனாவிலிருந்து...

ருந்து விமான நிலையத்துக்கு விசேட பேருந்தில் வந்த மாணவர்கள், பரிசோதனைகளின் பின்னரே விமானத்துக்குள் அனுமதிக்கப்பட்டனர். புத்தாடையும் வழங்கப்பட்டிருந்தது. மாணவர்களை அழைத்து வருவதற்காகச் சென்ற குழுவினருக்கும் விசேட பயிற்சி வழங்கப்பட்டிருந்தது. விமானத்துக்குள் பாதுகாப்பு உடையையே அவர்கள் அணிந்திருந்தனர். பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் நேற்று காலை விமானம் மத்தள விமான நிலையம் வந்தடைந்தது.

அங்கு அவர்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டனர். கொண்டுவரப்பட்ட அனைத்துப் பொருள்களும் சோதனைக்குட்படுத்தப்பட்டன. விமானமும் சுத்தப்படுத்தப் பட்டது. முறையான பாதுகாப்பு முன்னேற்பாடுகள் செய்யப்பட்ட பின்னர் விசேட பேருந்தில் மாணவர்கள் தியத்தலாவையிலுள்ள இராணுவ பயிற்சி முகாமுக்கு அனுப்பட்டனர்.

அனைத்து வசதிகளுடன் கூடிய இரண்டு புதிய கட்டடங்கள் தியத்தலாவையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. தனிமைப்படுத்தப்பட்ட அறைகளில் வந்தவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இலவச வைபை உட்பட அனைத்துவித வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டுள்ளன. அவர்கள் 14 நாள்கள் மருத்துவ கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் வீடுகளுக்கு திருப்பி அனுப்படவுள்ளனர்.

இலங்கை இராணுவத்தின் தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர்கள் மாணவர்களின் உடல்நிலை தொடர்பில் ஆராய்ந்துவருகின்றனர். சுகாதார அமைச்சின் அதிகாரிகளும் சென்றுள்ளனர். வூஹான் நகரிலிருந்து மாணவர்களை தனது நாட்டுக்கு அழைத்துச் சென்ற நான்காவது நாடாக இலங்கை உள்ளது. (ஒ.5,22,44)

### புதிய...

படுகிறது.1992ஆம் ஆண்டு இந்திய வெளிநாட்டு சேவையில் இணைந்த கோபால் பக்லே இலங்கைக்கு வரும் நிலையில் இலங்கையில் தூதுவராக இருந்த தரன்ஜித் சிங் அமெரிக்காவுக்கான தூதுவராக நியமனம் பெற்றுள்ளார்.

பக்லே தற்போது இந்தியப் பிரதமர் அலுவலகத்தில் இணைச் செயலாளராகப் பணியாற்றுகிறார். (ஒ.5)

## காணி விற்பனைக்கு

பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, உடையார் ஒழுங்கையில் இரண்டு பரப்பு காணி விற்பனைக்கு

தொடர்புகளுக்கு:- 077 300 2075

## உழவு இயந்திரம் விற்பனைக்கு

RF - தொடர் இலக்கம் உடைய TAFE 450 விற்பனைக்குண்டு

077 833 2054, 076 381 9080

## வீடு நாள் வாடகைக்கு

வெளிநாட்டிலிருந்து/ வெளி இடங்களி லிருந்து குடும்பமாக யாழ்ப்பாணம் வருவோர் தங்குவதற்கு ஏற்ற சகல வசதி களையும் கொண்ட வீடு நாள் வாடகைக்கு உண்டு.

**077 6333000**



## Canada Australia France இல்

குடும்பத்துடன் குடியேறுவதற்கு

**சட்டரீதியான ஆலோசனைகள்**
**100% விசா உத்தரவாதம்**

- 18 வருட சேவை
- அரசாங்க / Embassy சட்டத்திட்டங்களுக்கமைவாக ஆலோசனைகள் வழங்கப்படும்.

Student விசா / Sponsor விசா / Tourist விசா போன்றவைகளும் Embassy சட்டதிட்டங்களுக்கு அமைவாக விண்ணப்பிக்க ஏற்பாடு செய்துதரப்படும்.

Company Registration No. PV 00210651
வேறு கிளைகள் கிடையாது

அரச அங்கீகாரம் பெற்ற Education Consultant in COLOMBO

**NEW WAY SKYLINE INTERNATIONAL (PVT) LTD** ☎ 077 33 47 332
22 Srimahabodhi Road, Dehiwala

# கண்ணீர் அஞ்சலி



## தங்கராஜா அன்பானந்தன்

**Dean of academic affairs - BLC Campus**

அன்பைச் சுரக்கும் இதயத்தை
நோய் கொண்டு போனதென்ன?
காலன் அவரைக் கவர்ந்தபின்பு
கதறித் துடித்து ஆவதென்ன?
இனிய வார்த்தைகளும்
கனிவான குணமும் கொண்டவரே!
இனியவரே! நீர் திரும்பிட
இதயம் திறந்து வைத்து
இறைவனைத் தொழுகின்றோம்

BLC
CAMPUS

### சுரேஷ் ூக்கு...

லர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரியவுக்கு அறிவித்துள்ளார்.

தமிழர் ஐக்கிய முன்னணி என்ற கட்சியின் பெயரை தமிழிலும் சிங்களத்திலும் உச்சரிக்கும்போது எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆங்கிலத்தில் உச்சரிக்கும் போதும் பிரச்சினையில்லை. ஆனால் ஆங்கிலத்தில் அந்தக் கட்சியின் பெயரைச் சுருக்கி உச்சரித்தால் ரி.யூ.எவ். என்று வரும். இந்த உச்சரிப்பு, தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆரம்பப் பெயர் உச்சரிப்பாகக் காணப்படுவதால், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் பெயர் மாற்றம் தொடர்பில் ஆட்சேபனை இருந்தால் இந்த மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் தெரிவிக்குமாறு கோரப்பட்டது. அதற்கே ஆனந்தசங்கரி தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளருக்கு மேற்கண்டவாறு கடிதம் அனுப்பியுள்ளார். (ஒ.5.105)

### விபத்தில்...

வீரசிங்கம் கோபாலசிங்கம் (வயது-67) என்பவரே இவ்வாறு சாவடைந்தவராவார்.

இவர் கடந்த 31 ஆம் திகதி கச்சாய் சந்தியில் இருந்து கெற்பேலியை நோக்கி சைக்கிளில் சென்று கொண்டிருந்தார். அப்போதும் பின்பக்கமாக மோட்டார் சைக்கிளில் வந்தவர் வயோதிபரை மோதித் தள்ளினார். இதனால் சைக்கிளில் சென்ற வயோதிபர் மயங்கி வீழ்ந்தார். பின்னர் அவர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று சனிக்கிழமை சாவடைந்துள்ளார். மரண விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிரேமகுமார் நேற்று மேற்கொண்டார். (ந-26)

### விமான...

வாரந்தோறும் திங்கள், புதன், சனிக் கிழமைகளில் விமான சேவைகள் இடம்பெறவுள்ளன.

கொழும்பிலிருந்து காலை 7.30 மணிக்கு புறப்படும் விமானம் யாழ்ப்பாணத்துக்கு காலை 8.20 மணிக்கு வந்தடையும். யாழ்ப்பாணத்திலிருந்து காலை 9.30 மணிக்கு புறப்படும் விமானம் கொழும்பை காலை 10.20 மணிக்கு சென்றடையும். ஒரு வழி பயணச்சீட்டு கட்டணமாக 7 ஆயிரத்து 500 ரூபா அறிவிடப்படவுள்ளது. பயணி ஒருவர் 7 கிலோ கிராம் பொதியைக் கொண்டு செல்ல முடியும். 20 கிலோ வரையும் மேலதிக பணத்தைச் செலுத்தி பொதிகளைக் கொண்டு செல்ல முடியும். (ஒ.5)

### மயங்கி...

வம் உரும்பிராய் வடக்கில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

அந்தப் பகுதியைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான கதிரேசு சிறிதரன் (வயது -55) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் நேற்று முன் தினம் காலை 6 மணியளவில் தோட்டத்துக்கு வேலை செய்யச் சென்றுள்ளார். இதன் போதே அவர் திடீரென நிலத்தில் வீழ்ந்து மயங்கியுள்ளார். உடனடியாக அவரை பக்கத்து வீட்டுக்காரர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்த்தனர். எனினும் சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று முன்தினம் இரவு அவர் உயிரிழந்துள்ளார். மரண விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிரேம்குமார் நேற்று மேற்கொண்டார். (ந-26)

# மரண அறிவித்தல்

## தங்கராஜா அன்பானந்தன்

(முன்னாள் பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், நிறைவேற்று அதிகாரி,பல்கலைக்கழக கல்லூரி, பொதுமுகாமையாளர் - உதயன் பத்திரிகை , Dean of academic affairs - BLC Campus, செயலாளர்-லயன்ஸ் கழகம், யாழ்ப்பாணம்)



ஓட்டுமடம் வீதி, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், 16/1, ஐயனார் கோயில் வீதி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராஜா அன்பானந்தன் கடந்த (30.01.2020) வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.


அன்னார் காலஞ்சென்ற தங்கராசா மற்றும் நாகரெத்தினம் தம்பதிகளின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான இலட்சுமணன் - நித்தியலெட்சுமி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், பற்குணதேவியின் (உருத்திரா) அன்புக் கணவரும், குகனேஸ்வரி, உதயேஸ்வரி (பிரான்ஸ்), சுரேந்திரன் (வவுனியா), தயாபரேஸ்வரி (பிரான்ஸ்) சத்தியசீலன் (நியூசிலாந்து), ஜெகதீஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சம்யுதா (லண்டன்), சாம்பவி (பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாக அலுவலகம், வடமாகாணம்), சுவேநிதன் ( CDB - Bank), பவித்ரா (மாணவி, இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சுரேஸ் (லண்டன்), திவ்யநேஷன் (கல்வி அமைச்சு, வடமாகாணம்) ஆகியோரின் மாமனாரும், சந்தோஷ் (லண்டன்), யதுநயனன் (சென். ஜோன்ஸ் கல்லூரி), சுரபி (லண்டன்), சுபஸ்திகா ஆகியோரின் பாசமிகு பேரனும்,ஆனந்ததேவி (சந்திரா), ஓங்காரமூர்த்தி (முன்னாள் அதிபர், யாழ்.மத்திய கல்லூரி), புவனேந்திரன் (சுவிஸ்), விஜயேந்திரன் (கொக்குவில்), காலஞ்சென்ற செல்வராசா (நயினாதீவு), சண்முகம் (பிரான்ஸ்), ஜெகதீஸ்வரி (வவுனியா), குணபாலன் (பிரான்ஸ்), ஜீவான்ஜனா (நியூசிலாந்து), இந்திரஜித் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், குலசிங்கம் (கொழும்பு), சரஸ்வதி (கொழும்பு), சத்தியபாமா (சுவிஸ்), மாலினி(கொக்குவில்) ஆகியோரின் சகலனும், துசிதா (வவுனியா), இந்துஷா (வவுனியா), திவ்யா (வவுனியா), லதுஷன் (நியூசிலாந்து), சுவீஸ்திகா (நியூசிலாந்து), மிதுர்சிகா (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், கிருசாந்தி (லண்டன்), அனுசாந்தி (நியூசிலாந்து) ஆகியோரின் சித்தப்பாவும், காலஞ்சென்ற நாகேஸ்வரன், நந்தாஜினி (கொழும்பு), சயனி, தட்ஷா, விஷ்ணு, திவ்யா, பரிசியா, திவாகர், சுவஸ்திகா, நேத்ரா, ரிஷி (பிரான்ஸ்), சிவலக்ஷ்மன் (கொழும்பு), தாட்சாயினி, லக்ஷாயினி (சுவிஸ்), துளசிதா (ஆசிரியை - உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கதுசன், டிலக்சன், சதுர்ஜன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற இராஜேந்திரம் மற்றும் ஞானரஞ்சிதம் (கொக்குவில்), சுந்தரேஸ்வரர், தயாளகுணவதி (கட்டப்பிராய்) ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

021 222 7133, 077 736 3356, 077 147 1221


தகவல் : குடும்பத்தினர்

சூரியகாந்தி
உதயன்
02.02.2020
ஞாயிறு சிறப்பம்சம்



ஜனநாயகம் பெற்றெடுமத்த சர்வாதிகார குழந்தை

12



புதிய வைரஸ்!

11

# மரணப்பிடியில் மணல்



கதிர்

‘ஈழம்’ ஓர் அழகிய தேசம். சலசலத்து ஓடும் அருவிகள், பச்சை வண்ணத்தைக் கவிழ்த்துக் கொட்டியதுபோல் எங்கும் பச்சை மயம். தமிழர்கள் போலவே வீராப்பாய் நிமிர்ந்து நிற்கும் பனைமரங்கள். வானளாவ வளர்ந்து பரந்த பசுமை போர்த்திய காடு. தமிழர்களுக்கு இருக்கும் பிரச்சினைகள் போலவே ஓய்ந்திடாத ஓயாத அலைகள். இப்படி வாய் வலிக்கச் சொல்லிக்கொண்டே போகலாம் எங்கள் தேசத்தின் அழகை. ‘எங்கே அந்த அழகிய தேசம் என்று கேட்டுவிடாதீர்கள்...’ இப்போது அது இல்லை. ‘இயற்கைஎனதுநண்பன்’ என்று இருந்த எங்கள் அண்ணன்களின் காலத்தில் மேற்சொன்ன மிடுக்குடனும், மிளிர் தன்மையுடனும் ஈழம் இருந்தது.

**மண்ணுக்கான போராட்டங்கள்**

அன்று ஓர் அடி மண்ணுக்கும் உயிரை விலையாகக் கொடுத்துப் போராடியது எங்கள் இனம். இன்று வீதியில் நின்று அதே மண்ணுக்காகப் போராடுகின்றது. ஆனால் இந்த இரண்டாம் போராட்டம் எம் சமூகத்தவர்களால் எமக்கு எதிராகவே மேற்கொள்ளப்படுவது துயரத்திலும் பெரும் துயரம். வகைதொகை இல்லாமல் வடக்கின் மணல் இன்று அகழப்படுகின்றது. பல நூறு டிப்பர்களில் எமது மணல் தென்னிலங்கை நோக்கிக் கடத்திச் செல்லப்படுகின்றது. எம் குரல்கள் வழக்கம்போல் செவிசாய்க்கப்படவில்லை. குறைந்த பட்சம் அரச இயந்திரத்தின் காதிலும் விழுவதாய் இல்லை. அரச ஆசீர்வாதத்துடன் எல்லாம் நிகழும்போது அதன் காது செவிடாய் இருப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லைதான்.



கள்ளமண் வியாபாரிகள் பெருகப்பெருக விளைநிலங்கள் அனைத்தும் உவர் நிலங்களாக மாறிக்கொண்டே வருகின்றன. நன்னீர் சுரந்த கிணறுகள் உவர் நீராய் மாறிவிட்டன. அராலியில் கூட நன்னீர் இருந்தது. இன்று மானிப்பாயிலும் உவர் நீர் சுரக்கிறது. மணல் மேடாய் இருந்த நிலங்கள் எல்லாம் குண்டும் குழியுமாக ஆக்கப்பட்டுள்ளன. ஆற்று மணல் அள்ளியவர்கள் இப்போது அடுப்பங்கரை வரையும் வந்தாயிற்று. பெரும் மணல் திட்டுக்களாய் இருந்த பல இடங்களில் மன்னர்கள் கட்டிய குளங்கள் போல் மண் திருடர்கள் வெட்டிய 'படுகுழிகள்'.

**இந்த மண் திருடர்கள் யார்? வேற்றுக் கிரகத்தில் இருந்து வந்தவர்களா? இல்லை வேற்று நாட்டிலிருந்து வந்தவர்களா? கிடையாது. அதே மாவட்டத்தில் அதே பிரதேசத்தில் ஏன் அதே ஊரைச் சேர்ந்தவர்களை வைத்தே மண் ஏற்றப்படுகிறது.**

**யாரோடு நோவோம்**

இந்த மண் திருடர்கள் யார்? வேற்றுக் கிரகத்தில் இருந்து வந்தவர்களா? இல்லை வேற்று நாட்டிலிருந்து வந்தவர்களா? கிடையாது. அதே மாவட்டத்தில் அதே பிரதேசத்தில் ஏன் அதே ஊரைச் சேர்ந்தவர்களை வைத்தே மண் ஏற்றப்படுகிறது. 'சாதாரண நாள் கூலிக்கு 1,500 ரூபா கிடைக்கும்போது கள்ளமண் ஏற்றச் சென்றால் 3,500 ரூபா வரை உழைக்கலாம்' என்பதே அநேகமான நாள் கூலிகளின் எண்ணவோட்டமாக உள்ளது. உடனடிப் பாதிப்புக்கள், எதிர்காலப் பாதிப்புகள் பற்றியெல்லாம் தெரியாத ஏழை தன் வீட்டில் அடுப்பெரிய தன் வீட்டுக்கே தீவைக்கின்றேன் என்று தெரியாமலேயே இந்த மண் கடத்தலுக்குத் துணை போகிறான்.

புத்திசாலித் திருடர்களோ திருட்டைக்கூட 'சட்டப்படி' செய்கிறார்கள். திருட்டை சட்டப்படி செய்யலாமா? என்று குழப்பம் அடையாதீர்கள். 'நிதியம்' என்று பெயரை வைத்துப் பதிவுசெய்துவிட்டால் போதும் திருட்டைக்கூட சட்டப்படி செய்யலாம். பல வெள்ளை வேட்டிக்காரர்கள் அப்படித்தான் கடந்த காலங்களில் செய்தார்கள். இனியும்செய்யலாம். சிலவேளைகளில் பொலிஸாரையும் அழைத்து 'மண் திருட்டை தடுப்பது எப்படி' என்று கூட்டம் நடத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அவ்வளவு அதி புத்திசாலிகள் அவர்கள்.

மண்திருட்டை தடுக்க பொலிஸ் தவறுகிறதா என்ற வினா எல்லோரிடமும் உண்டு. இது தொடர்பாக பொலிஸ் அதிகாரி ஒருவரை தொடர்புகொண்டு கேட்டபோது, 'ஆளணிப் பற்றாக்குறையே பிரதான காரணம். வெவ்வேறு வேலைகளுக்குச் சென்று மாலை பொலிஸ் நிலையம் திரும்பும் உத்தியோகத்தர்களை இரவு மண் ஏற்றுகிறார்கள் வாருங்கள் என்றால் என்ன செய்வது? போக்குவரத்து வசதிகள் இல்லை. உத்தியோகத்தரே பெற்றோல் அடித்துப் போகவேண்டிய நிலை. எத்தனை நாளைக்கு இப்படி செய்ய முடியும். தேவையான அளவு உத்தியோகத்தர்களையும் வாகன வசதிகளையும் செய்து கொடுத்தாலே போதுமானது. சில பொலிஸார் மணல் ஏற்றுபவர்களுடன் தொடர்பிருக்கலாம். எல்லோரும் அப்படி இல்லை. ஆளணியை அதிகரித்து குறிப்பிட்டவர்களுக்கு மணல் ஏற்றுவதை தடுப்பதே வேலை என பொறுப்பைக் கொடுத்தால் மணல் கடத்தலைத் தடுக்க முடியாதா? மணல் கடத்தலுக்காக இலஞ்சம் வாங்க முடியுமா? என்ற கேள்விகளுடன் பதில் தருகின்றார் அந்த அதிகாரி.

**சட்டங்கள் போதுமானவையா?**


வெறும் சட்டங்களை மட்டுமே ஏற்படுத்தி, மணல் கொள்ளையை தடுத்துவிட முடியுமா? என்று கேட்டால் 'நிச்சயமாக இல்லை' என்பதே பதில். நாளாந்தம் அபிவிருத்தி கண்டுவரும் தற்போதைய நிலையில் கட்டுமானங்களும் அதிகரித்தே செல்கின்றன. இந்த நிலையில் மணலுக்கான தேவையும், விலையும் அதிகரித்து செல்வது தவிர்க்க முடியாத ஒன்று. அரசு முறையான மண் அகழ்வு கொள்கையை வகுத்து தெரிவுசெய்யப்பட்ட இடங்களில் முறையான கண்காணிப்போடு மண் அகழ்தலை கண்காணிக்காது விட்டால் மணல் அழிவைத் தடுக்க முடியாது. நிலத்தடி நீர் பாதிக்கப்படுவதாகவும் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதாகவும் கூக்குரலிட்டுச் சட்டங்களை இயற்றினால் மட்டும் போதாது. முறையாக நடைமுறைப்படுத்த சரியான திட்டங்கள் இல்லையேல் விழலுக்கு இறைத்த நீராகிப் போகும் இந்த கூப்பாடுகளும் சட்டங்களும்.

**வெறும் சட்டங்களை மட்டுமே ஏற்படுத்தி, மணல் கொள்ளையை தடுத்துவிட முடியுமா? என்று கேட்டால் 'நிச்சயமாக இல்லை' என்பதே பதில். நாளாந்தம் அபிவிருத்தி கண்டுவரும் தற்போதைய நிலையில் கட்டுமானங்களும் அதிகரித்தே செல்கின்றன. இந்த நிலையில் மணலுக்கான தேவையும், விலையும் அதிகரித்துச் செல்வது தவிர்க்க முடியாத ஒன்று.**

மண் கடத்தலோடு தொடர்புபட்டு எத்தனை உயிர்கள் பறிபோய்விட்டன. 2006ஆம் ஆண்டு மண்கடத்தலோடு தொடர்புபட்டதாய் மூன்று இளைஞர்கள் அரியாலையில் குத்தியும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்டார்கள், பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்கள். மண் கடத்தலுக்கு எதிராக செயற்பட்டு வந்த குடத்தனையை சேர்ந்த ஒருவர் திருமணமாகி மூன்று மாதங்கள்கூட ஆகாத நிலையில் வீட்டில் வைத்துமனைவி, தாய்கண்முன்னேசுட்டுக்கொல்லப்பட்ட துயரங்களும் இந்த மண்ணில் நடந்தவைதான்.

அண்மையில் மண்கடத்தலுக்கு எதிராக சாட்டியிலும், தீவகத்திலும் மக்கள் ஒன்றாகி எதிர்ப்பை வெளியிட்டதும் கடத்தலை தடுத்து நிறுத்தியதும் மன மகிழ்வைத் தருவதாக இருந்தாலும் மக்கள் வன்முறையை பயன்படுத்தியே தடுத்து நிறுத்தினர். இது அவ்வளவு ஆரோக்கியமான விடயம் அல்ல. சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியவர்கள் மௌனமாக இருக்கும்போது மக்கள் தங்கள் இருப்பையும் தம் சந்ததியின் இருப்பையும் தக்கவைத்துக் கொள்வதற்காக மாற்றுவழி ஏதுமின்றி வன்முறைகளைக் கையாள்வது தவிர்க்க முடியாததாகிவிடும்.

# காவியத்து காதலர்கள்!



அழகிய பொழுதுகள்
அந்த நாள்களில் அவளுடன்
நினைத்து பார்த்தேன்

நிதம் நிதம் உன் நினைவுகள்
என் நெஞ்சத்தில்
அன்பே!
பள்ளிப்பருவ தோழியாக
பழகிய காலம்
பருவ மங்கையாகி
பக்கத்தில் வந்த என் வானதியே
காதல் மழை பொழிந்தாயே!

சன்னங்கள் விளையாடிய
அந்த கரையோரம் சல்லாப
காதல் காவியம்.
குண்டுகள் மழை பொழியும் அந்த
தெருவோரம் தென்றல் பாட்டு
என் தேவதையேஎல்லாம்
ஓர் பொழுதில்
இல்லை என்றாயிற்று
கனக்கிறது என் இதயம்
என் உயிரே....
ஈழத்து தேசமதை
காதலித்து இதயத்து நேசமதை

ஓரமாய் ஒதுக்கி
புறப்பட்டோம் போராட
புலி மைந்தர்களாய்
காதல் புலிமைந்தர்களாய்....


காவியத்து காதலர்கள்
களத்தில் நாங்கள்
ஈழ தேசம்தன்னை காதலித்தோம்
இறுதியில்
நீ ஈழத்தின் காதல் காவியமானாய்
அன்பே
என் அன்பு காதலியே!

தசாப்தங்கள் கடக்கின்றன
தென்றல் என்னை
தழுவுகிறது தேசம்
உன்னை வணங்குகிறது
உன் நினைவுகள்
தாங்கி...

என்றும் உன் நினைவுடன்

உடுத்துறை இசை

# கொரோனா அச்சுறுத்தும் புதிய வைரஸ்!



உலக அளவில் பல்லாயிரக்கணக்கான மனித உயிர்களைக் காவு வாங்கி வரலாற்றில் இடம்பிடித்த ஆபத்தான வைரஸ் நோய்கள் பல. 2002ஆம் ஆண்டில் சீனாவில் சார்ஸ், 2012ஆம் ஆண்டில் உலகில் பல நாடுகளில் பன்றிக்காய்ச்சல், 2014ஆம் ஆண்டில் மேற்கு ஆபிரிக்காவில் எபோலா, 2016ஆம் ஆண்டில் பிரேசிலில் சிகா, 2019ஆம் ஆண்டில் சவுதி அரேபியாவில் மெர்ஸ் ஆகியவை அவ்வாறு மிகமிக ஆபத்தான வைரஸ்களாக உள்ளன. இந்த வரிசையில் 2020ஆம் ஆண்டில் சீனாவில் கொரோனா வைரஸ் இமாலய சவாலாக உருவெடுத்துள்ளது.

உலகில் உயிர் காக்கும் மருத்துவம் பல வழிகளில் முன்னேறிக்கொண்டிருந்தாலும், நாட்டில் மக்கள்தொகை பெருகினால், சுத்தமும் சுகாதாரமும் குறைந்தால், சுற்றுச்சூழல் கெட்டுப்போனால், மக்களுக்கு உணவு விடயத்தில் அக்கறை இல்லாவிட்டால், தடுப்பூசி உள்ளிட்ட நோய்த்தடுப்பு முறைகளில் விழிப்புணர்வு இல்லாமல் இருந்தால், அது எத்தனை வளர்ச்சிபெற்ற நாடாக இருந்தாலும், அங்கே புதிது புதிதாக நோய்கள் உருவாகின்றமையைத் தடுக்க முடியாது என்பதை எச்சரிக்கும் அலாரங்கள் இவை.



**இந்த வைரஸ் வகைகள் பெரும்பாலும் வீட்டு விலங்குகள், பறவைகள், ஊர்வனங்கள், மீன், நண்டு போன்ற கடல் வாழ் உயிரினங்கள் மூலமே மற்றவர்களுக்குப் பரவும். சீனாவில் அறியப்பட்ட முதல் கொரோனா காய்ச்சல், நோயாளி மீன் சந்தைக்குச் சென்று வந்தவர் என்பதிலிருந்தே இது உறுதியாகிறது. ஆனாலும், இப்போதைய கொரோனா, சார்ஸ் அளவுக்கு மிகவும் கடுமையான வைரஸ் இல்லை என்கிறது உலக சுகாதார நிறுவனம்.**

### புதிய ஆபத்து!

கடந்த டிசெம்பர் மாதக் கடைசியில், மத்திய சீனாவில் வூஹான் நகரத்தில் கொரோனா எனும் வைரஸ் பரவுவதாக முதல் செய்தி வந்தபோது, உலக சுகாதார நிறுவனம் உட்பட எல்லா நாடுகளும் அதைச் சாதாரணமாகவே எடுத்துக்கொண்டன. அடுத்த ஒரு வாரத்தில், அசுர வேகத்தில் பரவிய கொரோனா, இன்று வரை 150க்கும் மேற்பட்டவர்களைப் பலி வாங்கிவிட்டது. இது தெரிந்ததும் உலக நாடுகள் எச்சரிக்கை அடைந்தன. ஏற்கெனவே, 2002ஆம் ஆண்டில் சார்ஸ் நோய் வந்தபோது 700க்கும் மேற்பட்டோர் இறந்து போனமையை சீனா இன்னும் மறக்கவில்லை. கொரோனாவின் தாக்குதலைக் கட்டுப்படுத்த சீனா பல வழிகளில் முயற்சித்தாலும் இதுவரை வூஹான் நகரத்தில் மட்டும் சுமார் 3,000 பேர் இந்த வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். சீனாவின் பல பகுதிகளுக்கும் 10க்கும் மேற்பட்ட உலக நாடுகளுக்கும் இந்த வைரஸ் பரவிவிட்டது. சர்வதேச மருத்துவ அவசரநிலையை அறிவிக்கும் அளவுக்கு நிலைமையை மோசமாக்கிவிட்டது கொரோனா.

ஏற்கெனவே, 6 வகையான வைரஸ்களைக் கொண்டது. கொரோனா வைரஸ் குடும்பம். இதில் ஏழாவதாகப் பிறந்துள்ளது இப்போது முதல் முறையாக சீனாவில் பரவி வரும் 'நாவல் கொரோனா வைரஸ்'. இந்த வைரஸ் வகைகள் பெரும்பாலும் வீட்டு விலங்குகள், பறவைகள், ஊர்வனங்கள், மீன், நண்டு போன்ற கடல் வாழ் உயிரினங்கள் மூலமே மற்றவர்களுக்குப் பரவும். சீனாவில் அறியப்பட்ட முதல் கொரோனா காய்ச்சல், நோயாளி மீன் சந்தைக்குச் சென்று வந்தவர் என்பதிலிருந்தே இது உறுதியாகிறது. ஆனாலும், இப்போதைய கொரோனா, 'சார்ஸ்' அளவுக்கு மிகவும் கடுமையான வைரஸ் இல்லை என்கிறது உலக சுகாதார நிறுவனம்.



### அறிகுறிகள் என்னென்ன?

கொரோனா காய்ச்சல் சாதாரண புளூ காய்ச்சலைப் போலவே தொடங்கும். வறட்டு இருமல், தும்மல், மூக்கு ஒழுகுதல், தொண்டைவலி, உடல்வலி, தலைவலி, குமட்டல், கடுமையான களைப்பு போன்ற அறிகுறிகள் ஏற்படும். நிமோனியா நோயின் தாக்கம் தெரியும். மூச்சுவிடுவதில் சிரமம் உண்டாகும், சளியில் குருதி வெளியேறும். நெஞ்சுவலி வரும். சுவாசக் கோளாறு அதிகமாகும்போது இது பன்றிக் காய்ச்சலை ஒத்திருக்கும். அப்போதுதான் உயிரிழப்பு ஏற்படும். பெரும்பாலும் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்தவர்கள், ஊட்டச்சத்துக் குறைவாக உள்ள குழந்தைகள், 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், சிறுநீரக நோய், புற்றுநோய் உள்ளிட்ட நாட்பட்ட நோய் உள்ளவர்கள் ஆகியோர்தான் இதற்குப் பலியாகிறார்கள். ஆகவே, இவர்கள்தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இந்த நோயின் ஆரம்ப அறிகுறிகள் மிகச் சாதாரணமாக இருக்கின்றமையால், இதைத் தொடக்கத்திலேயே துல்லியமாகக் கணிப்பது கடினம். எலிசா, பிசிஆர், வைரஸ் கல்ச்சர் ஆகிய குருதிப் பரிசோதனைகள் மற்றும் சளி பரிசோதனைகள் மூலம் இந்தக் கிருமியை அறியலாம்.

### என்ன சிகிச்சை?

கொரோனா காய்ச்சல் இப்போதுதான் புதிதாக வந்துள்ளது என்பதால், இதற்கு அங்கீகரிக்கப்பட்ட மாத்திரை, மருந்து, ஊசி எதுவும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இதற்குத் தடுப்பூசியும் இல்லை.

எனவே, இப்போதைக்குக் காய்ச்சலைக் குறைக்க மருந்துகள் தருகிறார்கள். உடலின் திரவங்கள் குறைந்து நீர் வறட்சி ஏற்பட்டால், குளுக்கோஸ் ஏற்றுகிறார்கள்.

நோயாளியின் குருதி அழுத்தம் சீராக இருக்க சலைன் ஏற்றுகிறார்கள். மூச்சுத்திணறல் உள்ள நோயாளிகளுக்கு வெண்டிலேட்டர் பொருத்துகிறார்கள். ஒக்சிஜன் செலுத்துகிறார்கள். பிற பாக்டீரியா தொற்றுகள் ஏற்படுவதைத் தடுக்க நுண்ணு யிர்க்கொல்லி மருந்துகளைத் தருகிறார்கள்.

### தப்பிப்பது எப்படி?

இந்த நோய் பரவும்போது மீன், முட்டை மற்றும் இறைச்சிகளைச் சாப்பிட வேண்டாம். மீன் அல்லது இறைச்சி விற்கப்படும் இடங்களையும் விலங்குகள் உள்ள இடங்களையும் சுத்தமாகப் பராமரிக்க வேண்டும். இந்த நோய்த்தொற்று இருப்பவருடன் கை குலுக்கக் கூடாது. இருமும் போதும் தும்மும் போதும் மூக்கையும் வாயையும் சுத்தமான கைக்குட்டையால் மூடிக்கொள்ள வேண்டும். கண்ட இடங்களில் எச்சிலைத் துப்புவதும் சளியைச் சிந்துவதும் கூடாது. கைகளையும் கால்களையும் நன்றாக சோப்புத் தேய்த்துத் தண்ணீரில் கழுவ வேண்டும். பகலில் போதுமான அளவுக்குத் தண்ணீர் குடிக்க வேண்டும். பொதுஇடங்களுக்குச் சென்று திரும்பினால், வெதுவெதுப்பான தண்ணீரில் உப்பு கலந்து கொப்பளித்து, தொண்டையைச் சுத்தம் செய்யுங்கள். முகத்தையும் கண்களையும் சோப்புப் போட்டுக் கழுவி சுத்தம் பேணுங்கள். வெளியில் செல்லும்போது மூன்றடுக்கு முகக்கவசம் அல்லது 'என்95' ரக முகக்கவசம் அணியுங்கள். காய்ச்சல், சளி உள்ள குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டாம்.

காய்ச்சலுக்கு சுய மருத்துவம் வேண்டாம். உடனே மருத்துவரிடம் சென்றுவிடுங்கள். இந்த நோய் பரவும் இடங்களுக்குப் பயணம் செய்ய வேண்டாம். மேலும், இந்த நோய்க்குச் சிகிச்சை தரும் மருத்துவர்கள் மற்றும் உதவியாளர்கள் சாதாரண உடையில் சிகிச்சை தரக் கூடாது. இவர்கள் கையுறைகள், முகக் கவசம், உடலை மூடும் உடைகள், சுத்திகரிப்புத் திரவம் போன்றவற்றைப் பயன்படுத்துவது மிக அவசியம். அப்போதுதான் இந்த வைரஸ் இவர்களுக்கும் பரவாது. இவர்கள் மூலம் மற்றவர்களுக்கும் பரவாது. சீனாவில் இந்த நோய்க்கு சிகிச்சை அளித்த ஒரு மருத்துவர் உயிரிழந்ததுதான் இந்த எச்சரிக்கைக்குக் காரணம்.

நன்றி : இந்து தமிழ் திசை

சந்திரசேகர ஆசாத்

# ஜனநாயகம் பெற்றெடுத்த சர்வாதிகார குழந்தை



ஜேர்மனியின் செல்வந்தர்களாகவும் கல்விமான்களாகவும் வங்கி உட்படத் தொழில்துறைகளிலும் ஆதிக்கம் வகித்த யூதர்களுக்கு எதிராகவும் உலகிலேயே ஜேர்மனியரே ஆளப்பிறந்த உயரிய ஆசிய இனம் எனவும் பெரும் இனவெறிப் பிரசாரத்தை மேற்கொண்டு நாசிக் கட்சியின் ஐம்பத்தியாறாவது உறுப்பினராகச் சேர்ந்து கொண்ட அடல்ப் ஹிட்லர் வெகுவிரைவிலேயே அதன் தலைமைப் பதவியைக் கைப்பற்றிக் கொள்கிறான். 1932ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இடம்பெற்ற தேர்தலில் அவன் பெரும் சூறாவளிப் பிரசாரத்தை மேற்கொள்கிறான். அவனின் அற்புதமான பேச்சாற்றல் காரணமாகவும் யூதர்களுக்கெதிரான இனவெறிப் பிரசாரம் காரணமாகவும் 35 வீத வாக்குகளைப் பெற்றபோதும் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற முடியவில்லை. 1933ஆம் ஆண்டு மார்ச் 5ஆம் நாள் தேர்தல் இடம்பெறுமென மீண்டும் அறிவிக்கப்பட்டது. அதன் பின்னால் ஒரு பெரும் சதியையே ஹிட்லர் வகுத்திருந்தான்.

தேர்தல் இடம்பெறுவதற்கு 6 நாள்கள் முன்பு அதாவது 1933 பெப்ரவரி 27ஆம் நாள் நள்ளிரவில் ஜேர்மனிய நாடாளுமன்ற கட்டடமான 'ரீட்ஸ்ராக்' கட்டடம் எரியூட்டப்படுகிறது. இந்தத் தீவைப்பை இரகசியமான முறையில் ஹிட்லரின் நாசிக் கட்சியின் குண்டர்களே மேற்கொள்கின்றனர். அதைக் கம்யூனிஸ்டுகளே செய்தனர் எனவும் சமூக ஜனநாயகவாதிகள் உதவினர் எனவும் கூறி இரு கட்சிகளையும் ஹிட்லர் தடை செய்கிறான். அந்த இடைப்பட்ட ஆறு நாள்களும் கம்யூனிஸ்டுகளின் சர்வாதிகார ஆபத்திலிருந்தும் யூதர்களின் பொருளாதார மேலாதிக்கத்திலிருந்தும் நாட்டைக் காக்க தனது கட்சிக்கு வாக்களிக்கும்படி நாடு முழுவதும் மின்னல் வேகப் பிரசாரங்களை மேற்கொண்டான். ஜேர்மனிய மக்களும் உலகை ஆளப் பிறந்த உயரிய ஆரிய இனம் என்ற மாயையில் ஒரு சர்வாதிகாரியைத் தங்கள் தலைவனாகத் தெரிவு செய்தனர். அதன் பலன் 60 லட்சம் யூதர்கள் கொல்லப்பட்டமையுடன் முடிவடைந்துவிடவில்லை. இரண்டாம் உலகப் போர் நான்கு கோடி மக்களைப் பலி கொண்டது. இறுதியில் ஜேர்மனி முற்றாகவே தோற்கடிக்கப்பட்டு இரு கூறுகளாகப் பிளக்கப்பட்டு ஒன்று மேற்கு நாடுகளின் கட்டுப்பாட்டிலும் மற்றது சோவியத் யூனியனின் கட்டுப்பாட்டிலும் கொண்டுவரப்பட்டது.

### ஈஸ்டர் தாக்குதலும் ஜனாதிபதித் தேர்தலும்

இலங்கையிலும் ஜனாதிபதித் தேர்தலுக்குச் சில மாதங்கள் முன்பாக 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று கொழும்பு, நீர்கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் தேவாலயங்களிலும் தலைநகரிலுள்ள 3 உல்லாச விடுதிகளிலும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இது சஹ்ரான் என்பவரின் தலைமையிலான தேசிய தௌபீக் ஜமாத் என்ற பயங்கரவாத அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வமைப்பைச் சேர்ந்த 30 பேருக்கு இலங்கைப் புலனாய்வுப் பிரிவினர் மாத ஊதியம் வழங்கினர் என அப்போது செய்திகள் வெளிவந்தன. வவுணதீவில் இரு பொலிஸார் கொல்லப்பட்டமையும் இவ்வமைப்பினராலேயே மேற்கொள்ளப்பட்டது எனவும் ஆனால் முன்னாள் புலி உறுப்பினரையே புலனாய்வாளர்கள் கைது செய்தனர் எனவும் இந்தக் குண்டுவெடிப்பு தொடர்பான விசாரணைகளிலிருந்து தெரிய வந்திருந்தது. எது எப்படியிருந்த போதிலும் இடம்பெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் இந்தக் குண்டுவெடிப்பும் இதில் கொள்ளப்பட்ட 250 பேருக்கும் மேற்பட்ட பொதுமக்களுமே பிரதான பிரசாரக் கருவிகளாகின.

முஸ்லிம் பயங்கரவாதிகள் நாட்டின் பாதுகாப்புக்குப் பெரும் ஆபத்து எனவும் விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை ஒழித்த கோத்தாபய ராஜபக் ஷ ஒருவராலேயே நாட்டைச் சர்வதேச முஸ்லிம் பயங்கரவாதத்திலிருந்து காப்பாற்ற முடியும் என்ற புயல் வேகப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. அதுமட்டுமன்றி முஸ்லிம் அமைச்சர்களைப் பதவி விலகக் கோரி அத்துரலிய ரத்ன தேரரின் உண்ணாவிரதம், அவரின் கோரிக்கை நிறைவேற்றப்படா விட்டால் நாடு அமைதியிழக்கும் என்ற ஞானசா ர தேரரின் சவால், கம்பஹா மாவட்டத்திலும் புத்தளம், சிலாபம் பகுதிகளிலும் கட்டவிழ்த்து விடப்பட்டன. திட்டமிட்ட வகையில் இஸ்லாமியப் பயங்கரவாதம் என்ற பேரில் ஓர் இனவெறிப் பிரசாரம் கட்டவிழ்த்து விடப்பட்டு சிங்கள மக்களின் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று கோத்தாபய ராஜபக் ஷ ஜனாதிபதியாகியுள்ளார்.

கோத்தாபய ராஜபக்ச பதவியேற்றதும் பொதுபலசேனாவின் ஞானசாரதேரரும் இராவணபலய அமைப்பினரும் பௌத்த சிங்கள தேசம் என்ற தங்கள் நோக்கம் நிறைவேறும் நிலை உருவாகிவிட்டதாகவும் தாங்கள் அரசியலிலிருந்து விலகப் போகின்றனர் எனவும் தெரிவித்துவிட்டனர்.

### ஜேர்மனியும் இலங்கையும்

ஜேர்மனியில் நாடாளுமன்றக் கட்டட எரிப்பு. இலங்கையில் ஏப்ரல் 21 தாக்குதல்கள். ஹிட்லர் யூதர்களின் பொருளாதார ஆதிக்கத்திலிருந்தும் கம்யூனிஸ்ட் பயங்கரவாதத்திலிருந்தும் நாட்டைக்காக்க மக்களிடம் ஆதரவு கோரினான். கோத்தாபய முஸ்லிம் வர்த்தக ஆதிக்கத்திலிருந்தும் இஸ்லாமியப் பயங்கரவாதத்திலிருந்தும் நாட்டைக் காக்கச் சிங்கள மக்களிடம் ஆதரவு கோரினார். இருவருமே அமோக வெற்றிபெற்று நாட்டின் தலைவர்களாகினர். முழு அதிகாரமும் அவர்களின் கைகளில் வந்தது. இலங்கையில் கோத்தாபய ராஜபக் ஷ ஆட்சிக்கு வந்ததுமே வெகுவேகமாக நாட்டின் சிவில் நிர்வாகம் இராணுவமயப்படுத்தப்பட்டது. ஏற்கனவே ஐக்கிய நாடுகளின் நீதிக்கும் சமத்துவத்துக்குமான அமைப்பினால் நூற்றுக்கு மேற்பட்ட மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள், போர்க்குற்றங்கள் சாட்டப்பட்ட பிரிகேடியர் சவேந்திர சில்வா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டார். கோத்தாபய ஆட்சிக்கு வந்ததும் மேஜர் ஜெனரல் கமல் குணவர்த்தன பாதுகாப்புச் செயலராக நியமிக்கப்பட் டமை முதற்கொண்டு நாட்டின் முக்கிய அதிகாரப் பீடங்கள் இராணுவ அதிகாரிகளாலும் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளாலும் நிரப்பப்பட்டன.

ஜனாதிபதிக்குள்ள சிறப்புச் சலுகைகளுக்கு அமைவாக




கோத்தாபய மீதான ஊழல் மோசடி வழக்குகள் அத்தனையும் திரும்பப் பெறப்பட்டன. பல அரச அதிகாரிகள் நாட்டை விட்டோடினர். பலர் கைது செய்யப்பட்டனர். ஜேர்மனியில் ஹிட்லர் ஆட்சிக்கு வந்ததும் எவ்வாறு ஜேர்மனியின் அரசு இயந்திரம் இராணுவ மயப்படுத்தப்பட்டு ஆட்சிக்கு எதிரானவர்கள் வேட்டையாடப்பட்டார்களோ அவ்வாறே இலங்கையிலும் தேர்தலின் பின் ஒரு தோற்றப்பாடு ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

ஹிட்லரின் நம்பிக்கைக்குப் பாத்திரமான பொலிஸ் புலனாய்வுப் பிரிவான கென்டாபோ கைது செய்தல், காணாமலாக்கல், கொடிய சித்திரவதைகள் மூலம் கொலை செய்தல், ஹிட்லரை எதிர்ப்பவர்களை வேட்டையாடுதல் போன்ற கொடிய நடவடிக்கைகள் மூலம் ஒரு சர்வாதிகார சூழலை நிலைநிறுத்தியதுடன் சகல விதமான ஜனநாயக உரிமைகளையும் இல்லாமல் செய்து தங்கள் அதிகாரத்தை நிலைநிறுத்தினர். ஜேர்மனிய இனமே உயர்ந்த ஆரிய இனமென்றும் உலகை ஆளும் தகுதி அவர்களுக்கே உண்டு எனவும் கூறி யூதர்கள் வேட்டையாடப்பட்டனர். உலக நாடுகளை ஆக்கிரமிக்கும் உலகப்போர் ஹிட்லரால் தொடக்கப்பட்டது.

இலங்கையில் கோத்தாபயவின் நம்பிக்கைக்குரிய புலனாய்வு அமைப்பாக இராணுவப் புலனாய்வு அமைப்பு விளங்கியமையும் இராணுவப் புலனாய்வுப் பிரிவும் துணை இராணுவக் குழுக்களும் இணைந்து கைது செய்தல், காணாமல் போகவைத்தல், படுகொலைகளை மேற்கொள்ளல், வெள்ளைவான் கடத்தல், கிறிஸ் பூதம், கொள்ளைகள், கொலைகள் போன்ற தமிழ் மக்களுக்கு எதிரான கொடுமைகள் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டன எனக் கருதப்பட்டதை மறந்துவிடமுடியாது. இதுமட்டுமன்றி இலங்கை ஒரு சிங்கள, பௌத்த தேசம் எனவும் அவர்களே இந்த மண்ணின் மக்கள் எனவும் ஏனையோர் அவர்கள் தயவில் வாழ வேண்டியவர்கள் எனவும் சிங்கள மக்கள் கருத்தூட்டப்பட்டுக் காலத்துக்குக் காலம் தமிழ், முஸ்லிம் இன அழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கொழும்பில் 11 இளைஞர்கள் கப்பம் கோரி இளைஞர்கள் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பான வழக்கில் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரணகொட, கொமடோர் டி.கே.பி.தசநாயக்கா ஆகியோரை விசாரணை செய்வதை இடைநிறுத்துமாறு அரசியல் பழிவாங்கல் தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழு சட்டமா அதிபரைப் பணித்துள்ளது. ஆனால் சட்டமா அதிபர் நீதிமன்றத்தில் உள்ள ஒரு வழக்கு தொடர்பாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இல்லை எனத் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார். இவையெல்லாவற்றையும் பிரகடனப்படுத்தப்படாத சர்வாதிகாரம் என்றே கருதப்பட வேண்டியுள்ளது.

உலகின் உயர்ந்த ஆளப் பிறந்த அரிய இனம் ஜேர்மனியர்கள் என்ற மாயையைப் பரப்பி சர்வாதிகாரத்தை நிலை நிறுத்தி பெரும் உலகப் பேரழிவை வழி நடத்தினான் ஹிட்லர். இலங்கை சிங்கள பௌத்தர்களின் நாடு என்றும் ஏனையோர் அவர்கள் தயவில் வாழ வேண்டியவர்கள் என்ற மாயை பரப்பி ஜனநாயகத்தினூடாகப் பெற்ற அதிகாரம் மூலம் ஓர் இராணுவ சர்வாதிகார ஆட்சி உருவாவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. எனினும் ஹிட்லர்கள் எவ்வளவு திறமைசாலிகளாகவும் கொடூரமானவர்களாகவும் இருந்த போதிலும் உலகம் அவர்களை நீண்ட காலம் விட்டு வைத்ததில்லை என்பது வரலாறு.



# சைக்கோ

**நடிகர் : உதயநிதி ஸ்டாலின்**
**நடிகை : அதிதி ராவ் ஹைதரி**
**இயக்குநர் : மிஸ்கின்**




கோவையில் பார்வையற்றவராக இருக்கும் உதயநிதி ஸ்டாலின். அதிதி ராவை ஒருதலையாகக் காதலித்து வரு கிறார். இதே ஊரில் பெண்கள் சிலர் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு வருகிறார்கள். இது ஒரு சைக்கோ கொலையாளியின் கைவரிசையாக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுகிறது.

கொலையாளியை பொலிஸார் தேடி வரும் நிலையில், நாயகி அதிதி ராவ் அதே பாணியில் கடத்தப்படுகிறார். மற்ற பெண்களை கொலை செய்த நபர்தான் அதிதியையும் கடத்தியிருக்கின்றமை உதயநிதிக்கு தெரியவருகிறது.

இறுதியில் சைக்கோ கொலையாளியிடம் இருந்து அதிதி ராவை உதயநிதி உயிருடன் மீட்டாரா? சைக்கோ கொலையாளி யார்? எதற்காக பெண்களைக் கொலை செய்கிறார்? என்பதே படத்தின் மீதிக்கதை.

நாயகனாக நடித்திருக்கும் உதயநிதி, தன்னுடைய கதாபாத்திரத்தை உணர்ந்து நடித்திருக்கிறார். பார்வையற்றவராக இவரின் நடிப்பு கவனிக்க வைத்திருக்கிறது. நாயகியாக நடித்திருக்கும் அதிதி ராவ் கொடுத்த வேலையை சிறப்பாக செய்திருக்கிறார். சக்கர நாற்காலியில் உட்கார்ந்துக் கொண்டு நடிப்பால் மிரட்டி இருக்கிறார் நித்யா மேனன். துணிச்சலான கதாபாத்திரத்தை திறம்பட செய்திருக்கிறார். உதயநிதிக்கு கண்ணாக அவருடனே பயணித்திருக்கும் சிங்கம் புலியின் நடிப்பு சிறப்பு.

தனக்கே உரிய கிரைம், திரில்லர் பாணியில் படத்தை எடுத்திருக்கிறார் இயக்குநர் மிஷ்கின். குறிப்பிட்ட கதாபாத்திரத்திற்கு மட்டும் முக்கியத்துவம்" தராமல், அனைவருக்கும் சமமான கதாபாத்திரம் கொடுத்து, சிறப்பாக வேலை வாங்கி இருக்கிறார். வழக்கமான மிஷ்கின் படம் என்றாலும் மற்ற படங்களை விட சுவாரஸ்யம் குறைவு என்றே சொல்லலாம். அடுத்தடுத்து வரும் காட்சிகளை யூகிக்க முடிகிறது. அடுத்து என்ன நடக்கப் போகிறது என்று முன்பே தெரிந்து விடுவதால் அதிகமாக ரசிக்க முடியவில்லை. படத்திற்கு பலம் இளையராஜாவின் இசை. பாடல் மற்றும் பின்னணி இசை ரசிக்க வைக்கிறது. அதுபோல் தன்வீர் மிரின் ஒளிப்பதிவும் அருமை. மொத்தத்தில் 'சைக்கோ' திரில்லிங் குறைவு.





## அனுஷ்காவுடன் நடிக்க மறுத்த பிரபாஸ்

தெலுங்கில் முன்னணி நடிகராக வலம் வரும் பிரபாஸ், அனுஷ்காவுடன் நடிக்க மறுத்த செய்தி தற்போது வெளியாகிப் பரபரப்பாகியுள்ளது.'சாஹோ'படத்திற்கு பிறகு ராதா கிருஷ்ண குமார் இயக்கும் படத்தில் பிரபாஸ் நடித்து வருகிறார். காதல்கதையாகஉருவாகிவரும்இந்தப் படத்தின்முதல்கட்டபடப்பிடிப்புஇத்தாலியில் நடந்தது. 'பிரபாஸிற்கு ஜோடியாக பூஜா ஹெக்டே நடிக்கிறார். தற்போது அவர்களின் ரொமான்ஸ் காட்சிகள் ஹைதராபாத்தில் படமாக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், பிரபாஸ் பூஜா ஹெக்டேயின் கெமிஸ்ட்ரி சிறப்பாக வந்திருப்பது மகிழ்ச்சியை அளிக்கிறது என ராதா கிருஷ்ண குமார் டுவீட் செய்துள்ளார். மேலும், இப்படத்தில் முதலில் பிரபாஸுக்கு ஜோடியாக அனுஷ்காவைத் தான் நடிக்க வைக்க திட்டமிட்டார் ராதா கிருஷ்ணகுமார். ஆனால் பாகுபலி படங்களுக்குபின்அவர்களைஇணைத்து காதல் கிசுகிசு, திருமண வதந்திகள் பரவியமையால், அனுஷ்காவுக்குப் பதிலாக வேறு நடிகையை தேர்வு செய்யும்படி பிரபாஸே கூறினாராம். இதையடுத்தே பூஜா ஹெக்டேவை ஒப்பந்தம் செய்திருக்கிறாராம் இயக்குநர்.




## மாஸ்டர்
### போஸ்டருக்கு வரவேற்பு

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிப்பில் உருவாகி வரும் படம் 'மாஸ்டர்'. சேவியர் பிரிட்டோ தயாரித்து வரும் இந்தப் படத்தின் படப்பிடிப்பு தற்போது சென்னையில் நடைபெற்று வருகிறது. சத்யன் சூரியன் ஒளிப்பதிவு செய்துவரும் இந்தப் படத்துக்கு அனிருத் இசையமைத்து வருகிறார்.

இந்தப் படத்திலிருந்து விஜய் விஜய் சேதுபதி இருவருமே இருக்கும் புதிய போஸ்டர் அண்மையில் வெளியிடப்பட்டது. இதற்கு பல்வேறு திரையுலக பிரபலங்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர். இந்தப் படத்தில் மாளவிகா மோகனன், ஆண்ட்ரியா, வி.ஜே.ரம்யா, கௌரி கிஷன், அர்ஜுன் தாஸ் உள்ளிட்ட பலர் விஜயுடன் நடித்து வருகிறார்கள். ஏப்ரல் வெளியீட்டுக்குத் தயாராகி வரும் இந்தப் படத்தின் படப்பிடிப்பை பெப்ரவரிக்குள் முடிக்கப் படக்குழு முடிவு செய்துள்ளது.

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
*ஊடக வருகை விரிவுரையாளர்,*
*இலங்கை திறந்த பல்கலைக்கழகம்*

குருநகர் பங்கு கோலாகலமாகக் கொண்டாடும்

# புதுமை மாதா ஆலய பெருவிழா

பெப்பிரவரி 2ஆம் திகதி இயேசுவைக் கோவிலில் அர்ப்பணித்தல் அல்லது அதிகாரபூர்வமாக ஆண்டவரைக் காணிக்கையாக அர்ப்பணித்தல் விழாவாகும். இவ்விழாவானது குருநகர் பரிசுத்த புதுமை மாதா ஆலயத்தில் வருடாந்த திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. இந்தப் பெருவிழா பற்றி இவ்வாக்கம் பேசுகிறது. இவ்வாக்கத்திற்கான தகவல்களை கீத பொன்கலன் மேரியன் நித்தியானந்தா மற்றும் கீ. நோயல் ஆகியோர் தந்துதவினர்.

இயேசுவைக் கோவிலில் அர்ப்பணித்தல் அல்லது அதிகாரபூர்வமாக ஆண்டவரைக் காணிக்கையாக அர்ப்பணித்தல் விழா என்பது விவிலியத்தில் குழந்தை இயேசுவை பெற்றோர் யோசேப்பும் மரியாவும் எருசலேமில் இருந்த கோவிலில் மோசேயின் சட்டப்படி ஆண்டவருக்கு அர்ப்பணித்த நிகழ்வினைக் குறிக்கும்.

பல பாரம்பரியங்களில் இவ்விழா கன்டில்மஸ் என அழைக்கப்படுகின்றது. இவ்விழா திருப்பலிக்கு முன்பு எரியும் திரிகளோடு பவனியாக ஆலயத்துக்கு மக்கள் வருகின்றமையால் மெழுகுதிரிகளை ஆங்கிலத்தில் குறிக்கும் கன்டில்மஸ் என்ற இப்பெயர் வழங்கலாயிற்று.

### அர்ப்பணத்தின் நாள்

இந்த நாளை அர்ப்பணத்தின் நாள் என்றும் துறவற வாழ்வில் தங்களையே இறைவனுக்கு அர்ப்பணம் செய்தவர்களின் நாள் என்றும் திருஅவை கொண்டாடுகிறது. மேலும் குழந்தைகள் பற்றிய புரிதல் நாள் என்றும் அல்லது குழந்தைகள் நாள் என்றும் திருஅவை கொண்டாடி மகிழ்கிறது. மரியாவும் யோசேப்பும் கொண்டு வந்த குழந்தையைக் கைகளில் ஏந்துகிற சிமியோன், மக்கள் அனைவரும் காணுமாறு நீர் ஏற்பாடு செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டுகொண்டன என்று ஆர்ப்பரித்து மகிழ்கின்றார்.

இன்றைய திருநாளின் பின்புலத்தில் பார்க்கும்போது கடவுளின் அரும்செயலைக் காணும் சிமியோன் ஒரே நேரத்தில் மரணத்தைத் தழுவுதல் போலவும் இறைவனின் பாதுகாப்பை அனுபவிப்பது போலவும் இருக்கிறது. ஏனெனில் சிமியோன் ஆண்டவரே உமது சொற்படி உம் அடியான் என்னை இப்போது அமைதியுடன் போகச் செய்கிறீர் என்று தம்முடைய இறப்பைப் பற்றியும் மக்கள் அனைவரும் காணுமாறு நீர் ஏற்பாடு செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டுகொண்டன என்று தான் பெற்றுள்ள பாதுகாப்பு உணர்வு பற்றியும் சொல்கின்றார்.

### வாசகங்களின் பின்புலம்

மனித உரு ஏற்றுள்ள கடவுளை இயேசுவை அவருடைய பெற்றோர் ஆலயத்திற்கு அழைத்து வருகின்றனர். மேலும் அவர் கடவுளாக இருந்தாலும் மனித வலுவின்மைக்கு உட்பட்டதால் அவரை மீண்டும் கடவுளுக்கே அர்ப்பணிக்கும் கட்டாயத்திற்கு அவருடைய பெற்றோர் உட்படுத்தப்படுகின்றனர். இன்றைய முதல் மற்றும் இரண்டாம் வாசகங்களின் பின்புலத்தில் இறைவனையும் அவருடைய மீட்புச் செயல்களையும் கண்டுபிடிக்க இரண்டு வழிகள் உள்ளன:

ஒன்று, அவருக்காகக் காத்திருத்தல் அல்லது அவரைத் தேடுதல். இரண்டு, நம்முடைய வலுவின்மைகளை ஏற்றுக்கொள்ளுதல் அந்த வலுவின்மைகளில் இறைவனின் வல்லமையைக் காணுதல். மீட்பைக் கண்டுகொள்ள நமக்கு இவ்விரு வழிகள் நிற்க இதை நேரடியாக நமக்கு வாழ்ந்து காட்டிய நால்வரை இன்றைய நற்செய்தி வாசகம் நமக்கு முன்வைக்கிறது:

### யோசேப்பு மரியா

இவர்கள் திருச்சட்டத்தை நிறைவேற்ற ஆர்வம் கொண்டிருக்கின்றனர். இது ஒருவகையான மாதிரி அதாவது சட்டங்கள் நிறைவேற்றுவதன் வழியாக நல்ல அறநெறி வாழ்வு வாழ்வதன் வழியாக மீட்பைக் கண்டுகொள்வது. யோசேப்புமரியா பற்றிய மற்றொரு குறிப்பும் இங்கே உள்ளது. அவர்கள் இரண்டு மாடப்புறாக்களைக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கின்றனர். இவை அவர்களின் ஏழ்மை நிலையைக் குறிக்கிறது. எங்களுடைய மகன்தான் மீட்பர் என்று தாங்கள் பெற்ற கொடையில் பெருமை கொள்ளாமல், தங்களுடைய வலுவற்ற நிலையை ஏற்றுக்கொள்கின்றனர். ஆக வலுவற்ற நிலையில் நாம் இருந்தாலும் நல்ல அறநெறி வாழ்வு



வழியாக மீட்பைக் கண்டுகொள்ள முடியும் என்பது யோசேப்புமரியா உணர்த்தும் பாடம்.

### சிமியோன்

இவர் நேர்மையாளர். இறைபற்றுக் கொண்டவர். வாக்களிக்கப்பட்ட ஆறுதலை எதிர்பார்த்திருந்தவர். தூய ஆவியால் தூண்டப்பட்டு ஆலயத்திற்கு வருகின்றார். தூய ஆவியின் தூண்டுதலைக் காண ஒருவர் கடவுளோடு இணைந்திருக்க வேண்டும். இணைந்திருத்தல் நிலையில்தான் தூண்டுதலை அனுபவிக்க முடியும். நம்முடைய மீட்புச் செயலை நாம் அனுபவிக்க நாமும் இறைவனோடு இணைந்திருக்க வேண்டும் என்று நம்மை அழைக்கிறார் சிமியோன்.

### அன்னா

இவர் கைம்பெண் என்ற நிலையிலும் கடவுள் தன்னுடைய கணவரை எடுத்துக்கொண்டார் என்ற எந்தக் கோபமும் இல்லாமல், கோவிலை விட்டு நீங்காமல் நோன்பிருந்து மன்றாடி அல்லும் பகலும் திருப்பணி செய்துவருகிறார். இவர் தன்னுடைய வாழ்வியல் எதார்த்தங்கள் அனைத்தையும் முழுமையாக ஏற்று வாழ்கிறார். இவரின் எளிய மனம் நமக்கு உணர்த்தும் பாடம். எதைப்பற்றியும் அதிகம் சிந்திக்காமல், தன்னுடைய நேரத்தை தேவையானவற்றில் மட்டும் செலவழிக்கின்றார் அன்னா.

### காணிக்கை இன்றியமையாதது

காணிக்கை என்பது கிறிஸ்தவத்தை பொறுத்தவரை இன்றியமையாத ஒரு சொல் ஆகும். காயின் ஆபேல் தொடங்கி கிறிஸ்து வரை இச்சொல்லானது நீண்டிருப்பதை பார்க்க கூடியதாய் இருந்துள்ளது. வேதாகமத்தின்படி இறைமகன் கிறிஸ்து இரண்டு முறைகள் காணிக்கையாகுகிறார் ஒன்று கல்வாரி மலையில், இரண்டாவது தான் ஆலயத்தில் காணிக்கை ஆகுவது. இரண்டாவதாக குறிப்பிடப்படும் காணிக்கை ஆதல் என்பது கிறிஸ்துவின் மனித அவதார நோக்கின் ஆரம்பமாக பார்க்க கூடியதாக உள்ளது. அத்தோடு தானே பலிப்பொருளாய் கடவுளுக்கு காணிக்கை ஆகுவதையும் பார்க்க முடிகிறது. இறைமகன் இயேசு மனித பாவநிலை போக்க மனித அவதாரம் எடுத்தார். இந்த நிகழ்வே மனித பாவம் போக்கும் நிகழ்வாகவும் எல்லோரையும் மீட்பதற்காக இறைவன் தாமே எல்லாவற்றிலும் எல்லாரைப்போலான மீட்பின் மறைபொருளை உலகிற்கு வெளிப்படுத்தும் நிகழ்வாகவும் அமைந்திருந்தது.

இயேசுவை ஆலயத்தில் அர்ப்பணித்தல் அல்லது அதிகாரபூர்வமாக ஆண்டவரைக் காணிக்கையாக அர்ப்பணித்தல் விழா என்பது விவிலியத்தில் குழந்தை இயேசுவை அதன் பெற்றோர் சூசையப்பரும் மரியாளும் எருசலேமில் இருந்த கோவிலில் மோசேயின் சட்டப்படி ஆண்டவருக்கு அர்ப்பணித்த நிகழ்வினைக் குறிக்கும் விழாவாக இருந்தது. கடவுளாக இருந்த போதிலும் மனித அவதாரத்தை தான் ஏற்றதினால் மனிதர்களுக்கு அக்கால வழக்கப்படி நிகழ்கின்ற அத்தனை சட்டங்களையும் அவர் ஏற்றுக்கொண்டார் என்பதன் முதல் அடையாளமாக இச் சடங்கு காணப்படுகின்றது. ஏனெனில் அக்கால வழக்கப்படி இந்தச் சடங்கானது சுத்திகரிப்புச் சடங்காக நிகழ்ந்தி ருந்தது. பாவத்துடன் பிறக்கும் மனிதன் இந்தச் சடங்கின் வாயிலாக சுத்திகரிக்கப்பட்டு இறைவனுக்கு உகந்தவனாக்கப்படுகிறான். இது பெப்ரவரி இரண்டாம் திகதி ஆண்டு தோறும் திருவிழாவாக கொண்டாடப்படுகின்றது. இந்த விழாவின் தொடக்கத்தில் இது கன்னிமரியாவின் தூய்மைச் சடங்கு விழா என்று அழைக்கப்பட்டது. குழந்தை பிறந்த பிறகு ஒரு பெண் செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்ய வேண்டியிருந்ததால் இவ்வாறு அழைக்கப்பட்டது. இயேசுவ்வ ஆலயத்தில் காணிக்கையாக ஒப்புக்கொடுத்த நற்செய்தி பகுதியை அடிப்படையாகக் கொண்டு இவ்விழா கொண்டாடப்படுகிறது.

இந்த திருவிழாவானது பெரும் மகிழ்வாகவும் பெரும் கோலாகலமாகவும் திருச்சபையில் கொண்டாடப்பட்டு வந்திருக்கிறது என்பது வரலாறாகும். ஏனெனில் இறைமகன் இயேசு மனித பாவநிலை போக்க மனித அவதாரம் எடுத்தார். இந்த நிகழ்வே மனித பாவம் போக்கும் நிகழ்வாகவும் எல்லோரையும் மீட்பதற்காக இறைவன் தாமே எல்லாவற்றிலும் எல்லாரைப்போலான மீட்பின் மறைபொருளை உலகிற்கு வெளிப்படுத்தும் நிகழ்வாகவும் அமைந்திருந்தது. கிழக்கு மரபுவழி திருச்சபையின் 12 பெருவிழாக்களில் இத்திருவிழாவும் ஒன்றாகும். தொடக்கத்தில் இந்த திருவிழாவானது கி.பி 400ஆம் ஆண்டிலே எருசலேமில் கொண்டாடப்பட்டதாக சில வரலாறுகள் குறித்து நிற்கிறது. அதன்பிறகு ஐந்தாம் நூற்றாண்டில் இந்த விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டதாக மற்றொரு வரலாறு கூறுகிறது. பின்பு ஒளி பவனியும் இத்தோடு இணைக்கப்பட்டது. இது புறவினத்து மக்களின் பாவப் பரிகார சடங்கிற்கு பதிலாகச் சேர்க்கப்படது ஆகும். கிறிஸ்தவர்கள் ஒளியேற்றப்பட்ட மெழுகுதிரிகளோடு பவனியாக ஊரைச் சுற்றி வந்தார்கள். இது இயேசுவரும்போது உலகில் உள்ள இருள் மறைந்துபோகிறது என்பதை உணர்த்துகிறது. இயேசு இதற்கு புதிய அர்த்தத்தைக் கொடுக்கிறார். ஏனென்றால் இயேசு கோவிலில் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்படுகிறது. சிமியோன் இயேசுவை புறவினத்தார்க்கு வெளிப்பாடு அருளும் ஒளி என்று கூறுகிறார்.

### இத்திருநாள் விடுக்கும் வாழ்வியல் சவால் என்ன?

மீட்பு என்பதை நாம் பரந்த பார்வையில் புரிந்துகொள்ள வேண்டும். மீட்பு என்பது நம்முடைய இறப்புக்குப் பின் நடக்கும் நிகழ்வோ அல்லது நம்முடைய திரு முழுக்கின்போது நடந்த நிகழ்வோ அல்ல. இது ஓர் அன்றாட நிகழ்வு. நம் வாழ்வில் நடக்கும் எல்லாமே நமக்கு மீட்புதான். ஏனெனில் எல்லா நிகழ்வுகளிலும் இறைவனே செயலாற்றுகின்றார். இறைவனின் மீட்புச் செயல் அன்றாடம் நம்மைச் சுற்றி நடந்துகொண்டே இருக்கின்றது. நாம் செய்ய வேண்டியதெல்லாம் சிமியோன் போல ஒவ்வொரு பொழுதையும் ஒரு குழந்தைபோல நம்முடைய கைகளில் ஏந்தி வாழ வேண்டும். ஒவ்வொரு மனிதரையும் குழந்தைபோல கைகளில் ஏந்தி ஆச்சரியப்பட வேண்டும். இதற்கு முதலில் ஒவ்வொரு அனுபவத்தையும் தேடிக் காத்திருக்க வேண்டும். நம்முடைய வலுவின்மைகளைக் கொண்டாட வேண்டும். ■



# மூப்பு என்பது ஆப்பு அல்ல!

கிருஷ்ணராஜா சஞ்ஜீவன்

மனித வாழ்வானது நிலையற்றது. இன்று இருப்பவர்கள் நாளையும் நம்முடன் இருப்பார்கள் என்பது நிச்சமில்லை என்றோ ஒரு நாளில் எம்முடைய ஆத்மா இவ்வுடலைப் பிரிந்து சென்றுவிடும். இத்தகைய நிரந்தரமற்ற எம் வாழ்க்கைக் காலத்தில் நிம்மதியாக நாம் வாழ வேண்டுமெனின் அதற்கு மூத்தோர் தொடர்பு மிகவும் அத்தியாவசியமானது. மூத்தோரின்றி இவ்வுலகு சிறப்புற இயங்க முடியாது. எம்முடைய ஒவ்வொரு விடயத்திலும் நாணயத்தின் இருபுறங்கள் போல சரியானவை, பிழையானவை என இருவகைத் தீர்மானங்கள் தங்கியுள்ளன. அவற்றுள் மானிடரிலுள்ள அறியாமையைத் தீர்த்துச் சரியான வழியில் விடியலை நோக்கிச் செல்ல உதவும் மனிதமகான்களை முதியோர் என்கின்றோர். இத்தகைய முதியோர்களை சிரேஷ்ட பிரஜைகள் என்று அழைப்பதிலும் தவறு எதுவுமில்லை. ஏனெனில் இந்த உலகத்தில் நாம் கருவறைக்குள் இருக்கும் போதே நம்முடைய வாழ்க்கைக்கான நெறிமுறைகள் நிர்ணயிக்கப்பட்டு விடுகின்றன.

பிறந்து குறித்த வயதிலிருந்து கல்விகற்கத் தொடங்கியபின்பு மணம் முடித்து இல்லற வாழ்வில் சிறப்புற வாழ்ந்து பிள்ளைச் செல்வம் தனைப்பெற்று வாழ்வின் ஒரு முதிர்ச்சிநிலைதனை அடைவதே மனித வாழ்வின் இலட்சியம். அவ்வாறு அனுபவ முதிர்ச்சி அடைந்து மனித வடிவிலுயர்ந்து பலவிடயங்களைப் போதிப்பதிலும் தாமும் முன்னோடியாக இருந்து வையத்தில் உள்ள மானிடர்களை நேர்வழியில் நடத்திச் செல்வோரை சிரேஷ்ட பிரஜைகள் என்பர்.

இன்று நம்நாட்டில் கிட்டத்தட்ட நூற்றுக்கு எண்பத்தேழு வீதமானோர் சிரேஷ்ட பிரஜைகளாக உள்ளனர். அவர்கள் எல்லோரும் தம் குடும்ப உறவினர்களுடன் தம்முடைய காலங்களை மகிழ்வுடன் கழிக்கின்றனரா? என்றால் இல்லை என்றுதான் கூற வேண்டும். சில விரல்விட்டு எண்ணத்தக்க மனிதர்களே தம்முடைய வீட்டிலே உள்ள முதியோர்களை மனமகிழ்ந்து பராமரிக்கின்றார்கள்.

**தவறவிடப்படுகின்றது முதியோர் சமூகம்**

இன்று நம் ஈழநாடு எதிர்நோக்கியுள்ள பெரிய பிரச்சினைகளுள் ஒன்று வாழ்வில் அனுபவ முதிர்ச்சியுள்ள எம் சந்ததிக்கு நல்லறிவைப் புகட்டக்கூடிய முதியோர் கூட்டம் இல்லாமல் போனமைதான். காலம் செல்லச்செல்ல நல்மக்களையும் உயர் அனுபவம் மிகுந்த சிரேஷ்ட பிரஜைகளையும் இவ்வுலகம் இழந்துவருவது மனநெகிழ்வுக்குரியது. இத்தகு நிலைமைகளால்தான் இன்றைய சமுதாயம் மிக் வேகமாக பெரும் சீரழிவுகளைச் சந்தித்து இன்று நம் மாகாணமும் பின்தள்ளப்பட்டுள்ளது. மனிதாபிமானமற்றதொரு சமுதாயம் தற்போது தோற்றம் பெற்றுக் கொண்டு இருப்பதற்கு பிரதான காரணியாக நிகழ்வது நம்மைவிட வயது முதிர்ந்த சிரேஷ்ட பிரஜைகள் இல்லாமல் இருக்கின்றமைதான்.

இந்தச் சிரேஷ்ட பிரஜைகள் இன்று பல சவால்களை எதிர்நோக்கியிருக்கின்றன குறிப்பிடத்தக்கது. தற்காலத்தில் பிறந்ததோர் குழந்தையை அவ்வீட்டிலுள்ள முதியோர் ஆசைக்கொரு முத்தமிட ஆசைப்பட்டாலும் அதுவும் குற்றமென்று சொல்லுமளவுக்கு எம் சமுதாயத்தில் வன்முறைக் குணம் மலையளவு உயர்ந்து நிற்கின்றது. இது மட்டுமல்ல எத்தனையோ சிரேஷ்ட பிரஜைகள் தம் பிள்ளைகளாலும் வேறு பல குடும்ப உறுப்பினர்களாலும் முதியோர் இல்லத்திலும், நடுவீதியிலும், கோயில் மடங்களிலும் எனப் பல்வேறு இடங்களில் மழைபெய்து உண்டான வெள்ளம் பள்ளங்களில் தேங்கி இருப்பதுபோல ஆங்காங்கே காட்சியளிக்கின்றமை காண்போரின் கண்களிலிருந்து கண்ணீரை வரவழைக்கின்றது.

குறிப்பாக ஒரு வீட்டில் ஐம்பது வயதை அண்மித்தவுடனேயே வயதாகிவிட்டது என முத்திரை குத்தி முதியோர் இல்லத்தில் முதியோர்களைச் சேர்ப்பது இந்தக் காலத்திலுள்ள பலருக்குப் பிடித்தமான பொழுதுபோக்காகிவிட்டது. மூத்தபிரஜை ஒருவர் வீட்டில் இருக்கின்றமையால் குடும்பத்தில் எத்தகையோருக்கும் எதுவித துன்பமும் ஏற்படப்போவதில்லை. ஆனால் தற்போது வயதானவுடன் அந்த முதியோர்களைப் பராமரிக்கச் சிரமமாக வுள்ளதெனக் கூறிச் சிலர் வீட்டுக்கு வேலைக்காரர்களையும் நியமிப்பது உண்டு.

இத்தகையவர்கள் ஒரு நிமிடம் சிந்தித்துப் பார்த்தால் அவர்களுக்குத் தாங்கள் செய்வதே கசப்பான விடயமென்று உணர்வார்கள். நாம் பிறக்கும் போது எம்மைப் பெற்றவர்கள் கண்ணை இமைகாப்பது போல் காக்கின்றார்கள். நாம் அழும்போதும், சிலவேளையில் தவறுதலாக விழும்போதும் நம்மைத் தாங்குபவர்களாகவும் தேற்றுபவர்களாகவும் உள்ள கண்கண்ட தெய்வங்களை நன்றிக்கடன் மறந்து அவர்களை வீட்டைவிட்டுப் புறந்தள்ளி தாம் மட்டும் மகிழ்வாக வாழ்வதனால் எதுவித சுகத்தையும் காணப்போவதில்லை. சிலர் சொத்து சுகங்களுக்காக முதியோர்களைத் தனிமையில் வாழவிடுவதும், கொலை செய்வதும் தற்காலத்தில் சர்வசாதாரணமானதொரு விடயமாகக் காணப்படுகின்றது.

**இயல்பானது இயற்கையானது**

முதுமை என்ற சொல்லைக் கேட்டவுடன் எம்மில் பலருக்கு வருத்தமும் கவலையும் உண்டாவது இயல்புதான். ஏனெனில் முதுமை ஏற்பட்டால் தம் உடல் அழகிழந்து தம் உடலுள் வலிமை இழந்து கொடும் நோய்களுக்காளாகி மரணமடைந்து விடுவோமோ என்று பயப்படுபவர்கள்தான் ஏராளம். எனவேதான் முதுமைக்கு முகம்கொடுக்க மறுக்கின்றார்கள்.



மனிதருக்கு
பிறப்பு – இறப்பு, இன்மை
– மறுமை போன்றே
இளமையும் முதுமையும்
இத்தகையவற்றை எம்
வாழ்விலிருந்து களைய
முடியாது. இவை நம்முடன்
பின்னிப்பிணைந்துள்ளன.

மனிதருக்கு பிறப்பு - இறப்பு. இன்மை - மறுமை போன்றே இளமையும் முதுமையும்; இத்தகையவற்றை எம் வாழ்விலிருந்து களையமுடியாது. இவை நம்முடன் பின்னிப்பிணைந்துள்ளன. இளமையில் நாம் முயற்சிசெய்து தோற்றுப்போய் முதுமையில் சாதித்துக்காட்டிய சாதனையாளர்களும் இப்புவியிலிருக்கின்றமையால் முதுமையும் ஒரு புதுமையே.

பெரியோர்களுடைய ஆற்றலையும், வலிமையையும், அனுபவத்தையும் கண்கூடாக நோக்கியே அன்றைய பெரும்புலவர்களுள் ஒருவரான ஔவைப்பிராட்டி தன்னுடைய ஆத்திசூடியில் "பெரியாரைத் துணைக்கோள்' என்றும் 'மூத்தோர் சொல்வார்த்தை அமிர்தம்' என்றும் மானிடருக்கு இடித்துரைப்பதைக் காணலாம். இதன் மூலம் முதியோருடைய ஒவ்வொரு கருத்தும் ஆழ்மனதிலிருந்து வெளிவரும் காரணத்தினால் அவை தேவர்களுக்கும் எட்டாத அமிர்தமாகக் காட்சியளிக்கின்றன.


இதுமட்டுமன்றி மூத்தோர் சொல் வார்த்தைகளை மறக்க வேண்டாமென உலகநீதியும் இன்று எடுத்தியம்புவதைக் காணலாம். இவற்றோடு வள்ளுவப்பெருந்தகை திருக்குறளில் நாற்பத்தைந்தாவது அதிகாரமாக 'பெரியோரைத் துணைக்கோடல்' எனும் அதிகாரத்தையும் வைத்துள்ளார். அதில் பெரியோர்களைத் துணையாகக் கொள்வதால் ஏற்படும் நன்மைகளை இனிது திறம்பட விளக்கியிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

"பல்லார் பகைகொளலின் பத்தடுத்த
சுமைத்தே
நல்லார் தொடர்கை விடல்"

என்கிறார் வள்ளுவர். அதாவது நல்அறிவுரை கூறும் நற்பெரியாரது நட்பைக் கைவிடுதல் பலருடைய பகையைத் தேடிக்கொள்வதிலும் பார்க்கப் பத்துமடங்கு தீமை உடையது என எச்சரித்துக் குறிப்பிடுகின்றார்.

எனவே எல்லாவகையான விடயங்களையும் ஆராய்ந்து நோக்கும்போது மண்ணில் பிறந்த நாம் அனைவரும் நம்முடன் கூட இருக்கும் முதியோரை நன்றாகக் கவனித்தால் நமக்கு மேலிருக்கும் இறைவன் எம்மையும் நன்றாகக் கவனித்துக் கொள்வான் எனப்புரிந்து கொண்டு எம்மை ஏணிப்படியாக உயர்த்துவதற்கு நாம் அடையாத்துன்பம் அடைந்து மெழுகுதிரி போல் தம் வாழ்வை எமக்காக உருக்கித் தந்த மூத்தோரை போற்றுவோம்; வணங்குவோம்.

கலாநிதி திருமதி சுபாஜினி உதயராசா
சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக் கழகம்



# ஈரநிலங்களை பாதுகாத்து இயற்கை சமநிலையை பேணுவோம்!

புவிமேற்பரப்பில் பல்வேறுபட்ட இயற்கைச் சூழற் தொகுதிகள் காணப்படுகின்றன. அவற்றினை நாம் நீர்சார் சூழற் தொகுதிகள் எனவும், நிலம் சார் சூழற் தொகுதிகள் எனவும் இரண்டு வகையாக பாகுபடுத்தலாம். நிலம் சார் சூழல் தொகுதி எனும்போது காடுகள், புல்நிலங்கள், வயல்வெளிகள், பூந்தோட்டங்கள், பாலைவனங்கள் என்பவற்றைக் கூறலாம். நீர்சார் சூழற்தொகுதி எனும்போது ஆறுகள், குளங்கள், சமுத்திரங்கள், ஏரிகள், கடல்கள், ஈரநிலங்கள், பொங்குமுகங்கள் என்பன உள்ளடக்கப்படுகின்றன. அந்த வகையில் நீர்ச்சூழல் தொகுதியில் உள்வாங்கப்படும் ஓர் அம்சமாக ஈரநிலங்கள் அமைகின்றன. இத்தொகுதிகள் புவி மேற்பரப்பில் பல்வேறுபட்ட அங்கிகளுக்கு ஆதாரமாக விளங்குவதோடு, இயற்கைச் சமனிலையைப் பேணும் ஒரு களமாகவும் தொழிற்படுகின்றது. இவ்வாறான ஈரநிலங்கள், அதன் பரம்பல், அதன் வகைகள், அவற்றின் முக்கியத்துவம், சூழலில் அவை எதிர் நோக்கும் பிரச்சினைகள், அவற்றிலிருந்து ஈரநிலங்களைப் பாதுகாப்பதற்கான முகாமைத்துவ நடவடிக்கைகள், இலங்கையில் ஈரநிலங்கள் போன்ற விடயங்களை இக்கட்டுரை ஆராய்கின்றது.

**ரம்சார் உடன்படிக்கையும் உலக ஈரநில தினமும்**

'ரம்சார்' என்பது ஈரான் நாட்டின் ஒரு நகரமாகும். 1971ஆம் ஆண்டு இந்த நகரில் முக்கியமான



தொரு சர்வதேச உடன்பாடு எட்டப்பட்டது. அதுதான் 'ஈரநில உடன்படிக்கை' ஆகும். பூமியின் மொத்த நிலப்பரப்பில் 6 சதவீதமாக உள்ள ஈரநிலங்களைப் பாதுகாத்துக் கொள்ளவென ஏற்படுத்தப்பட்ட இந்த உடன்படிக்கையே 'ரம்சார் உடன்படிக்கை' என்று பிரபல்யம் பெற்றுள்ளது. 1971ஆம் ஆண்டில் செய்து கொள்ளப்பட்ட ரம்சார் உடன்படிக்கையின் படி, அந்த உடன்படிக்கையினை நடைமுறைப்படுத்துவதற்குச் சர்வதேசப் பிரஜைகளின் கவனத்தை ஈர்ப்பது அவசியமாகும். அதனையிட்டு, 1997ஆம் ஆண்டு 'உலக ஈரநிலதினம்' பிரகடனப்படுத்தப்பட்டது. அன்று முதல் ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி 2ஆம் திகதியில் 'உலக ஈரநில தினம்' கடைப்பிடிக்கப்படுகிறது. 2020ஆம் ஆண்டு உலக ஈரநில தினத்தின் சர்வதேச ஆய்வுப் பொருள் 'ஈரநிலங்களும் உயிர்பல்வகைமையும்' என்பதாகும்.

**ஈரநிலங்களின் பரம்பல்**

ஈரநிலங்களின் பரம்பலானது இடத்திற்கிடம் வேறுபட்டுக் காணப்படுகின்றது. அதாவது குறைவாக விருத்தியடைந்த நாடுகளிலேயே இவை அதிகமாகக் காணப்படுகின்றன. குறிப்பாக இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளில் அதிக ஈரநிலங்கள் பரம்பிக் காணப்படுகின்றன. இவற்றினைத் தவிர ஐக்கிய அமெரிக்கா, கனடா, அலாஸ்கா, ஆபிரிக்கா, தென்மத்திய பிறேசில் போன்ற நாடுகளிலும் ஓரளவிற்குப் பரம்பிக் காணப்படுகின்றன. உலகிலேயே மிகப்பெரிய ஈரநிலங்கள் காணப்படும் இடமாகத் தென்மத்திய பிறேசில் காணப்படுகின்றது. பங்களாதேஷில் காணப்படும் ஈரநிலங்களை 'சுந்தர்பண்ட்ஸ்' என சிறப்பாக அழைக்கின்றனர். இலங்கையிலும் பல்வேறு வகையான ஈரநில வகைகள் காணப்படுகின்றன. அதாவது ஆழமற்ற குடாக்களையும், நீரிணைகளையும் கொண்டவை மற்றும் கடனீரேரிகள் கரையோரத்தை அடுத்துக் காணப்படும் தீவுகள், பாறைக் கடற்கரைகள், நீர்த்தேக்கப் பகுதிகள், சதுப்பு நிலங்கள், வெள்ளச் சமவெளிகள், பொங்கு முகங்கள், வில்லுகள் போன்ற வடிவங்களில் ஈரநிலங்கள் பரந்து காணப்படுகின்றன.

**ஈரநிலங்களின் முக்கியத்துவம்**

ஈரநிலங்களில் பலதரப்பட்ட உயிரினங்களைக் காண முடியும். பல ஈரநில உயிரினங்களுக்கு இப்பிரதேசங்கள் இருப்பிடமாக இருப்பதே இதற்குக் காரணமாகும். அங்கு வசிக்கும் உயிரினங்களுக்கும் வசிக்காத உயிரினங்களுக்கும் தேவையான உணவுகள் ஈரநிலங்களில் காணப்படுகின்றன. மண்ணில் காற்று குறைவடையும்போது அதற்கு ஈடு கொடுக்கும் வகையிலான விசேட ஏற்பாடுகள் இங்குள்ள தாவரங்களில் உண்டு. நன்னீரிலும், களப்பிலும் வசிக்கும் நத்தைகள், வண்ணத்துப்பூச்சிகள், இறால்கள், சிங்கி இறால்கள், மீன் இனங்கள், பட்சிகள், பாலூட்டிகள், ஈரூடகவாழிகள், ஊர்வன என்பனவும் ஈரநிலங்களுக்கு உரியனவாகும். ஈரநிலங்கள் சுற்றுலாப் பறவைகளுக்கும் தற்காலிக இருப்பிடமாக உள்ளன. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த ஈர நிலங்கள் மனிதனுக்கு பல்வேறு வழிகளில் பயன்பட்டு வருகின்றன. இவை சில வேளைகளில் மனிதனுக்கு நேரடியாக பயன்பட்டு வருகின்ற அதே வேளை மறைமுகமாகவும் சில சமயங்களில் பயன்பட்டு வருகின்றன.

**ஈரநில முகாமைத்துவம்**

ஈரநிலங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு முதன்மைக் காரணங்களாக இருப்பவை சனத்தொகை அதிகரிப்பும், காணித் தேவைகளுக்கான அழுத்தமுமே ஆகும். சூழல் முகாமைத்துவத்துக்கும், அபிவிருத்திக்கும் பொறுப்பாயிருக்கக் கூடிய நிறுவனங்கள், காணி துண்டாடுதல் மூலம் நிலப்பாவனையைத் திட்டமிடுவதால் இந்த நிலைமை மேலும் மோசமாக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கு உரிய சட்டங்கள் பல தரப்பட்டவையாக இருப்பதோடு தனித்தனி நிறுவனங்களுக்குரிய பொறுப்புக்களாகவும் உள்ளன. ஈரநிலங்களைப் பாதுகாப்பதற்கு பல்வேறுபட்ட நடவடிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஈரநிலங்களின் முக்கியத்து வம் பற்றி மக்களிடையே எடுத்துக்கூறி விழிப்புணர்வை ஏற்படுத்துதல், முருகைக் கல் அகழ்தல் மற்றும் கண்டல் தாவர அழிப்பு போன்றவற்றை தடை செய்தல், பாடசாலை மட்டத்திலும், பல்கலைக்கழக மட்டத்திலும் ஈரநிலங்கள் தொடர்பான கருத்தரங்குகள், விவாதங்களை நடத்துதல், ஈரநிலங்களைப் பாதுகாப்பதற்கென அரசாங்கம் மானிய உதவிகளை வழங்குதல், கரையோர மணல் அகழ்வு நடவடிக்கைகளை தடைசெய்தல் என்பன அவற்றுள் சில.

**இலங்கையில் ஈரநிலங்கள்:**

இலங்கையிலுள்ள ஈரநிலங்களை நோக்கும் போது, 2013ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் வரையில் இலங்கையில் ஆறு ஈரநிலங்கள் ரம்சார் ஈரநிலங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அவை பூந்தல தேசிய வனம், ஆனவிழுந்தாவ வாவிகள் தொகுதி, மாதுகங்கை, வங்காலை சரணாலயம், குமண - குடும்பிகல சரணாலயம் வில்பத்து சரணாலயம் என்பனவாகும்.

இயற்கைச் சூழல் தொகுதியில் உள்வாங்கப்படுகின்ற ஈரநிலங்களானது சூழல் அங்கிகளின் வாழ்க்கைக்கு ஆதாரமாக அமைவதோடு உயிரினப் பல்வகைமையினையும் பாதுகாக்கும் ஓர் இடமாகவும் தொழிற்படுகின்றது. அத்துடன் மனிதனுக்கு பல்வேறு வழிகளிலும் அதாவது நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவிவருகின்றது. எனவே ஈரநிலங்களானவை உண்மையில் வெறும் ஈரநிலங்கள் மட்டுமல்ல என்பதையும் அவை சூழலில் பன்மடங்கு பெறுமதிமிக்கவை என்பதையும் இதன் மூலம் அறிய முடிகின்றது. எனவே ஈரநிலங்களைப் பேணி பாதுகாத்து இயற்கைச் சமநிலையை பேண உதவியாக இருப்பது நம் அனைவரினதும் பொறுப்பாகும்.



## சந்தேகம்

சரீரத்துள் ஓடுவது – எம்
சகலர்க்கும் ஒருதிரம்
சந்தேகம் மட்டும்
சகதியாய் வந்தே

சரித்திட்டே உறவுகளை
சரித்திரத்தை மாற்றிவிட்டு
சகலரின் மனதினிலும்
சச்சரவை தருவதேனோ?

சமூகப் பிராணியான மனிதன்
சந்தேகப் பிராணியாய்
சமூகத்தில் திரிவதற்கு
சரியான காரணமேதோ?

உறவு எனும் சூரியனின்
பாசம் எனும் ஒளியை
மறைக்கின்ற
சந்தேகக்கார் முகிலை
அகற்றுவது எப்போதோ?

நம்மைகள் நடப்பதற்காய்
நாள் குறிக்கும் நாம்
நல்லதொரு எதிர்காலத்தினை
நாடுவது எப்போதோ?

தமிழ்மதி

# இந்த வார ராசிபலன்

02.02.2020 முதல் 08.02.2020 வரை

## மேடம்

பெரும்பான்மை கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளனர். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். புதிய திட்டங்களை செயல்படுத்துவீர்கள். வாகனத்தில் பராமரிப்பு செலவு கூடும். பிள்ளைகள் விரும்பிய பொருளை வாங்கித்தருவீர்கள். எதிரியால் உருவான தொந்தரவு மறையும். மனைவி உங்களின் நல்ல குணத்தை பாராட்டுவார். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடப்பதற்கான சூழல் உருவாகும். தொழில், வியாபாரம் வளர்ச்சி அடைந்து தாரான பணவரவு கிடைக்கும். பெண்கள் நினைத்தது நடக்க இஷ்ட தெய்வ வழிபாட்டை நடத்துவர். மாணவர்கள் படிப்பில் சிறந்து நண்பருக்கும் உதவுவர்.

## இடபம்

சந்திரன், புதன் நற்பலன் தருவர். சமூக நிகழ்வுகள் மனதிற்கு அதிருப்தியை ஏற்படுத்த லாம். தாமதமான பணி புதிய முயற்சியால் நிறைவேறும். வாகனப் பயன்பாடு அளவுடன் இருக்கும். பிள்ளைகளின் செயலில் திறமை வெளிப்படும். நண்பரிடம் கடனாக கொடுத்த பணம் கிடைக்கும். உணவுக் கட்டுப்பாட்டின் மூலம் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவீர்கள். விஷப்பிராணிகளிடம் விலகுவது நல்லது. மனைவியின் ஆர்வமிகு செயலில் சிறு குளறுபடி ஏற்படலாம். தொழில், வியாபா ரத்தில் மறைமுக போட்டியால் லாபம் குறையும்.

## மிதுனம்

செவ்வாய், குரு, சுக்கிரன், சந்திரனால் கூடு தல் நற்பலன் கிடைக்கும். சிறு செயலையும் நேர்த்தியாக செய்வீர்கள். தாய்வழி உறவினர்கள் விரும்பி வந்து சொந்தம் பாராட்டுவர். பிள்ளைகள் பெற்றோரிடம் அன்பு, பாசத்துடன் பழகுவர். குடும்பத் தேவைக்கான பணம் தாராளமாக கிடைக்கும். எதிரிகள் தந்த சிரமங்கள் மறையும். மனைவி கருத்து ஒற்றுமை யுடன் குடும்ப நலன் பேணுவார். நண்பர்களுடன் விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் விற்பனை செழித்து சேமிப்பு கூடும். பணி யாளர்களுக்கு நிர்வாகத்திடம் நற்பெயர் கிடைக்கும்.

## கடகம்

புதன், கேது, சனீஸ்வரர், சுக்கிரனால் கூடுதல் நன்மை கிடைக்கும். மனஉறுதியுடன் பணிபுரிவீர்கள். பணவரவு தாராளமான அளவில் இருக்கும். உடன்பிறந்தவர்களுக்குத் தக்க சமயத்தில் உதவுவீர்கள். சமூகத்தில் அந்தஸ்து கூடும். பிள்ளைகள் பெற்றோரின் அறிவுரையை மதித்து செயல்படுவர். எதிரியிடம் இருந்து விலகுவது மிகுந்த நன்மை தரும். மனைவியின் அன்பு, பாசம் மனதில் நெகிழ்ச்சியை தரும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சீராக இருக்கும். பணியாளர்கள் அதிக நிபந்தனை யுடன் கடன்பெற வேண்டாம். மாணவர்கள் அபார ஞாபகத் திறனால் படிப்பில் சிறந்து விளங்குவர்.

## சிம்மம்

சூரியன், ராகு, குரு, சந்திரன் அதிர்ஷ்ட பலன் வழங்குவர். குடும்பத்திற்கான தேவை அதிகரிக்கும். வாகனப் பயணம் அளவுடன் இருக்கும். பிள்ளைகளின் அதிருப்தி எண்ணங்கள் மறைந்து பாசம் கூடும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி உண்டாகும். அரசியல்வாதி களுக்கு வழக்கு, விவகாரத்தில் வெற்றி கிடைக்கும். மனைவியின் கருத்துக்களை ஏற்பது மிகுந்த பயன் தரும். தொழிலில் உள்ள அனுகூலம் பாதுகாக்க வேண்டும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டங்களை தவறாமல் பின்பற்றவும். பெண்கள் தாய் வீட்டு உதவியை கேட்டுப்பெறுவர். மாணவர்கள் அக்கறையுடன் படித்தால் நல்ல மதிப்பெண்களை பெறலாம்.

## கன்னி

செவ்வாய், புதன், சந்திரன் சுபபலன் தருவர். மனதில் தோன்றும் புத்துணர்வால் பணிகளை சிறப்பாக நிறைவேற்றுவீர்கள். உங்களின் நற்செயல் நண்பரின் பாராட்டை பெறும். வெளியூர் பயணம் இனிய அனுபவத்தை தரும். பிள்ளைகளின் தகுதி, திறமை வளர தூண்டுகோலாக செயல்படுவீர்கள். பூர்வ புண்ணிய பலன் குடும்பத்திற்கு துணை நிற்கும். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியிடம் குடும்ப விவகாரம் பற்றிய பேச்சை தவிர்ப்பது நல்லது. தொழில், வியாபாரம் செழித்து லாபம் அதி கரிக்கும். பணியாளர்களுக்கு கூடுதல் சலுகை கிடைக்கும்.

## துலாம்

சனீஸ்வரர், கேது, சுக்கிரன், சந்திரன் ராஜயோக பலனை வழங்குவர். முக்கியஸ்தரின் உதவி கிடைக்கும். திறமைகளை வளர்த்துக் கொள்வீர்கள். வாகனப் பயணம் எளிதாக அமையும். பிள்ளைகளின் எதிர்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். எதிரியால் இருந்த தொல்லை விலகும். மனைவியின் ஜாதகம் கூடுதல் பலனை தரும். குடும்பத்தில் ஒற்றுமை வளர்ந்து மகிழ்ச்சி மலரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியுடன் லாபமும் அதிகரிக்கும். பணியாளர்கள் அயராத முயற்சியினால் நிர்வாகத்திடம் நற்பெயர் எடுப்பர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்குவர்.

## விருச்சிகம்

சூரியன், புதன், குரு, சுக்கிரன், சந்திரனால் வியத்தகுநற்பலன்கிடைக்கும். கடும்உழைப்பினால் பணி சிறக்கும். உடன்பிறந்தவர் தக்க சமயத்தில் உதவுவர். வெளியூர் பயணம் அதிகரிக்கும். பிள்ளைகள் படிப்பு, வேலையில் அபார முன்னேற்றம் காண்பர். பூர்வ சொத்துக்களில் தாராள பணவரவு கிடைக்கும். மனைவி உங்களின் கருத்துக்களை ஏற்று செயல்படுவார். நண்பருடன் விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி செய்வீர்கள். பணியாளர்கள் நிர்வாகத்திடம் எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் நல்ல முன்னேற்றம் காண்பர்.

## தனுசு

சந்திரன், சுக்கிரன் அனுகூல பலன் தருவர். மன தில் உற்சாகம் குறையாமல் செயல்படுவீர்கள். பணி கள் நிறைவேற அதிக உழைப்பு தேவைப்படும். உறவி னர்களிடம் விவாதம் செய்ய வேண்டாம். வெளியூர் பயணங்களில் பாதுகாப்பை பின்பற்றுவது நல்லது. பிள் ளைகள் பெற்றோர் சொல்லை தயக்கமுடன் ஏற்றுக்கொள் வர். வழக்கு, விவகாரங்களில் சமரச முயற்சி நன்மை தரும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மனைவி அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வார். பணியாளர் கள் குறிப்பிட்ட காலத்தில் பணி இலக்கை நிறைவேற்றுவர். மாணவர்கள் படிப்பில் அக்கறை கொள்வர்.

## மகரம்


சுக்கிரன், ராகு, செவ்வாய், சந்திரன் கூடுதல் நற்பலன் தருவர். எல்லோரிடமும் நற்பெயர் எடுப்பீர்கள். தாயின் அன்பு, ஆசி துணை நிற்கும். பிள்ளைகளுக்கு நல்வழிகாட்டியாக செயல்படுவீர்கள். உடல் நலனில் அக்கறை கொள்வது மிகுந்த பயனளிக்கும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் தந்து மகிழ்ச்சியில் ஆழ்த்துவீர்கள். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளவும். தொழில் அபிவிருத்திக்காக அதிக நிபந்தனையுடன் கடன் பெற வேண்டாம். பணியாளர்கள் கூடுதல் வேலை யையும் எளிதாக முடிப்பர். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்த பெண்கள் தாமாக முன்வந்து ஏற்பாடுகளைச் செய்வர்.

## கும்பம்

குரு, சனீஸ்வரர், சுக்கிரன், கேது, சந்திர னால் நன்மை உண்டாகும். நண்பர்களின் மனம் அறிந்து பேசுவீர்கள். சமூகத்தில் மதிப்பு, மரி யாதை கூடும். வாகனத்தில் மிதவேகத்தை பின்பற்ற வும். பிள்ளைகள் தாய் கூறும் அறிவுரையை ஏற்று செயல்படுவர். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி அதிகரிக் கும். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். மனைவி வழி சார்ந்த உறவினர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு பணவ ரவு திருப்திகரமாக இருக்கும். பணியாளர்கள் பணி இலக்கை எளிதில் நிறைவேற்றுவர். மாணவர்கள் படிப்பில் சிறப்பான இடம் பெறுவர்.

## மீனம்

சூரியன், சுக்கிரன், சந்திரனால் கூடுதல் நற்ப லன் கிடைக்கும். உங்களின் நற்செயலை கண்டு நண்பர்கள் பெருமை கொள்வர். உடன்பிறந்தவர்க ளின் அன்பு, பாசம் நெகிழ்ச்சி தரும். திட்டமிட்ட செயல் எதிர்பார்த்தபடி நிறைவேறும். வீடு, வாக னத்தில் பாதுகாப்பு அவசியம். பிள்ளைகள் சில விஷயங்க ளில் குழப்பம் அடைவர். உடல் ஆரோக்கியம் மேம்படும். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவியின் ஆலோசனை நம்பிக்கை தரும். தொழில், வியாபாரத் தில் உருவாகும் போட்டியை எளிதாக சரி செய்வீர் கள். பணியாளர்கள் பணியிடச் சூழல் உணர்ந்து செயல்படுவர். மாண வர்கள் படிப்புடன் கலைகளும் பயில்வர்.





# ஏன் இந்த இடமாற்றம்?

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையாற்றிவந்தவரும், நாட்டிலிருந்த ஒரேயொரு முஸ்லிம் மாவட்டச் செயலருமான ஐ.எம்.ஹனிபா, திடீரென பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் நிந்தவூர் பிரதேசசபையின் மாதாந்த அமர்வில் பெரும் கவலையும், விசனமும் தெரிவிக்கப்பட்டதுடன், இந்த இடமாற்றம் தொடர்பில் மீள் பரிசீலனை செய்யுமாறு ஜனாதிபதியைக் கோரும் தீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. முஸ்லிம் சமூகத்தை ஓரங்கட்டவும். பழிவாங்கவும் எடுக்கப்பட்ட நடவடிக்கையா இந்த இடமாற்றம்? என்று பிரேரணையை முன்மொழிவில் உரையாற்றிய உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர். சபை அமர்வுக்குத் தலைமை தாங்கிய தவிசாளர் எம்.ஏ.எம்.தாஹிர் இது தொடர்பாக பிரேரணை முன்மொழிந்து உரையாற்றுகையில், சுமார் 30 வருடங்களுக்குப் பின்னர் கடந்த நல்லாட்சி அரசில் முஸ்லிம் சமூகம் பெருமைப்படும் வகையில் வவுனியா அரசாங்க அதிபராக ஐ.எம்.ஹனிபா நியமிக்கப்பட்டிருந்த போதிலும் முஸ்லிம் சமூகத்தை ஓரங்கட்டும் வகையில் எந்த இடமாற்றம் இடம்பெற்றுள்ளது என்று தெரிவித்தார்.

# ஷைரீனுக்கு கௌரவம்!



இந்தோனேஷியாவில் நடைபெற்ற சர்வதேச விஞ்ஞான ஆராய்ச்சி போட்டியில் முதலிடம் பெற்றுத்தங்கப் பதக்கம் வென்ற கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மாணவி பாத்திமா ஷைரீன் மௌலானாவுக்கு கல்முனை மாநகரசபை பாராட்டு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி கௌரவித்துள்ளது.


கல்முனை மாநகர சபையின் மாதாந்த அமர்வுமேயர் சிரேஷ்ட சட்டத்தரணிஏ.எம்.றகீப்தலைமையில் நடைபெற்ற போது சாதனை மாணவி ஷைரீனை சபை சார்பில் பாராட்டிக் கௌரவிக்கும் பிரேரணையை முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் சிரேஷ்ட சட்டத்தரணி ஆரிகா காரியப்பர் சபையில் முன் மொழிந்து உரையாற்றியதுடன் பிரேரணை ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது.

**சாதனைகளுக்கு கௌரவம் கொடுப்போம்**

அனார்கலி

# தென்கிழக்கு திசையில் இருந்து....





## புதிய உறுப்பினர்கள்!

கல்முனை மாநகர சபையின் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பிலான புதிய உறுப்பினர்களாக வடிவேல்கரசு சந்திரன், குஞ்சித் தம்பி விஜயலெட்சுமி ஆகியோர் நியமிக்கப்பட்டு மாநகர மேயர் சட்டத்தரணி ஏ.எம்.றகீப் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளனர்.

கல்முனை மாநகர சபையின் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் உறுப்பினர்களாகப் பதவி வகித்துவந்த பிரதி முதல்வர் காத்தமுத்து கணேஷ், மற்றம் சுமித்திரா ஜெகதீஸன் ஆகிய இருவரும் கட்சியால் பதவி விலக்கப்பட்டதையடுத்து ஏற்பட்ட வெற்றிடங்களுக்கே மேற்படி இருவரும் புதிய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**புதியன புகுதலும் பழையன கழிதலும்!**



## குருதி கொடை

நிந்தவூர் ஜாமி உத்தௌஹீத் ஜும் ஆ பள்ளிவாசல் சமூக சேவைகள் பிரிவு பத்தாவது தடவையாக குருதிக் கொடைமுகாம் ஒன்றைப் பள்ளிவாசல் வளாகத்தில் நடத்தியது. பள்ளி வாசல் தலைவர் மௌலவி இத்ரீஸ்ஹஸன் (ஸஹ்வி) தலைமையில் நடைபெற்ற இந்த முகாமில் பெருந்தொகையானோர் கலந்துகொண்டனர்.

**குருதி கொடுப்போம்,
உயிர்கள் காப்போம்!**

## தெருவெல்லாம் நெல்மணிகள்!

அம்பாறை மாவட்டத்தில் தற்போது பெரும்போக நெல் அறுவடை மும்முரமாக இடம்பெற்றுவரும் நிலையில், அறுவடை நெல்லை வெய்யிலில் உலர்த்தி சேமித்து வைப்பதில் விவசாயிகள் ஆர்வம்காட்டி வருகின்றனர்.

இந்த மாவட்டத்தில் நெல்விலை விவசாயிகள் எதிர்பார்த்த வகையில் உயர்ச்சி அடையாததால் நெல்லைசேமித்துவைக்கும்நோக்கில்கிராமங்கள் தோறும் உள்ளூர் வீதிகளிலும், கடற்கரைப் பிரதேசங்களிலும் அறுவடை நெல்லைப் பரப்பி வெயிலில் உலர வைப்பதில் பெருமளவான விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இந்த நடவடிக்கை பொதுமக்களின் நடமாட்டங்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துவதையும் காணக்கூடியதாகவுள்ளது.



## எதிர்ப்பு, எதிர்ப்பு!!

சிறுபான்மையினரின் குரல்வளையை நசுக்கும் நோக்கில், நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசமைப்பின் 21ஆவது திருத்த சட்ட மூலத்திற்கான பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று கல்முனை மாநகரசபையின் மாதாந்த அமர்வில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்முனை மாநகரசபையின் மாதாந்த அமர்வு கடந்த வாரம் இடம்பெற்றபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகர சபை உறுப்பினர் ஹென்றி மகேந்திரன் தீர்மானத்திற்கான பிரேரணையை முன்மொழிந்தார்! விஜேதாஸ ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள இது தொடர்பான பிரேரணையை தோற்கடித்து, முறியடிப்பதற்கான அத்தனை முயற்சிகளும் முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**குரல்வளையை நசுக்கவிடாது
குரல் எழுப்புவோம்!**



## ஊடகர்களுக்கு ஓய்வூதியம்!

ஊடகவியலாளர்களுக்கான ஓய்வூதியத்திட்டம் ஒன்றை வகுத்து நடைமுறைப்படுத்துவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமெனக் கோரும் தீர்மானம் ஒன்றை அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனம் நிறைவேற்றியுள்ளது.

சம்மேளனத்தின் சிறப்புக் கூட்டம் ஒன்று சம்மேளனத் தலைவர் கலாபூஷணம் மீரா. எஸ். இஸடீன் தலைமையில் நற்பிட்டிமுனை அல். அக்ஸா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

**ஜனநாயகம் காக்க உழைப்பவர்களுக்கு
ஓய்வூதியம் இல்லையே!**

# முடி உதிர்வதைத் தடுக்கும் இயற்கை வைத்தியக் குறிப்புகள்



கசகசாவை பாலில் ஊறவைத்து, அரைத்து அத்துடன் பாசிபருப்பு மாவைக் கலந்து தேய்த்து வர முடி உதிர்தல் நிற்கும். கற்றாழை சாறில் தேங்காய் எண்ணெய் கலந்து தேய்த்தால் முடி உதிராது அடர்த்தியாகவும் நன்றாகவும் வளரும். அத்துடன் தலையும் குளிர்ச்சியாகும்.

சிறிய வெங்காயத்தின் சாறை எடுத்து தலையில் தேய்த்து ஊறவைத்து குளித்தால் முடி உதிராது. முடி கொட்டிய இடத்தில் ஐஸ் கட்டியை தடவினால் முடி வளரும்.


செம்பருத்தி பூவுடன் தேங்காய் எண்ணெய் கலந்து தலையில் தேய்த்தால் முடி உதிராது அத்துடன் கூந்தல் கருமையாகவும் மாறும்.

முட்டை வெள்ளை கருவை தலையில் தேய்த்து 10 நிமிடம் கழித்து சிகைகாய் வைத்துக் குளித்தால் தலை முடி உதிர்வது சுத்தமாக நின்று விடும்.

வாரம் ஒரு முறை முடக்கத்தான் கீரையை அரைத்து தலையில் தேய்த்து 5 நிமிடம் ஊறியதும் குளிக்கவும். இதுபோல் தொடர்ந்து மூன்று மாத காலம் குளித்து பார்க்கவும். முடி கொட்டுவது நின்று விடும் அதுமட்டும் அல்ல இந்தக் கீரை நரை விழுவதை தடுக்கும். கருகருவென முடி வளர த்தொடங்கும்.

# வெள்ளரிக்காய்

## சாப்பிடுவதால் ஏற்படும் நன்மைகள்



காய்கறிகளிலேயே குறைவான கலோரி அளவைக் கொண்டிருப்பது வெள்ளரிக்காய் தான்.

அப்படியே உண்ணத் தூண்டும் அளவுக்குத் தனிச் சுவையுடைய வெள்ளரிக்காய் மிகவும் குளிர்ச்சி யானது.

நன்கு செரிமானம் ஆகக்கூடியது, சிறுநீர்ப் பிரிவைத் தூண்டச் செய்வது மட்டுமல்லாமல், இரைப்பையில் ஏற்படும் புண்ணையும், மலச்சிக்கலையும் குணப்படுத்தக்கூடியது.

இக்காய் பித்தநீர், சிறுநீரகம் ஆகியன சம்பந்தப்பட்ட அனைத்துக் கோளாறுகளையும் குணமாக்குவதில் தலைசிறந்து விளங்குகிறது.

அண்மைக்கால ஆராய்ச்சி முடிவுகள், வெள்ளரிக்காய் கீல்வாதம் சம்பந்தப்பட்ட கோளாறுகளையும் குணமாக்குவதில் வல்லமைமிக்க உணவாகத் திகழ்வதையும் நிரூபித்துள்ளன.

100 கிராம் வெள்ளரிக்காயில் 96 சதவிகிதம் ஈரப்பதம் உள்ளது, அது உணவில் உள்ள காரத்தை மட்டுப்படுத்தி இடையில் அடிக்கடி தண்ணீர் அருந்தாமல் சாப்பிட வைக்கிறது.

மீதி நான்கு சதவிகிதத்தில் உயர்தரமான புரதம், கொழுப்பு, மாவுச்சத்து, தாது உப்புகள், கல்சியம், பொஸ்பரஸ், இரும்பு, விற்றமின் 'பி'ஆகியவை அமைந்துள்ளன, விற்றமின் 'சி'யும் சிறிதளவு உண்டு.

சாதாரணமாக வெள்ளரிக்காயைப் பச்சையாகக் கடித்துச் சாப்பிடுவது வழக்கம். இளநீரைப் போன்றே ஆரோக்கிய ரசமாய் வெள்ளரிக்காய்ச் சாறு திகழ் கிறது.

வயிற்றுப்புண் உள்ளவர்கள் இரண்டு மணி நேரத்திற்கு ஒரு தடவை ஆறு அவுன்ஸ் வீதம் வெள்ளரிச் சாறு அருந்தினால் குணம் தெரியும்.

மலச்சிக்கலுக்காகச் சிலர் ஏதாவது ஒரு பழம் சாப்பிடுவார்கள். அதற்குப் பதிலாகத் தினசரி இரண்டு வெள்ளரிக்காய்களைச் சாப்பிட்டால் மலச்சிக்கலின்றி எப்போதும் குடல் சுத்தமாய் இருக்கும்.

நீரிழிவு நோயாளிகளின் எடை குறைய விதையுடன் சேர்த்தே வெள்ளரிக்காய் சாற்றை அருந்த வேண்டும்.

சிறிய வெள்ளரிக் காய் என்றாலும் பெரியவகை வெள்ளரிக்காய் என்றாலும், அதை விதையுடன்தான் அரைத்துச் சாறு அருந்த வேண்டும்.

வெள்ளரியில் தாதுப் பொருள்களான சோடியம், கல்சியம், மக்னீசியம், இரும்பு, பொஸ்பரஸ், கந்தகம், சிலிகன், மற்றும் குளோரின் போன்றவை உள்ளன.

இரத்தத்தில் சிவப்பணுக்களை உற்பத்தி செய்யும் பொட்டாசியம் அதிகம் உண்டு. ஈரல், கல்லீரல் சூட்டைத் தணிப்பதால் நோய் குணமாகும்.



# காலை எழுந்ததும் தண்ணீர் குடிப்பதால் கிடைக்கும் நன்மைகள்

நாம் காலையில் எழும்போது தேநீர் அல்லது கோப்பி மட்டுமே குடிக்கிறோம். அதிலும் சூடான கோப்பி குடிப்போர் பலர். ஆனால் தேநீர் மற்றும் கோப்பிக்கு பதிலாக வெறும் வயிற்றில் தண்ணீர் குடிக்க வேண்டும் என்று பரிந்துரைக்கிறார்கள் மருத்துவர்கள். ஏனெனில் அதிகாலையில் வெறும் வயிற்றில் தண்ணீர் குடித்தால் கிடைக்கும் நன்மைகளில் முதலாவதாக நமது குடல் சுத்தமாகும். அதற்கு தண்ணீர் குடித்தவுடன், சிறிது நேரத்திலேயே மலம் கழிக்கக்கூடும். இப்படி தினமும் தவறாமல் மலம் கழித்தாலேயே, உடலில் உள்ள நச்சுக் கழிவுகள் முற்றிலும் வெளியேறி விடும்.

தண்ணீரானது உடலின் மூலைமுடுக்குகளில் தேங்கியுள்ள நச்சுக்களை சிறுநீர் மூலமாக வெளியேற்றி விடும்.

மேலும் வெறும் வயிற்றில் தண்ணீர் குடித்தால் விரைவில் பசி எடுக்க ஆரம்பித்துவிடும். வெறும் வயிற்றில் தண்ணீர் குடித்தால், இரத்தச் சிவப்பணுக்கள் வளர்ச்சி அதிகரித்து, இரத்தமானது அதிகப்படியான ஒக்ஸிஜனை உள்ளிழுக்கும் இதனால் உடலானது சோர்வாகாமல் அதிக புத்துணர்ச்சியுடன் இருக்கும்.

உடலில் நீர்ச்சத்து குறைவாக இருப்பவர்கள் தினமும் அதிகாலையில் வெறும் வயிற்றில் தண்ணீர் குடித்து வந்தால், உடலின் நீர்ச்சத்தானது அதிகரித்து தலைவலி குறையும். மேலும் அல்சர் போன்ற வயிற்றுப் பிரச்சினை ஏற்படாமல் தடுக்கலாம்.

உடல் எடையை குறைக்க விரும்புபவர்கள், அதிகாலையில் வெறும் வயிற்றில் தண்ணீர் குடித்து வந்தால், உடலில் தங்கியுள்ள நச்சுக்களுடன், தேவையற்ற கொழுப்புக்களும் கரைந்து வெளியேறி, உடல் எடை குறைய உதவியாக இருக்கும். மேலும் உடலின் மெட்டபாலிசம் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். இது நோய்களை எதிர்த்து போராட உதவும், எந்த நோயும் அவ்வளவு எளிதில் நம்மை அண்டாது.

தினமும் தண்ணீரை வெறும் வயிற்றில் குடித்து வந்தால் குடல் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படாது. ஏனெனில் குடலானது சுத்தமாக இல்லாவிட்டால் வயிற்று உபாதைகளை ஏற்படுத்தும். மேலும் முகத்தில் பருக்கள் வர ஆரம்பிக்கும். இப்படி பருக்கள் வந்தால் சருமமானது தனது அழகை இழந்து விடும். தினமும் தண்ணீரைக் குடித்து வந்தால் குடலியக்கமானது சீராக நடைபெற்று, முகம் பருக்களின்றி பொலிவுடன் காணப்படும்.

தினமும் அதிகாலையில் தேநீர், கோப்பி போன்றவற்றை தவிர்த்து தண்ணீர் குடிப்போம், ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்வோம்.

# தினமும் எளிய உடற்பயிற்சி

இரண்டு கைகளையும் பக்கவாட்டில் நீட்டி, முன்னும் பின்னுமாக சுழற்றலாம். இதனால் கை தோள்பட்டை வலி கையில் உள்ள சதை குறையும். தோப்புக் கரணம் போடுவது போல் இடுப்பில் கை வைத்து கொண்டு பாதி அளவிற்கு உட்கார்ந்து எழலாம். எல்லாம் ஒரு 5 கவுண்ட் அளவிற்கு செய்யலாம். இது மூட்டு வலிக்கு நல்ல உடற்பயிற்சி.

இடுப்பில் கை வைத்துக் கொண்டு நேராக நின்றுக்கொண்டு இடது வலது புறங்களில் சுற்றலாம். இது கழுத்துக்கு நல்ல உடற்பயிற்சி.

தலையை மட்டும் மேலும் கீழும், இடது வலது புறங்களில் சுழற்றலாம். இது கழுத்துக்கு நல்ல உடற் பயிற்சி,டோர் மேட்களை கையில் துவைக்க வேண்டி வரும். அதை நல்ல சோப்பு தண்ணீரில் ஊற வைத்துவிட்டு கீழே போட்டு நாலு மிதி மிதித்தால், அழுக்கும் போகும் கால் வலிக்கும் ஒரு நல்ல உடற்பயிற்சி கிடைக்கும்.

குழந்தைகளை குளிக்க வைக்க, கீழே ஒரு சின்ன மேசை போட்டு குளிக்க வைக்கலாம்.

கணினி முன் அரை மணி நேரத்துக்கு மேல் உட்காராதீர்கள்.

வாகனங்களில் செல்லும் போது கூட, எங்காவது ஓரமாக நிறுத்தி விட்டு ஐந்து நிமிடம் கண்களை மூடி கண்ணுக்கு ஓய்வு கொடுக்கலாம்.

இரவு தூங்க போகும் போதும், காலை எழும்போதும் உட்கார்ந்து கொண்டு நேராக இரண்டு காலின் பெருவிரலை தொடவேண்டும். இப்படி செய்வதாலும் முதுகு வலி சரியாகும்.



# நண்டு சூப்



**தேவையான பொருள்கள்**

நண்டு - 2
வெங்காயம் - 1
பச்சை மிளகாய் - 2
மிளகு -சிறிதளவு
தக்காளி - 2
கோதுமை மா -1 மேசைக்கரண்டி
உப்பு தேவையான அளவு

**செய்முறை**

நண்டை நன்கு சுத்தம் செய்து அதன் மேல் மஞ்சள் தூள் சேர்த்து கழுவிக் கொள்ள வேண்டும்.

ஒரு சட்டியில் எண்ணெய் விட்டு காய்ந்ததும் கறிவேப்பிலை, வெங்காயம், பச்சை மிளகாய், மிளகு, தக்காளியை வதக்கிக் கொள்ள வேண்டும்.

நன்கு வதங்கிய பின் அதில் நண்டைப் போட்டுத் தேவையான நீர் விட்டு வேக வைக்க வேண்டும்.

வெந்ததும் நண்டைத் தனியே எடுத்துவிட்டு மைதா மாவை நீரில் கரைத்து கொதிக்கும் கலவையில் ஊற்றவும்.

ஒரு கொதி வந்ததும் இறக்கி சூடாக பரிமாறினால் சுவையான நண்டு சூப் தயார்.

கணபதி சர்வானந்தா



"அதி நவீனமயப்படுத்தப்பட்ட தொழில் நுட்ப மேம்பாட்டால் விரைவான விமானப் பயணங்கள் சாத்தியப்படுகின்றன. இதனால் உலகம் சுருங்கிப் போய்விட்டது. எனவே இது போன்ற தொற்று நோய்கள் சில மணித்தியாலங்களுக்குள் ஒருநாட்டைவிட்டு இன்னொருநாட்டுக்குள்ளும் கடத்தப்படும் அபாயம் இருப்பதாக உறுதியாகக் கூறலாம். மனிதர்கள்தான் தங்களை அறியாமல் இதன் கடத்திகளாகச் செயற்படுகிறார்கள். இந்த நோயின் அறிகுறிகளாகச் சாதாரண தொண்டை நோ, தடிமன் போன்றவை இருக்கின்றன. இந்தத் தொற்றால் பீடிக்கப்பட்டவர்களுக்கு முதலில் சுவாசப் பாதிப்பு ஏற்படும். அவ்வாறு பாதிக்கப்படும் 10 பேர்களில் நால்வர் இறப்பதற்கும் வாய்ப்பிருக்கிறது. எனவே அந்த நோய் எமது பிரதேசமான வட மாகாணத்தை வந்தடைய முன்னர் அதற்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகளை நாம் எடுத்தாக வேண்டும். மேற் கூறப்பட்ட நோய்க்கான அறிகுறி தென்படுபவர்கள் உடனடியாக வைத்தியசாலையில் தம்மை அனுமதித்து சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும்"

வைத்திய கலாநிதி சி. யமுனாநந்தா

# கொரோனா



## பேரை கேட்டாலே சும்மா அதிருதில்ல!

உலகத்தை ஒரு புறம் போர் பயம் ஆட்கொண்டிருக்க அதே வீச்சில் மறுபுறம் நோய்த் தொற்று ஒன்று மனித குலத்தை கிலி கொள்ளச் செய்திருக்கிறது. அந்தக் கிலி தரும் நோயின் பேர், கொரோனா. சீனர்களைக் கண்டு தலைதெறிக்க மற்றவர்கள் ஓடுமளவுக்கு கொரோனா பற்றிய அச்சம் எல்லோரையும் பேயைப் போல பிடித்தாட்டுகின்றது.

கடந்த மாதம் கொண்டாடப்பட்ட சீன லுனார் புது வருடத்துக்காகப் பலர் சர்வதேசத்திலும் இருந்து சீனாவுக்கு வந்திருக்கின்றனர். ஜனவரி 30 ஆம் திகதிவரை சீனாவில் காணப்பட்ட புது வருட விடுமுறையைக் காலவரை இன்றிச் சீனா நீடித்திருப்பதோடு, வந்தவர்களில் நாடு திரும்பியவர்களாலேயே பிற நாடுகளுக்கும் கொரோனா நோய்க் கிருமிகள் காவப்பட்டு அங்கும் சில பேர் இந்த நோய் அறிகுறியோடு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் 'வொஷிங்டன் போஸ்ட்' தெரிவிக்கிறது.

"இப்போது சில தினங்களாக நான் வெளியே புறப்படுவதில்லை. வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கிறேன். வீட்டுக்குள்ளேயும் ஒரு மயான அமைதி நிலவுகிறது. எனது குடும்ப அங்கத்தவர்கள் கூட ஒருவரோடு ஒருவர் சரியாகப் பேசுவதும் இல்லை. எனது மனைவி சாப்பிடாமல் தொலைக் காட்சிப் பெட்டிக்கு முன்னால் முடங்கிக் கிடந்தபடி இந்த வைரஸ் தொடர்பான அரச அறிவித்தல்களைச் செவிமடுத்துக் கொண்டே இருக்கிறாள். அவள் தான் வீட்டில் நிலவும் அமைதியை அவ்வப்போது குலைத்து அது பற்றிய செய்தியைச் சொல்லிக் கொள்ளுகிறாள். நிலைமை எவ்வளவு நாளில் கட்டுக்குள் வரும் என்று சொல்லமுடியாதபடி மிகவும் மோசமாக இருக்கிறது." என்கிறார் முதன் முதலாக கொரோனா கண்டுபிடிக்கப்பட்ட சீனாவின் வுஹான் மாகாண நகரவாசியான வாய் குங் .

பொதுவில் பாம்பின் கடிக்குத்தான் மனிதர்களாகிய நாங்கள் பயப்படுவது இயல்பு. தற்போது தோன்றியுள்ள இந்தத் தொற்று நோயான 2019 நொவால் கோரோனா வைரஸ் (2019 - nCoV) பாம்பிலுள்ள ஒரு வைரஸ் கிருமியினால் தொற்றத் தொடங்கியதாகச் சொல்லப்படுகிறது. காடுகளில் வாழும் விரியன் பாம்புகள் ஒரு வித வௌவால்களை உட்கொள்ளுகின்றன. அவ்வகைப் பாம்புகளிலிருந்தே இவ் புதியவகை வைரஸ் தொற்று உருவாகி இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். சாதாரணமாக நஞ்சு குறைந்த விரியன் பாம்புகளை அங்குள்ள மக்கள் உணவாக உட்கொள்ளுவதால் அதனை உண்ட சிலருக்கும் இத்தொற்று நோய் காணப்பட்டதாகவும் சீனச் செய்திகள் சொல்லுகின்றன.


" இந்த வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த இதுவரை எதுவித தடுப்பு மருந்துகளையும் எவரும் கண்டுபிடிக்கவில்லை எனவும் அப்படிக் கண்டுபிடிப்பது உடனடியாகச் சாத்தியமில்லை என்றும் அவ்வாறான முயற்சிக்குக் குறைந்தது ஆறு மாதங்கள் ஆகலாம்" எனவும் ரஷ்யா தெரிவித்திருக்கிறது.

இதற்கு முன்னர் ஒரு முறை சிக்கின் கூனியா என்ற நோய்த் தொற்று உலகத்தை ஆட்டிப்படைத்தது. பின்னர் அதனைத் தொடர்ந்து பறவைக் காய்ச்சல், சார்ஸ், சிகா வைரஸ் என்பனவற்றிற்குப் பின்னர் 2019 ஆண்டின் முடிவு கொரோனா வைரஸ் நோயை மக்களுக்குப் பரப்பி விட்டுச் சென்றுள்ளது. இலங்கையில் ஒரு சீனப்பெண்மணி கொரோனாவல் பாதிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்ட போதும், உரிய சிகிச்சைகளின் பின்னர் அவர் இப்போது அவர் உடல்நலம் தேறியுள்ளார். இருந்தும் இந் நோய்த் தொற்றின் பின்னணியில் ஓர் அரசியலும் புதைந்து கிடப்பதாகச் சொல்லப்படுகிறது.

தொழில் நுட்பம் மற்றும் பொருளாதாரத் தடைகளை முன் வைத்து அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையே ஒரு நிழல்போர் நடைபெற்றுக் கொண்டிருப்பதை யாவரும் அறிவர். அந்த வகையில் ஒரு நாட்டைப் பலவீனப்படுத்த வேண்டும் எனில் மக்களைப் பலவீனப்படுத்த வேண்டும் என்ற வகையில் இது போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்கவும் சாத்தியம் உண்டு. அந்தவகையிலேயே இஸ்ரேல் உயிரியல் போர் திட்ட நிபுணர் வெளியிட்ட இது தொடர்பான கருத்தையும் பார்க்க வேண்டி இருக்கிறது. அதனை உறுதிப்படுத்துவது போல சீனாவின் வுஹான் மாகாணத்திலேயே ஆபத்தான வைரஸ் கிருமிகளை ஆய்வு செய்யும் மிகவும் மேம்பட்ட ஆய்வு மையமான வுஹான் இன்ஸ்ரிரியூட்டும் இருக்கிறது.

அதிலிருந்தும் இத்தொற்று ஆரம்பித்திருக்க வாய்ப்பிருப்பதாகவும் அந்த இஸ்ரேல் நிபுணர் கருத்து வெளியிட்டிருப்பதுவும் கவனிக்கப்பட வேண்டியதே!

**பொதுவில் பாம்பின் கடிக்குத்தான் மனிதர்களாகிய நாங்கள் பயப்படுவது இயல்பு. தற்போது தோன்றியுள்ள இந்தத் தொற்று நோயான 2019 நொவால் கொரோனா வைரஸ் பாம்பிலுள்ள ஒரு வைரஸ் கிருமியினால் தொற்றத் தொடங்கியதாகச் சொல்லப்படுகிறது.**



### கொரோனாவில் இருந்து தப்பிக்க.....


1. கைகளைச் சுத்தமாக வைத்திருத்தல்.
2. சோப்புக்களை உபயோகித்துக் கைகளை கழுவவேண்டும். அல்லது மதுசாரம் கலந்த திரவத்தினால் கைகளை துடைக்க வேண்டும். அல்லது ஒற்றிக் கொள்ள வேண்டும்.
3. இருமல், தும்மல் வரும் போது 'ரிஷ்யூ பேப்பர் கொண்டு மூக்கினை, வாயினைப் பொத்திக் கொள்ள வேண்டும். அல்லது முழங்கையை மூக்கில், வாயில் வைத்து நோய் வெளியே பரவாமல் தடுக்கவேண்டும்.
4. காய்ச்சல் அறிகுறி உள்ளவரோடு மிகவும் அண்மித்துப் பழகுவதைத் தவிர்க்க வேண்டும். மிருகங்களிடத்தும் நெருங்கிப் பழகுவதைத் தவிர்க்க வேண்டும்.
5. முட்டை மற்றும் இறைச்சி வகைகளை நன்றாக அவித்துச் சமைத்து உண்ண வேண்டும்.
6. நோய் கண்டவர் பிறரோடு நெருங்கிப் பழகுவதைத் தவிர்க்க வேண்டும். நோய் அறிகுறி கண்டவரிடம் தொட்டு உறவாடுவதைத் தவிர்க்க வேண்டும்.
7. பொது இடங்களில் எச்சில் உமிழ்வதைத் தவிர்க்க வேண்டும்.
8. காய்ச்சல், இருமல், தும்மல் இருக்குமாயின் உடனடியாகத் தாமதியாது வைத்தியரை அண்மித்துப் பரிசோதனை செய்து அவர் ஆலோசனையைப் பெறவேண்டும்.



# நித்திய சுகம் 455

உடலே கோயில்

# ஆரோக்கியம் தரும் சூரிய ஒளி



வைத்தியர் எஸ்.கேதீஸ்வரன்,
*பொது வைத்திய நிபுணர்,*
*யாழ்.போதனா வைத்தியசாலை*

நாம் சிறுவர்களை வெய்யிலில் நிற்காதே. மழையில் நனையாதே என்று கட்டுப்படுத்துகின்றோம். வெய்யிலைத் தவிர்க்க குடை, தொப்பி, நீளமான ஆடை கள், சூரிய ஒளியைத் தடுக்கும் பூச்சுக்கள் என்பவற்றைப் பாவிக்கின்றோம். இது எவ்வளவு தூரம் சரியானது என்பதுதான் கேள்வி. சூரிய ஒளியிலுள்ள புற ஊதா கதிர்கள் எமது தோல் விற்றமின் டி உற்பத்தியாவதற்கு அவசியமாகும். எமக்கு தேவையான விற்றமின் டி இல் பெரும்பகுதி (90-95சதவீதம்) சூரிய ஒளி மூலமாகத் தோலில் உற்பத்தியாகின்றது. போதிய சூரிய ஒளி நேரடியாகத் தோலில் படாவிட்டால் விற்றமின் குறைபாடு ஏற்பட்டு பல நோய்க்ள ஏற்படலாம்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி உலகில் பலருக்கு விற்றமின் டி பற்றாக்குறையிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆண்டு முழுவதும் சூரிய ஒளி குறைவில்லாமல் கிடைக்கும் இலங்கைபோன்ற நாடுகளில் விற்றமின் டி குறைபாடு பலருக்கு உள்ளது அதிர்ச்சிகரமான விடயமாகும்.

வெள்ளையர்கள் விட கறுப்பான தோலுடைய ஆசிய நாட்டவர்களில் தோலில் அதிகம் காணப்படும் மெலனின் எனும் நிறப்பொருளால் சூரிய ஒளி தோலினுள் ஊடுருவுவது குறைவடைகின்றது. இதனால் வெள்ளையர்களைவிட ஆசிய நாட்டவர்களான நாம் அதிக நேரம் வெயிலை உடலில் படவிடவேண்டும். இடம்பெயர்ந்து மேலைத்தேய நாடுகளில் வாழும் ஆசிய நாட்டவர்களில் அதிலும் குறிப்பாகப் பெண்களில் விற்றமின் டி குறைபாடு அதிகமாகக் காணப்படுகின்றது. இதற்குக் காரணம் நம்மவர்கள் குளிர்காரணமாக உடலை மூடிய உடை களை அணிவதும் வீட்டைவிட்டு வெளியில்வருவதுகுறைவாக இருப்பதுமேயாகும்.

**சூரிய ஒளியினால் நன்மைகள் எவை?**

விற்றமின் டி கல்சியம் அகத்துறிஞ்சப்படுவதற்கு அவசியமாகும். எனவே எலும்பு, பல் ஆரோக்கியத்துக்கு சூரிய ஒளி அவசியமாகும். குறிப்பாக மாதவிலக்கு நின்றபின் பெண்களில் ஏற்படும் நோய்க்கு கல்சியம் குறைவது காரணமாகும்.

சூரிய ஒளியினால் எமது உடலில் ஓமோன் அதிகமாகச் சுரக்கப்படுகின்றது. இந்த ஓமோன் சோம்பல் இல்லாமல் சுறு சுறுப்பாக வைத்திருக்க உதவுகின்றது. சூரிய ஒளி குறைந்த குளிர்காலங்களில் மேலைத்தேய நாடுகளில் நரம்புத்தளர்ச்சி அதிகம் ஏற்படுகின்றது.

சூரிய ஒளியானது உடலின் கொலஸ்ரோல் அளவு, குருதியமுக்கம் என்பவற்றைக் குறைக்கின்றது. வெயில் குறைந்த குளிர்காலங்களிலேயே மாரடைப்பு பொதுவாக ஏற்படுகின்றது. எனவே சூரிய வெளிச்சம் மாரடைப்பை குறைக்கின்றது என்பதை ஊகிக்கலாம். அது மட்டுமா! சூரிய ஒளி உடலில் படுவதனால் உடல் பருமன் குறைவடைவதுடன் சலரோகம் ஏற்படுவதும் குறைவடைகின்றதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சூரிய ஒளியினால் உடல் நோ, மூட்டுவாதம் என்பன குறைவடைகின்றன.

அதிகமான சூரிய ஒளி குறிப்பாக வெள்ளையர்களில் தோலில் புற்றுநோயை ஏற்படுத்தலாம். ஆனால் அளவான சூரிய ஒளி உடலில் படுவதால் பற்பல புற்றுநோய்கள் ஏற்படுவது குறைவடைவதாக அண்மையில் வெளியான ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மார்புப் புற்றுநோய், குடல் புற்றுநோய், கருப்பைப் புற்றுநோய், இரைப்பைப் புற்றுநோய் என்பன அவற்றில் சிலவாகும்.

மிதமான சூரிய ஒளியினால் மாதவிலக்குப் பிரச்சினைகள் குறைவடைகின்றன. அத்துடன் மாதவிலக்கு நிற்பதும் தள்ளிப்போகின்றது. அது மட்டுமில்லாமல் பெண்களிலும் ஆண்களிலும் பிள்ளை பெறும் பாக்கியமும் அதிகரிக்கின்றது. சூரிய ஒளி உடலில் படுவதால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கின்றது.

**சூரியஒளி மூலம் விற்றமின் டியை எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம்?**

விற்றமின் டி சில உணவுகளிலேயே காணப்படுகின்றது. எண்ணெய்த் தன்மையுள்ள மீன்களில் இவை காணப்படுகின்றன. பால், முட்டை என்பனவற்றிலும் விற்றமின் டி காணப்படுகின்றது. ஆனால்உணவுமூலம்எடுக்கப்படும்விற்றமின் டி உடலுக்கு போதுமானது அல்ல. ஆசிய நாட்டவர்களான நாங்கள் ஒவ்வொரு நாளும் சுமார் அரை மணி நேரம் வெய்யிலில் நின்றால் போதுமானதாகும். குறிப்பாக காலை 6 மணி தொடக்கம் 10 மணி வரை அல்லது மாலை 4 மணி முதல் 6 மணி வரையுள்ள நேரத்தில் சூரிய ஒளி படத்தக்கவாறு நிற்கலாம். இந்த நேரத்தில் உடற்பயிற்சி அல்லது நடப்பதனால் எமக்கு இரட்டிப்பு நன்மை ஏற்படும்.

ஆசிய நாட்டைச் சேர்ந்த ஒருவர் குறைவான ஆடைகளுடன் அரை மணி நேரம் வெய்யிலில் நின்றால் அவருக்கு 8,000 - 10 000 சர்வதேச அலகு விற்றமின் டி அவரது உடலில் உற்பத்தியாகின்றது. அது போதுமானதாகும்.

## சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 603 இற்கான சரியான விடைகள் வருமாறு:

இடமிருந்து வலம்

(1) அறிமுகம் (4) சுப (6)கரு (7)அதிக (8)சமத்துவம் (11)கடிது (12) சமிபாடு (14)வாசம் (16) புரளி (17) தம்பி (19) சாயம் (20)நட (21)வில் (22) குடும்பம்

மேலிருந்து கீழ்

(1) அச்சகம் (2)முகத்துவாரம் (3) கருதி (4)சுதி (5)பகட்டு (7)அம்மி (9)மடி (10)வசம் (13) பாதம் (15) சளி (16)புயல் (17) தடம் (18) பிணம் (19) சாவி (20)நடு

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 603 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
த.சிவகுமாரன்,
அரசடிவீதி,
வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை.

**2 ஆம் பரிசு**
சா.ராதிகா,
யசோரெக்ஸ், நெல்லியடி,
கரவெட்டி.

**3 ஆம் பரிசு**
ந.கண்ணதாஸ்,
6.ஆம் வட்டாரம்,
வேலணை மேற்கு, வேலணை.

**4 ஆம் பரிசு**
பொ.துரைராசா,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

**5 ஆம் பரிசு**
ந.நல்லம்மா,
முள்ளானை,
இளவாலை.

பாராட்டுப் பெறுவோர்

கு.விஜிதன்,
6ஆம் வட்டாரம்,
குமுழமுனை,
முள்ளியவளை.

பா.யதுஷா,
வட மத்திய மகளிர் கல்லூரி,
கரவெட்டி

றெ.வேர்ஜின் ஐஸ்வர்யா,
மலர்குழி வீதி,
ஊர்காவற்றுறை.

## சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 604 இற்கான சரியான விடைகள் வருமாறு:

இடமிருந்து வலம்

(1) அகம்பாவம் (6) சரி (7)வட (8)சக (9) கலம்பகம் (11)பாமரன் (13)கதி (14) விதம் (15) பால் (17) தலை (18)கட (19)உரு (20) விளம்பரம் (22) விரைவு (23)லாம்பு

மேலிருந்து கீழ்

(1) அசம்பாவிதம் (2) கரி (3) பாவலன் (4)வடம் (5)தாகம் (8) சகதி (9)கரம் (10)பகல் (12) மதலை (15) பாடம் (16)கரும்பு (18) களவு (19) உரம் (21)பலா

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 604 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
செல்வி ம.காயத்திரி,
தொல்புரம் மேற்கு,
சுழிபுரம்.

**2 ஆம் பரிசு**
ஞானவேல் நகுலன்,
இல.99 சாரதா, ஆச்சிரம வீதி,
புலோலி வடக்கு

**3 ஆம் பரிசு**
தெ.மதுஷிகா,
திருக்கேதீஸ்வரம் (கோயில்),
மன்னார்.

**4 ஆம் பரிசு**
நா.சிவதாசன்,
இல.114 கிராம
விஸ்தரிப்புத்திட்டம்,
திருநெல்வேலி, கோப்பாய்.

**5 ஆம் பரிசு**
தரண்யா சுதாகர்,
கொக்குவில் இந்துக்கல்லூரி,
கொக்குவில்

பாராட்டுப் பெறுவோர்

ந.யஷ்வின்,
காளிகோவிலடி,
துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.

க.கங்கை நேசன்,
இல.232/3 செபஸ்தியார் வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

ஞா.இம்மனுவல்,
இல.85/4 கார்மல் வீதி,குருநகர்,
யாழ்ப்பாணம்.



# பொசுக்கப்படும் பூக்கள்!

சி.நற்குணலிங்கம்

1989ஆம் ஆண்டில் வயது வந்தவர் திருத்தச் சட்டத்தின்படி சிறுவர் என்போர் 18 வயதுக்கு உட்பட்டோர் ஆவர். உலக சனத்தொகையில் 180 கோடி பேர் சிறுவர்கள். இலங்கையின் சனத்தொகையில் காற்பகுதியினர் சிறுவர்கள். சிறுவர்களுக்கு பாதுகாப்பான ஒளிமயமான சிறுவர் உலகத்தை அமைத்துக்கொடுக்க வேண்டும். சிறுவர் சமுதாயம் பெறுமதிமிக்க செல்வம். ஒவ்வொரு குழந்தையையும் நல்ல நிலையில் உலகிற்கு ஒப்படைக்க வேண்டியது நம் எல்லோர்க்கும் தவிர்க்க முடியாத பொறுப்பாகும். எனினும் பெரும்பாலானவர்களால் சிறுவர்கள் துர்நடத்தைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். சிறுவர் துஷ்பிரயோகம் என்பது சிறுவர்களை அவர்களது இயல்புக்கும் தன்மைகளுக்கும் முரணான வகையில் தவறாகப் பயன்படுத்தப்படும் செயற்பாடாகும்.

### சிறுவர் உரிமைகள் பலப்படல் வேண்டும்

சிறுவர் உரிமைகளுக்கும் சிறுவர் துஷ்பிரயோகத்துக்கும் தொடர்பு உள்ளது. சிறுவர்களது உரிமைகள் பலப்படுத்தப்படுமாயின் துஷ்பிரயோகம் குறைவடைய சாத்தியக்கூறுகள் அதிகம். சிறுவர் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும். உரிமைகளை அனுபவிக்க வழிசெய்யாது அவர்களது உரிமைகளை மதிக்காது புறந்தள்ளக் கூடாது. சிறுவர் பற்றிய சமவாயத்தில் 40 உறுப்புரைகள் சிறுவர்கள் பற்றியதாகும். பெற்றோரது பாதுகாப்பைப்பெற, பெற்றோரிடமிருந்துதம்மை தனிமைப்படுத்தாதிருப்பதற்கான உரிமை, கருத்தை வெளிப்படுத்தும் உரிமை, சிந்திக்க, மனச்சாட்சிப்படி நடக்க, சமயம் ஒன்றை பின்பற்ற, போதிய கல்வி பெற, சுகாதார வசதிகள் பெற, ஓய்வெடுக்க, விளையாட, சித்திரவதை குரூரமான தண்டனைகளிலிருந்து தவிர்த்துக்கொள்ளும் உரிமை என்பன இவர்களுக்கான முக்கிய உரிமைகளாகும். சிறுவர்உரிமைகள்மீறப்படுகின்றமைதான் துஷ்பிரயோகத்துக்கு வழிவிடுகின்றது.

### எவை எவை சிறுவர் துஷ்பிரயோகங்கள்?

சிறுவர் துஷ்பிரயோகம் என்ற வார்த்தைக்குள் சிறுவர்களை கவனக்குறைவாக நடத்துதல், தேவையில்லாமல் கடிந்து கொள்ளல், சித்திரவதை, கொடூரமாக நடத்துதல் பாலியல் துஷ்பிரயோகம் செய்தல், உரத்துக்கத்துதல், அத்தியாவசியமில்லாத உடற்தொடுகை, கல்விக்கு ஆதரவு வழங்காமை, ஆபாசப்படங்களைக் காட்டுதல், பிச்சை எடுக்கப் பணித்தல், அடிமைகளாக நடத்துதல், கடத்துதல், உணர்வுகளை மதிக்காமை, சிறுவர்களை சுயமாக விளையாட அனுமதிக்காமை, ஒளிவுமறைவின்றி பேசவிடாமை, விருப்பங்களை வெளிப்படுத்த தடுத்தல், அறியாத விடயங்களை அறிந்து கொள்ளும் முயற்சிக்கு தடைபோடுதல், சுயசிந்தித்தலுக்கு முட்டுக்கட்டையாக இருத்தல், வேலைக்கு அமர்த்துதல், வார்த்தை துஷ்பிரயோகம், வருடுதல், தனிமைப்படுத்துதல், அவமானப்படுத்துதல், பயமுறுத்தல், தண்டனையளித்தல், கண்டித்தல், உணவு, உடை, உறையுள், சுகாதாரம், பாதுகாப்பு, மருத்துவம் என்பன மறுக்கப்படல் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

### கவலைதரும் புள்ளிவிவரம்

இலங்கையில் 2017ஆம் ஆண்டு 10 வயதுக்கு உட்பட்டவர்களில் 15.9 சதவீத்மான சிறுவர்களும், 11 வயது முதல் 15 வயது வரையானவர்களில் 36.5 வீதமானவர்களும் 16 வயதுக்கு மேற்பட்டவர்களில் 47.6 சதவீதமானர்களும் துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டனர். 2017 இல் இணையத்தளத்தை பயன்படுத்தும் சிறுவர்களில் 11 வயதுக்கும் 18வயதுக்கும் இடைப்பட்டவர்களில் 53 சதவீதமானவர்களும் முகநூலைப் பயன்படுத்தியவர்களில் 61.7 சதவீதமானவர்களும் துஷ்பிர யோகத்துக்கு உள்ளாகியுள்ளனர். 2018ஆம் ஆண்டு முதல் இரண்டு மாதங்களில் 532 சிறுவர்கள் துஷ்பிரயோகத்துக்கு ஆளானார்கள். சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 3 ஆயிரம் முறைப்பாடுகள் அதிகார சபைக்கு கிடைக்கப் பெற்றன. இவர்களில் 2413 சிறுவர்கள் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளானார்கள். இவர்களில் 555 பேர் பாலியல் துன்புறுத்தல்களுக்கும் 375 பேர் கடுமையான முறையில் பாலியல் வல்லுறவுக்கும் 311 பேர் கற்பழிப்புக்கும், 15 பேர் ஆபாச வெளியீடுகளுக்கும் 125 பேர் கடத்தலுக்கும் 265 பேர் வேலைக்கும் பயன்படுத்தப்பட்டனர். 2019இல் களனிப் பிரதேசத்தில் இரண்டரை வயது சிறுமி மிருகத்தனமாக துஷ்பிர யோகத்துக்கு ஆளானார்.

### காரணங்கள்

சிறுவர் துஷ்பிரயோகத்துக்கான காரணங்களாக பெற்றோரின் கவனயீனம், பெற்றோரின் வெளிநாட்டு வேலை வாய்ப்பு, விவாகரத்து, பெற்றோர் போதைக்கு அடிமையாதல், செறிவாகக் கூடி வாழ்தல், அன்பு, அரவணைப்பு, அக்கறை இன்மை, சிறுவர் தொடர்பான விழிப்புணர்வின்மை, பொருளாதாரப் பலவீனம், சிறுவர்களது அப்பாவித்தன்மை, நவீன பொழுதுபோக்குச் சாதனங்கள், அறியாமை, தனிமைப்படுத்தப்படல், பிள்ளைக்கு துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வின்மை,

> **சிறுவர் உரிமைகளுக்கும் சிறுவர் துஷ்பிரயோகத்துக்கும் தொடர்பு உள்ளது. சிறுவர்களது உரிமைகள் பலப்படுத்தப்படுமாயின் துஷ்பிரயோகம் குறைவடைய சாத்தியக்கூறுகள் அதிகம். சிறுவர் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். உரிமைகளை அனுபவிக்க வழிசெய்யாது அவர்களது உரிமைகளை மதிக்காது புறந்தள்ளக் கூடாது.**

பொறுப்பற்ற பெற்றார், வீட்டில் போதிய மேற்பார்வையின்மை, பிள்ளையின் மனஇறுக்கம், உணர்ச்சி வசப்படல், உளரீதியான தாக்கம், மகிழ்ச்சியற்ற மனநிலை, யாரையும் இலகுவில் நம்பிவிடும் மனநிலை, வெகுளித்தனம், எதற்கும் இசைந்து போகும் தன்மை, அன்புக்காக ஏங்குதல், எதையும் விளையாட்டாக எடுக்கம் மனநிலை என்பனவாகும்.

சிறுவர்கள் சரீர தண்டனைக்கு வீட்டிலோ அல்லது பாடசாலைகளிலோ உட்படுவதால் உளவியல் ரீதியாக பொய் சொல்லப் பழகிவிடுவார்கள். வேதனை, அவமானம், பதகளிப்பு, ஆத்திரம் போன்றவற்றால் பழிவாங்கும் எண்ணம் மனதில் ஏற்படும். இவர்கள் பிற்காலத்தில் வன்முறையாளர்களாக மாறுவார்கள். துஷ்பிரயோகத்தால் உளநெருக்கீட்டுக்கு ஆளாவார்கள். இது சிறுபராயத்தின் எதிர்பார்ப்புக்களையும் மகிழ்ச்சியையும் சிதைக்கும். சமூகக் கட்டுமானம் எதிர்காலத்தில் சிதைவடையும். மன அழுத்தம் ஏற்படும். உடலியல் ரீதியாக உடல்நிறை குறைவடையும். தூக்கம் பாதிக்கப்படும், அடிக்கடி தலைவலி ஏற்படும். பதற்றம் ஏற்படும். உளவியல் ரீதியாக அடிக்கடி பயந்த கனவுகள், வழமைக்கு மாறான கோபம், வன்முறை எண்ணம், வெட்கம், பயம், மனச்சோர்வு, சமூகத்திலிருந்து ஒதுங்குதல், முடிவெடுக்கும் திறன் குறைவடையும். நடத்தை ரீதியாக பாடசாலை வகுப்பறையில்சக மாணவர்களுடன் ஆரோக்கியமான நட்புறவு கொள்ளமாட்டார்கள். இணக்கப்பாடற்ற நடத்தைக் கோலங்கள் ஏற்படும். சிறுவயதிலேயே புகைத்தல், மதுப் பழக்கத்துக்கு ஆளாவார்கள். மன இறுக்கம், உணர்ச்சி வசப்படல் தோற்றம் பெறும்.

சிறுவர்கள் பெற்றோரால் புறக்கணிக்கப்படுவதால் சிறுவர்கள் உணவு, உடை, உறையுள், சுகாதாரம், பாதுகாப்பு, மருத்துவம், கல்வி என்பன மறுக்கப்படும். துஷ்பிரயோகத்தினால் உளத்தாக்கத்துக்கு உட்படுவர். உளத்தாக்கம் என்பது மனதால் பாதிக்கப்படுதல். அதாவது உளம் ஆரோக்கியமற்றதாகவும் சமநிலையற்றதாகவும் காணப்படுவதலாகும். உளத்தாக்கமுடையோர் தம்மை பறிகொடுத்தவர் போல் காணப்படுவர். தனிமையை விரும்புவர். தமது செயல்களில் ஒழுங்காக ஈடுபடமாட்டார்கள். குழப்பமான சிந்தனை, முரண்படல் ஆகிய தன்மைகள் காணப்படும்.

### வேண்டுகை

சிறுவர்களை முதன்மைப்படுத்தி ஒக்ரோபர் முதலாம் திகதி "உலக சிறுவர் தினம்" ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தால் பிரகடனப்படுத்தப்பட்டது. சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதலை இல்லாதொழிக்க ஜுன் 12ஆம் திகதி "சிறுவர்களை தொழிலுக்கு ஈடுபடுத்தலுக்கு எதிரான தினம்" என்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. சிறுவர் மற்றும் பெண்களுக்கான முறைப்பாடுகளை பதிவு செய்து நடவடிக்கை எடுப்பதற்கு 36 பாதுகாப்புப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கு தடுக்க சரியான முறையில் பெற்றோர், ஆசிரியர்கள் அணுகுதல் வேண்டும். மருத்துவ சிகிச்சைக்கு கொண்டு செல்ல வேண்டும். முழுமையான பரிசோதனைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தடுப்பதற்கான வழிகளை அறிந்திருக்க வேண்டும். துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வு போதிய அளவு



வழங்கப்பட வேண்டும். அவை உள்வாங்கப்பட வேண்டும். பிள்ளைகள் கண்காணிக்கப்பட வேண்டும். தனியாக வீட்டில் விட்டுச் செல்வதை தவிர்க்க வேண்டும். அந்நியர், பெரியவர்களுடன் நெருங்கிப் பழகுவதை தவிர்க்கவேண்டும். சிறு வயதில் வேலைக்கு அமர்த்துவதை விலக்கிக்கொள்ள வேண்டும். பெற்றார் பிள்ளையின் சகல செயற்பாடுகளிலும் கவனம் செலுத்த வேண்டும். பொறுப்புணர்ந்து செயற்படுவோம்.



# இது மறக்க முடியாத அனுபவம்

டிஸ்கவரி சேனலில் ஒளிபரப்பாகும் புகழ்பெற்ற நிகழ்ச்சியான 'மேன் Vs வைல்ட்' மூலம் பலராலும் அறியப்படுபவர் பியர் கிரில்ஸ். காடுகளுக்கு சென்று அதன் தன்மை குறித்தும் அங்கு வாழும் உயிரினங்கள் குறித்தும் விளக்கம் அளிப்பார். அவ்வப்போது பிரபலமானவர்களை தன்னுடன் அழைத்துச் செல்வதும் உண்டு. பியர் கிரில்ஸ் உடன் பிரதமர் மோடி கலந்துகொண்ட நிகழ்ச்சி கோடிக்கணக்கானவர்களால் தொலைக்காட்சியில் பார்க்கப்பட்டது.

இந்த நிலையில் ரஜினி, பியர் கிரில்ஸின் புதிய நிகழ்ச்சி யில் பங்கேற்றார். இதற்காக இருவரும் கர்நாடகாவில் உள்ள காட்டுக்கு சென்றனர். அது தொடர்பான புகைப்படங்களும் இணையத்தில் பரவின. இதற்கிடையே இது குறித்து ட்வீட் செய்த பியர் கிரில்ஸ், பிரதமர் மோடியை தொடர்ந்து சூப்பர் ஸ்டார் ரஜினி என்னுடைய 'Into The Wild With BearGrylls' என்ற புதிய நிகழ்ச்சியில் இணைந்துள்ளார் எனத் தெரிவித்தார்.

இந்நிலையில் இந்த நிகழ்ச்சி குறித்து ட்வீட் செய்த ரஜினிகாந்த், டிஸ்கவரி சேனலுக்கும், பியர் கிரில்ஸுக்கும் நன்றி. இது மறக்கமுடியாத அனுபவம் எனத் தெரிவித்துள்ளார்."

## வைரஸ் கவிதை

'கொரோனா' போல் உன்னை
ஆட்கொண்டு,
உன் புராணம் எழுத ஆசை..
'எபோலா'வாக நீ வந்து ,
என்னில் தபேலா வாசிப்பாயா?
இல்லை,
'சார்ஸ்' ஆக நீ வந்து ,
என்னை லூசாக்கிச் செல்வாயா?



**தாதி** : டாக்டர் இரண்டு தடவை மயக்க ஊசி போட்டும் மயங்கி விழலை.

**டாக்டர்** : ஊசியோட விலையைச் சொல்லு. உடனே மயங்கி விழுந்து விடுவார்.

வயது முதிர்ச்சி ஒருவரின் குணத்தை தீர்மானிக்காது,
தூற்ற தகுதியான பெரியோர்களும் உண்டு,
போற்ற தகுதியான சிறியோர்களும் உண்டு!




சப்பாணி@manipmp

சமைக்க கற்று கொண்ட
பிறகு பறிபோகிறது
பெண்களின் சுதந்திரம்

சப்பாணி@manipmp

குறுக்கு வழியில்
முன்னேற
கற்றுக்கொள்ளும் இடம்
"ட்ராபிக் சிக்னல்"

பிரியாமனவள்...

கடைசி வரை நிம்மதியாக
வாழ ஆசை... எப்படி
என்று விசாரித்ததில்
"ஆசையே இல்லாமல்
வாழ்வதுதான்"
என்றார்கள்...!!

# எண்ணத்துடன் தெளிவும் அவசியம்

தேவையற்ற குப்பைகளை அகற்றிவிட்டு, சுத்தமாய் இருக்கும் மனதில் ஓர் எண்ணத்தை உருவாக்கினால், அந்த எண்ணமே ஓர் அதிர்வாக, ஒரு சக்தியாக செயல்படும். சக்தியின் துணையின்றி எந்த ஓர் எண்ணமும் உருவாக முடியாது. ஆனால் தெளிவான முயற்சியின் பலனாய் இல்லாமல், தற்செயலாய் உருவாகும் எண்ணத்திற்கு தன்னை ஈடேற்றிக்கொள்ள தேவையான சக்தி இருக்காது.

எண்ணங்களை மிகத் தீவிரமான நிலையில் உருவாக்கினால், அந்த எண்ணங்கள் மிக வலியதாக இருக்கும். ஏன், தீவிரமாய் உருவாக்கப்படும் ஓர் எண்ணத்தால் ஒரு மனிதனின் உயிரைக்கூட பறித்திட முடியும். அந்த அளவிற்கு எண்ணங்கள் சக்தி வாய்ந்தவை.

எண்ணங்களை மையமாகக் கொண்டு செயற்பட எம் மறைஞானத்தில் ஒரு தனிப் பிரிவே உள்ளது. ஆத்திரமான மனமும், மோகத்தால் எரியும் மனமும் தன் நோக்கில் மிகக் கவனமாக இருக்கும் ஒருநிலையான மனங்கள். மனம் இப்படி ஒருநிலையில், ஒரே குறிக்கோளில் முழுக் கவனத்துடன் செயற்படும்போது, அது மிக சக்தி வாய்ந்த கருவியாகிடும். பெரும்பான்மையான நேரத்தில் மனிதர்களுக்கு இந்த ஒருநிலையான கவனம் எதிர்மறை நோக்கங்களில் தான் உருவாகிறது.

நற்செயல்களுக்கு அல்ல. அதனால்தான் நம் கலாசாரத்தில் குழந்தைகளிடம், "கோபத்தில் யாரையும் சபித்துப் பேசாதே," என்று எச்சரித்து வளர்த்து வந்தோம். கோபத்தில், உங்கள் மனம் தீவிரமாக ஒருநோக்கில் குவியும்போது, நீங்கள் சொல்லும் வார்த்தைகள், வெகு சுலபமாக நிஜமாகி விடலாம்.

எனவே பற்பல திசைகளில் அலைபாயாமல், ஒருநிலையில், ஒரே குறிக்கோளுடன், விழிப்புணர்வோடு ஓர் எண்ணத்தை உருவாக்கினால், அது இவ்வுலகில் தன்னை நிறைவேற்றிக் கொள்ளும். எண்ணங்களின் மீது இன்னும் கொஞ்சம் ஆளுமை பெற்றுவிட்டால், இன்னும் அதிகப்படியான விடயங்களும் சாத்தியப்படலாம்.

மூளையை இளமையாக்க

## சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | | 2 | | | 8 | | |
| | | | 6 | | 4 | 2 | 5 | |
| | 6 | | | | | | | 4 |
| | | | | | | 4 | | 3 |
| | | 5 | 8 | | 1 | 6 | | |
| 8 | | 9 | | | | | | |
| 5 | | | | | | | 1 | 6 |
| | 9 | 1 | 4 | | 3 | | | |
| | | 2 | | | 7 | | | 9 |

முந்தைய விடை


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 5 | 7 | 2 | 6 | 1 | 9 | 8 | 4 |
| 6 | 9 | 8 | 7 | 5 | 4 | 3 | 2 | 1 |
| 1 | 4 | 2 | 8 | 3 | 9 | 7 | 5 | 6 |
| 5 | 2 | 3 | 4 | 8 | 6 | 1 | 9 | 7 |
| 9 | 7 | 4 | 5 | 1 | 3 | 2 | 6 | 8 |
| 8 | 1 | 6 | 9 | 7 | 2 | 4 | 3 | 5 |
| 2 | 8 | 9 | 1 | 4 | 5 | 6 | 7 | 3 |
| 7 | 6 | 1 | 3 | 9 | 8 | 5 | 4 | 2 |
| 4 | 3 | 5 | 6 | 2 | 7 | 8 | 1 | 9 |

சுடோக்கு என்பது 9x9 என அமைந்த 81 சிறு கட்டங்கள் அடங்கிய ஒரு பெரிய கட்டத்தில் குறிப்பிட்ட விதிகளுடன், ஒரு குறிப்பிட்ட பண்பு பொருந்துமாறு எண்களைக் கொண்டு விளையாடும் ஒரு புதிர் விளையாட்டு. தற்போது உலகெங்கும் மிகவும் விரும்பி விளையாடும் ஓர் எண் விளையாட்டாக உள்ளது.






# பேராசை பெரும் நஷ்டம்



கந்தசாமி என்ற ஒரு ஏழை தன் மனைவியுடன் சிறு குடிசை ஒன்றில் வாழ்ந்து வந்தான். வயதாகி விட்டதால் வேலைக்கும் செல்ல முடியாது போகவே, தங்களிடம் இருந்த பொருள்களை விற்றுச் சாப்பிட வேண்டி ஏற்பட்டது. நாள்கள் செல்லச்செல்ல அவர்கள் உண்ண உணவின்றி தவித்தனர்.

இந்நிலையில் அவன் ஆண்டவனை நோக்கி "இறைவா எங்களை ஏன் இப்படி படைத்தாய் இது இப்படியே நீடித்தால் வறுமை தாங்காது நாங்கள் இறப்பதை தவிர வேறு வழியில்லை" என வேண்டினான்.

அவன் மீது இரக்கம் கொண்ட இறைவன் அவன் முன் தோன்றி அவனின் குறைகளைத்தீர்க்க அவனுக்கு வாத்து ஒன்றைப் பரிசளித்தார். அந்த வாத்து தினம் ஒரு பொன் முட்டை இடும் என்றும் அதை விற்று அன்றாடம் குடும்பத்திற்கு தேவையானவற்றை வாங்கி வாழ்நாளைக் சந்தோஷமாக கழிக்கலாம் என்றும் கூறி மறைந்தார்.

வாத்து தினம் ஒவ்வொரு பொன் முட்டையிட அவர்கள் அதனை விற்று வாழ்க்கையை இனிதாகக் கழித்தனர்.

ஒரு நாள் கந்தசாமியின் மனைவி தன் கணவனிடம் சென்று 'தினம் தினம் இந்த வாத்து ஒவ்வொரு பொன் முட்டையே இடுகின்றது. இப்படியே இருந்தால் நாம் எப்படிப் பெரிய பணக்காரர் ஆவது என்று சொல்லி, இந்த வாத்தின் வயிற்றில் இருக்கும் எல்லா முட்டைகளையும் நாம் எடுத்தால் அதை விற்று பெரிய பணக்காரர் ஆகிவிடலாம் என்று ஓர் உபாயம் சொன்னாள். இதைக் கேட்ட கந்தசாமிக்கும் அது சரியெனப் தோன்றியது.


உடனே, கந்தசாமி அந்த வாத்தைப் பிடித்து வாத்தின் வயிற்றில் இருக்கும் எல்லா முட்டைகளையும் எடுக்க வாத்தை கொன்று அதன் வயிற்றைக் கிழித்தான். "ஆ" என்ன ஆச்சரியம் அந்த வாத்தின் வயிற்றில் ஒருமுட்டையுமே இருக்கவில்லை. அதன் வயிற்றில் மற்றைய வாத்துகள்போல் வெறும் குடலே இருந்தது கண்டு ஏங்கினர்.

தினம் ஒரு பொன் முட்டையிட்ட வாத்து இறந்து விட்டதால், வறுமை அவர்களை மீண்டும் சூழ்ந்துகொண்டது.

தங்கள் பேராசையே பெரும் தரித்திரத்தை தந்தது என மனம் வருந்தி ஏழ்மையாகவே வாழ்ந்து உண்ண உணவின்றி இறந்தனர்.

ஆசை அளவுக்கு மிஞ்சினால் அது பேராசை. பேராசை பெரு நஷ்டத்தையும் கஷ்டத்தையும் தரும்.

## புள்ளிகளை இணைத்து உருவத்தைப் பூர்த்தி செய்வோம்



## பொன்மொழிகள்

- நீ உன் உரிமையை இழப்பின் உன் உணர்வையும் இழப்பாய்.
- தொடங்கிய இடத்தைத் தெரிந்துகொள் அப்போதுதான் முடிக்கும் இடத்தை அறிந்து கொள்ளலாம்.
- அன்பு என்றும் உன் உள்ளத்திலிருந்தால் அறிவு என்றும் உன்னை விட்டகலாது.
- உன் சோம்பேறித்தனம் உன் வாழ்வின் தடைக்கல்லாய் அமையலாம்.
- உன் அவசரப் பேச்சு உன்னை அநாதரவாக்காமல் பார்த்துக் கொள்.
- ஒரு தவறை திரும்பத் திரும்பச் செய்வது மடமை, மடமையை திரும்பத்திரும்பச் செய்பவன் எப்படி முழு மனிதனாக முடியும்?
- பிறர் முன் பேசும் வார்த்தையிலும் செய்யும் செயலிலும் எச்சரிக்கையாய் இரு. உன்னை பிறர் எடை போட்டுக் கூறுபவை அவையே!
- எதை இழந்தீர்கள் என்பதல்ல முக்கியம், என்ன மிச்சம் இருக்கிறது என்பதே முக்கியம்.
- சிந்திப்பதும் அதை வெளிப்படுத்துவதும் நாமெல்லாம் மனிதர்கள் என்பதன் அடையாளம். சிந்திப்பதை வெளிப்படுத்தும் உரிமை மறுக்கப்பட்டால் சிறிது காலத்தில் சிந்திப்பதே மறந்து விடும்.
- அநியாயத்துக்கு ஆயிரம் வக்கீல்கள் தேவை ஆனால், நியாயத்திற்கு கடவுளின் கருணை மட்டும் போதும்.
- கடவுளை அடைய ஒரேயொரு வழி தான் உண்டு. அது அவர் செய்வதை நாமும் செய்வது படைப்பது.
- வாசிப்புப் பழக்கம் என்பது அருமையான ருசி அழகான பசி ஒரு முறை சுவைக்கப் பழகிவிட்டால் அது தொடர்ந்து வரும்.


## வழிகாட்டுவோம்





## திமிங்கிலம்

நீரில் வாழும் பாலூட்டி இனத்தைச் சேர்ந்த ஒரு விலங்கு ஆகும். இதன் ஒரு வகையான நீலத் திமிங்கிலமே உலகின் மிகப்பெரிய பாலூட்டி என்று கருதப்படுகிறது. திமிங்கிலங்கள் வெப்ப இரத்தப் பிராணி களாகும். இவை நுரையீரல் மூலமே மூச்சு விடுகின்றன. இவை வெப்ப இரத்த விலங்குகள். திமிங்கிலங்களில் 75 வகைகள் உள்ளன. உலகிலுள்ள உயிரினங்களுள் மிகப் பெரியதாக வளரக்கூடிய இனம் நீலத் திமிங்கிலம் ஆகும். இது சற்றேறக்குறைய 100 அடி நீளமும் 150 டன் எடையுள்ளதாகவும் வளரக் கூடியது. நீலத் திமிங்கிலத்தின் நாக்கில் 50 பேர் உட்காரக்கூடிய அளவு இடமிருக்கும். இத்தகைய திமிங்கிலத்திடம் மூர்க்கமான குணங்கள் கிடையா. இவை மிகவும் சாதுவானவை ஆகும்.





## நத்தை

நத்தைக் கூட்டைப் பாருங்கள்
நகரும் அழகை ரசியுங்கள்
கெட்டியான வீட்டினுள்
அமைதியாக வாழுது
மெல்ல எட்டிப் பார்க்கையில்
பட்டு மேனி மின்னுது
மழையின் காலம் முழுவதும்
கவலை இன்றி உலவுது
ஆசை கொண்டு தொடுகையில்
அதுவும் வாசல் அடைக்குது

# சுதந்திர தின நிகழ்வுக்காக 15 பாடசாலைகளுக்கு பூட்டு




கொழும்பு, பெப்.2

சுதந்திர தின நிகழ்வை முன்னிட்டு முன்னெடுக்கப்பட்டுவரும் பயிற்சி நடவடிக்கைகளுக்காகக் கொழும்பு மாவட்டத்தில் உள்ள 15 அரச, தனியார் மற்றும் சர்வதேச பாடசாலைகளுக்கு எதிர்வரும் 3ஆம் திகதி விடுமுறை வழங்கப்படவுள்ளது.

அரச நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள், உள்ளூராட்சிச் சபைகள் அமைச்சின் உத்தரவுக்கு அமைய கல்வி அமைச்சு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

டி.எஸ்.சேனநாயக்க கல்லூரி, இராஜகீய கல்லூரி, தேர்ஸ்டன் கல்லூரி, யஷோதரா கல்லூரி, மியூசியஸ் கல்லூரி, செயின்ட் பிரிட்ஜெட் கல்லூரி, கொழும்பு பெண்கள் கல்லூரி, கொழும்பு சர்வதேச பாடசாலை, வைசர்லி கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கு 3ஆம் திகதி விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மகாநாமா கல்லூரி, செயின்ட் மைக்கேல் பாய்ஸ் பள்ளி, பொல்வத்த சாந்த மைக்கல் ஆண்கள் பாடசாலை, பொல்வத்த சாந்த மேரி மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கு ஜனவரி 30ஆம் திகதி பி.ப. 2 மணி முதல் பெப்ரவரி 4 ஆம் திகதி பிற்பகல் 4 மணிவரை விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

மிஹிந்து மகா வித்யாலயா, அல் ஹிதாயா வித்தியாலயம், அசோகா கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கு பெப்ரவரி 3ஆம் திகதி முதல் பெப்ரவரி 4ஆம் திகதி இரவுவரை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்றும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

(எ-24)

## வவுனியா இந்துவின் மெய்வன்மைப் போட்டி

வவுனியா பெப்.2

வவுனியா இந்துக் கல்லூரியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி கல்லூரியின் அதிபர் த.பூலோகசிங்கம் தலைமையில் ஆசிரியர் பே. சுந்தராங்கனின் நெறிப்படுத்தலில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஓய்வுபெற்ற பிரதிக் கல்வி பணிப்பாளர் க.அமிர்தலிங்கம் கலந்துகொண்டார். நிகழ்வில் கொடியேற்றல், ஒலிம்பிக் தீபம் ஏற்றுதல், சத்தியப்பிரமாணம், அணிநடை, உடற்பயிற்சி கண்காட்சி, கயிறு இழுத்தல், அஞ்சல் ஓட்டம், மற்றும் சிறுவர்களுக்கான நிகழ்வுகள் ஆகியன நடைபெற்றன.

இல்ல மெய்வன்மைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களும், தேசிய ரீதியில் விளையாட்டில் சாதனைகள் புரிந்த மாணவர்களும் கேடயங்கள், பதக்கங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் வவுனியா நகரசபை உறுப்பினர், க.சந்திரகுலசிங்கம், வவுனியா கோட்டக்கல்வி பணிப்பாளர் எஸ். மரியநாயகம், உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் கி.யூட்பரதமாறன், மாவட்ட செயலக தொழில் வழிகாட்டல் ஆலோசகர் ச.சுரேஸ்குமார் மற்றும் மாணவர்கள் பெற்றோர் பழையமாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

(110)



## நல்லிணக்க கலந்துரையாடல்

முல்லைத்தீவு பெப்.2

மாத்தளை மாவட்ட உலக உணவுத்திட்ட பயனாளிகள், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

இவர்களுடன், முல்லைத்தீவு மாவட்ட உலக உணவுத்திட்ட பயனாளிகளும் இணைந்துகொண்டுதம் அனுபவப்பகிர்வுகளை பகிர்ந்துகொண்டனர். இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர், நிர்வாக உத்தியோகத்தர், மாத்தளை மாவட்ட உத்தியோகத்தர்கள், உலக உணவுத்திட்ட அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

(ந-222)



### விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம், பெப்.2

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் அமைந்து குருநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது.

இதன்படி வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி கீழ் வரும் இடங்களில் நாளை திங்கட்கிழமை ஏற்றப்படவுள்ளன.

காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை ஓடக்கரை வீதியிலும், முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை கொண்டலடி வீதிச் சந்தியிலும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரையும் அடப்பன் வீதிச் சந்தியிலும் நடைபெறவுள்ளன. எனவே ஒவ்வொரு வரும் தங்களது வளர்ப்பு நாய்களுகளுக்கு மேற்படி தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. உரிமக் கட்டணமாக 30 ரூபா அறவிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## மணிக் கூட்டு வீதிக்கு காந்தி பெயரை சூட்டுக

முன்னாள் பேராயர் ஜெபநேசன் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.2

மகாத்மா காந்தி வீதியை மணிக் கூட்டு வீதி என்று அழைப்பது பொருத்தமற்றது. எமது மண்ணுக்குப் பெருமை சேர்த்த மகாத்மா காந்தியின் பெயரை இந்த வீதிக்கு இட வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாணம் மாநகர சபை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு முன்னாள் பேராயரும், வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபருமான வணக்கத்துக்குரிய கலாநிதி எஸ்.ஜெபநேசன் தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் ஐ.பி. துரைரத்தினத்தின் நினைவு தினமும், மாணவர் விடுதி ஆரம்ப நிகழ்வும் கடந்த 24ஆம் திகதி நடைபெற்றன. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

1927ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வாலிபர் சங்கத்தின் அழைப்பை ஏற்றுக் காந்தியடிகள் யாழ்ப்பாணம் வந்தார். அப்போது யாழ்ப்பாணம் வாலிபர் சங்கத்தின் செயலாளராக ஐ.பி.துரையத்தினம் இருந்தார். காந்தியடிகள் மணிக்கூட்டு வீதியில் இருந்த சேர் வைத்திலிங்கம் துரைசாமி வீட்டிலேயே தங்கியிருந்தார்.

அதனால் அந்தக் காலத்தில் வாழ்ந்த கல்விமான்கள், அறிஞர்கள், பெரியவர்கள், அமைப்புக்கள் ஒன்றிணைந்து மணிக் கூட்டு வீதிக்கு மகாத்மா காந்தி வீதி என்ற பெயரை முன்மொழிந்தனர். இந்த விடயம் அரச நிறுவனங்களின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டது.

தற்போது அந்த வீதி மீண்டும் மணிக்கூட்டு வீதி எனப் பிழையாக அழைக்கப்படுகின்றது. யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர், மேயர், மாநகர சபை இணைந்து காந்தி அடிகளின் பெயரை மீண்டும் நிலை நிறுத்த முன்வர வேண்டும். - என்றார்.

(ஐ-50)

## டிப்பர் வாகன சாரதிக்கு ரூ.2 லட்சம் தண்டம்

அனுமதிப்பத்திரமின்றி மண் அகழ்ந்து ஏற்றிய டிப்பர் வாகன சாரதிக்கு 2 லட்சம் ரூபா தண்டம் விதித்தது கிளிநொச்சி நீதிமன்று. பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் அவர் பொலிஸாரிடம் சிக்கியிருந்தார்.

அவர் மணல் ஏற்றியமை தொடர்பில் மூன்று குற்றங்கள் காணப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்திருந்தனர். அவருக்கு 2 இலட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

(து-6)

# தோன்றியதும் மறைந்த இராணுவச் சாவடி


வவினியா,பெப். 2

வவுனியா மன்னார் வீதி குருமன்காடு பகுதியில் இராணுவத்தினரால் நேற்று திடீரனெ அமைக்கப்பட்ட, சோதனைச் சாவடி ஒன்று பின்னர் அவசரமாக முற்பகல் 10 மணியுடன் அகற்றப்பட்டுள்ளது. குறித்த சோதனைச்சாவடி அமைக்கப்பட்டதால் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொண்டனர். வீதியில் பயணிக்கும் மக்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். வாகனங்களும் பதிவு செய்யப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் நேற்று முற்பகல் 10 மணியுடன் அது திடீரென அகற்றப்பட்டுள்ளது.

(த-110)

# காரில் கஞ்சா கடத்தல் ஒரு பொலிஸ் கைது

## கனகராயன்குளம் பகுதியில் சம்பவம்



வவுனியா, பெப். 2

சிவில் உடையில் கஞ்சா போதைப் பொருள் கடத்தினார் என்ற குற்றச் சாட்டில் பொலிஸ் அலுவலர் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப் பட்டுள்ளார் என்று கனகராயன்குளம் பொலிஸார் தெரிவித்தனர். 8.6 கிலோ கிராம் கஞ்சாவை காரில் கடத்திய போது அவர் பிடிபட்டார் என்றும் அவர் அம்பாந்தோட்டை சூரியவெவ பொலிஸ் நிலையத்தில் பணிபுரிகின்றார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் யாழ்ப்பாணத்திலி ருந்து பொலநறுவை நோக்கிப் பயணித்த காரை கனகராயன் குளம் மன்னகுளம் பகுதியில் வழி மறித்த பொலிஸார் சோதனை நடத்தினர்.

அதில் 8.6கிலோகிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட பொலிஸ் அலு வலர் சான்றுப்பொருள்களுடன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத் தப்பட்டுள்ளார்.

விசாரணைகளின் பின்னர் நீதிமன் றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

பொலிஸ் அலுவலர் கஞ்சா போதைப்பொருள் கடத்தினார் என்ற குற்றச்சாட்டில் கடந்த வருட மும் ஒருவர் கைது செய்யப்பட்டிருந் தார்.

இதேவேளை, கடந்த ஒரு வாரத்தில் கனகராயன்குளம் பொலிஸார் மற் றும் விஷேட அதிரடிப் படையினர் நடத்திய சோதனையில் வெவ்வேறு சம்பவங்களில் சுமார்18 கிலோ கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப் பட்டது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-110)



# 'பிளாஸ்ரிக்' விழிப்புணர்வு: 14,023 கிராமியக் குழுக்கள்!

யாழ்ப்பாணம், ஜன.2

"சமூகத்துக்குக் கேடான பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்தவும் அவற்றுக்கான மாற் றுப் பயன்பாடு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வும் நாடு முழுவதும் உள்ள 14 ஆயிரத்து 23 கிராம அலுவலர் பிரிவுகளிலும் திண்மக் கழிவு முகாமைத்துக் கட்டுப்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன" என்று சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் ஜயந்த அமரவீர தெரி வித்துள்ளார்.

"நாடு தழுவிய ரீதியில் உள்ளூராட்சி சபைகள், பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்புடன் இந்தக் கிராம மட் டக் கட்டுப்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன. நாடு தழுவிய ரீதியில் செயற்படும் 10 ஆயிரம் அறநெ றிப் பாடசாலைகள், 11 ஆயிரம் ஆரம்பப் பாடசாலைகள், 9 ஆயிரத்து 682 பாடசாலைகள், கிராம மட்டத்தில் இயங்கும் சனசமூக நிலையங்கள் ஆகியவற்றையும் ஒருங்கிணைத்தே இந்தக் கிராம மட்டக் கட்டுப்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன "என்றும் அவர் தெரி வித்தார். (ஜ-50)



## தலைக்கவசம் இல்லை: மூவருக்கு தண்டம்

கிளிநொச்சி, பெப். 2

தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய மூவருக்கு 8ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்தது கிளி நொச்சி நீதிமன்று.

கிளிநொச்சி மற்றும் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் தலைக் கவசம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்தினர் என்று குற்றஞ்சாட்டி மூவ ரைப் பொலிஸார் நீதி மன்றில் நேற்றுமுன்தி னம் முற்படுத்தினர்.

சந்தேக நபர்கள் தங்கள் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டனர். இருவருக்கு தலா 3ஆயி ரம் ரூபாவும் மற்றையவ ருக்கு 2ஆயிரத்து 500 ரூபாவும் தண்டம் விதிக் கப்பட்டது. (த-6)

# தமிழ்மொழித் தின விழா போட்டித் திகதி அறிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.2

இந்த வருடத்துக்கான அகில இலங் கைத் தமிழ்த் தினப் போட்டிகளுக்கான விவரங்களும், அவை நடைபெறும் நாள்களும் சுற்றறிக்கையாக அனைத் துப் பாடசாலைகளுக்கும் அறிவிக்கப்பட் டுள்ளது.

பேச்சு, பாவோதல், இசை, நடனம், நாட கம், வில்லுப்பாட்டு, அறிவிப்பாளர், மரபு வழிக் கூத்து, இலக்கிய விமர்சனம், முஸ் லிம் நிகழ்ச்சி, கட்டுரை, கவிதை, சிறு கதை, குறுநாடகம், இலக்கணம், தமி ழறிவு, வினாவிடை வாய்மொழி ஆகிய போட்டிகள் பிரிவு ரீதியாக நடத்தப்பட வுள்ளன.

இந்தப் போட்டிகளை பாடசாலை மட்டத் தில் எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன் நடத்தி முடிக்க வேண்டும் என்றும், வலய மட்டப் போட்டிகளை அடுத்த மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் நடத்த வேண் டும் என்றும், மாகாண மட்டப் போட்டி களை மே மாதம் 17ஆம் திகதிக்கு முன் னர் நடத்துமாறும் கல்வி அமைச்சின் தமிழ் மொழிப் பிரிவு அறிவித்துள்ளது.

மாகாண மட்டப் போட்டிகளை நிறைவு செய்து தேசிய மட்டப் போட்டிகளுக்கான விண்ணப்பங்களை மே மாதம் 20ஆம் திகதிக்கு முன்பு அனுப்ப வேண்டும் என் றும் கோரப்பட்டுள்ளது.

இந்த வருடம் ஜூலை மாதம் 4, 5 மற்றும் 18,19ஆம் திகதிகளில் அகில இலங்கை தமிழ்த்தின தேசிய மட்டப் போட்டிகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு தமிழ் மொழிப்பிரிவு சகல மாகாண கல்வி அமைச்சின் செய லாளர்களுக்கும், சகல மாகாணக் கல் விப் பணிப்பாளர்களுக்கும், வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கும், சகல தமிழ் மொழிப்பாடசாலை அதிபர்களுக் கும் அறிவித்துள்ளது. (ஜ-69)



# கிளி.இந்துக் கல்லூரியின் மெய்வன்மைப் போட்டி

கொடிகாமம்,பெப். 2

கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வன் மைப் போட்டி நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.30 மணி யளவில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் கி. விக்னராஜா தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கிளிநொச்சி கல்வி வலய நிர்வாக பிரதிக்கல்விப் பணிப்பாளர் பா. வாசுதேவன், சிறப்பு விருந்தினர்களாகக் கிளிநொச்சி சிவநகர் அ.த.க பாடசாலையின் ஓய்வுபெற்ற அதிபர் ஜ. இராஜரட்ணம், கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் இ. அநுராகாந்தன் கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி மத்திய சுற்றா டல் அதிகார சபையின் மூத்த சுற்றாடல் அலுவலர் ப. துவாரகன், பழைய மாணவரும் மன்னார் பொதுச் சுகாதார பரிசோதகருமான வா. ஜெயச்சந்திரன், அயற் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

அப்பர் இல்லம் (பச்சை) 729 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், சம்பந்தர் இல்லம் (மஞ்சள்) 542 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், சுந்தரர் இல்லம் (நீலம்) 539 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன. (ஜ-159)



## வறிய குடும்பங்களுக்கு உணவுப் பொருள்கள்

யாழ்ப்பாணம்,பெப்.2

மாதாந்தம் 2 ஆயிரம் ரூபா வருமானம் பெறும் முதியோர் உட்பட வறிய குடும்பங்களைச் சேர்ந்த அனைத்துக் குடும்பங்களுக்கும் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன. ஜனாதிபதியின் வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ், நாடு தழுவிய ரீதியில் கிராம மட்டத்தில் இயங்கும் பொருளாதார அபிவிருத்தி அலுவலர், கிராம அலுவலர், சமுர்த்தி அலுவலர் ஆகியோருடன் இணைந்த வகையில் தெரிவு செய்யப்படும் குடும்பங்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன. வறுமை ஒழிப்புக்காக ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர அபிவிருத்தித் திட்டத்துக்கான ஒத்துழைப்புடன் இந்தச் செயற்றிட்டம் இந்த மாதத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-50)

## பட்டம் ஏற்றத் தடை

யாழ்ப்பாணம்,பெப்.2

பலாலி சர்வதேச விமான நிலையத்தின் சுற்று வட்டாரத்தில் பட்டம் ஏற்றுவதற்கு முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

விமான நிலையத்தை மையமாகக் கொண்டு மிக விசாலமான சுற்று வட்டத்தை உள்ளடக்கியதாக, அதாவது கோண்டாவில், மானிப்பாய், வல்வெட்டித்துறை போன்ற பகுதிகளை உள்ளடக்கியதான பிரதேசங்களில் பட்டம் ஏற்றத் தடை விதிக்கப்பட்டிருப்பதாக விமானப்படையினர் அறிவித்துள்ளனர்.

இந்த விடயத்தில் பொருத்தமான நடவடிக்கை எடுக்குமாறு யாழ். விமானப்படைத் தளபதி, மாவட்டச் செயலருக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

சர்வதேச தரமாக்கப்பட்ட பலாலி விமான நிலையத்தின் அண்மைப் பிரதேசங்களில் தொடர்ச்சியாகப் பொது மக்களால் பட்டம் விடப்படுவதால், விமானப் போக்குவரத்தில் இடையூறு விளைவிப்பதாக அறியத்தரப்பட்டுள்ளது. எனவே குறிப்பிட்ட பகுதிகளில், தங்களுடைய பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பொதுமக்களுக்குப் பட்டம் விடுவதைத் தவிர்க்க அறிவுறுத்தல் வழங்குமாறு அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனையடுத்து மாவட்டச் செயலர், தொடர்புடைய பிரதேச செயலர்களுக்கு அறிவுறுத்தல் கடிதங்களை அனுப்பியுள்ளார். (க-121)

### கோரிக்கைகளை வலியுறுத்தி

# சக்கர நாற்காலியில் சுற்றுப் பயணம்!



யாழ்ப்பாணம்,பெப்.2

சமூக நல்லிணக்கம் வேண்டியும், மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கைத்தர உயர்வு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து, இலங்கை முழுவதற்குமான சக்கர நாற்காலியில் சுற்றுப்பயணம் இன்று ஆரம்பிக்கப்படும்.

வவுனியாவைச் சேர்ந்த மக்கீன் முஹமட் அலி, அநுராதபுரம் கொரவப்பொத்தானையைச் சேர்ந்த முதலிஹமஹே பிரேமச்சந்திரா, வவுனியாவைச் சேர்ந்த செல்வராஜா ஜெகதீஸ்வரன் ஆகிய மூன்று மாற்றுத்திறனாளிகள் சக்கர நாற்காலியில் இலங்கையைச் சுற்றிவரவுள்ளனர். இன்று காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் இருந்து ஆரம்பமாகும் சுற்றுப்ப யணம் எதிர்வரும் 4 ஆம் திகதி சுதந்திரதினத்தன்று கொழும்பைச் சென்றடையும்.


இன ரீதியான நல்லிணக்கத்தை இந்த நாட்டில் அனைவரும் பின்பற்ற வேண்டும், மாற்றுத்திறனாளிகள் சமூகத்தில் ஏனையோர் அனுபவிக்கும் சகல உரிமைகள் சலுகைகளையும் அனுபவிக்க வழிசமைக்க வேண்டும், நாட்டிலுள்ள சகல மாற்றுத்திறனாளிகளுக்கும் மாதாந்தக் கொடுப்பனவு 5 ஆயிரம் ரூபாவை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும், மாற்றுத்திறனாளிகளுக்குச் சமூக சமய கலாச்சார விளையாட்டு கல்வி பொருளாதார விடயங்களில் சமவாய்ப்பு சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும், பொது நிறுவனங்கள்; அரங்கு மேடைகள், பொது மலசலகூடங்கள், பொதுப்போக்குவரத்துகள், பொதுக்கட்டடங்கள், அலுவலகங்கள், மருத்துவமனைகள், சேவை மையங்கள், போக்குவரத்துத் தரிப்பிடங்கள் என சகல துறை களிலும் அணுகுவசதி ஏற்படுத்தப்பட வேண்டும், வங்கிகள் மருத்துவமனைகள் போன்ற சேவை பெறும் மையங்களில் எமக்கு முன்னுரிமை வழங்க மாற்றுத்திறனாளிகளுக்கான விசேட அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் பயணம் ஆரம்பிக்கப்படுகிறது. (க-222)

## பொதுக் கூட்டம்

பருத்தித்துறை,பெப்.2

பருத்தித்துறை மாவட்ட சாரண கிளைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலக மண்டபத்தில் தலைவர் ஆழ்வாப்பிள்ளை சிறி தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ)

## பிறந்த சிசு நினைவாக தென்னங் கன்றுகள்



மன்னார்,பெப்.2

மன்னாரில் குறிப்பிட்ட மூன்று தினங்களுக்குள் பிறந்த சிசுக்களின் நினைவாக அவர்களின் தாய்மாருக்கு, மெசிடோ நிறுவனத்தால் தென்னங் கன்றுகள் வழங்கப்பட்டன. மன்னார் மாவட்ட மருத்துவமனையில் நேற்று, நேற்று முன்தினம் பிறந்த சிசுக்களின் நினைவாக, 5 தென்னங்கன்றுகள் வீதம் வழங்கப்பட்டன. இன்று பிறக்கும் சிசுக்களின் நினைவாக தென்னங்கன்றுகள் வழங்கப்படும். அத்துடன் மன்னார் மாவட்ட மருத்துவமனை வளாகத்தில் நடுகை செய்வதற்கும் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.

உளவியல் ரீதியில் பிறக்கும் குழந்தை இயற்கையோடு இணைந்த இயற்கையை நேசித்துப் பாதுகாக்கும் குழந்தையாக அது வளர வேண்டும் என்ற நோக்கத்துடன் இவை வழங்கப்பட்டன என்று மன்னார் மாவட்ட மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் தெரிவித்தார். (க-213)

## ஒரு லட்சம் பேருக்கு வேலை: விளக்கக் கூட்டம் மன்னாரில்



மன்னார், பெப்.2

அரசால் முன்னெடுக்கப்பட்டுவரும் ஒரு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் திட்டம் தொடர்பாக கிராம மட்டங்களில் கிராம அலுவலர்களும், பிரதேச செயலர்களும் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது தொடர்பாக மன்னார் மாவட்டப் பிரதேச செயலர்களுக்கு விளக்கமளி க்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டம் மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றாது குறிப்பாக எட்டாம் வகுப்புக்குக் கீழ் கல்வி கற்றவர்களுக்கும், குடும்பத்தில் உள்ளவர்கள் தொழில் வாய்ப்பற்ற நிலையில் வறுமைக் கோட்டுக் கீழ் வசிக்கும் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் வேலை வாய்ப்பு வழங்குதவதற்குத் தற்போது விண்ணங்கள் கோரப்பட்டுள்ளன. பிரதேச செயலாளர்கள் ஊடாக கிராம அலுவலகர்கள் மூலம் விண்ணப்பத்தாரிகளுக்கு விண்ணப்பங்கள் வழங்கப்படுகின்றன.

விண்ண ப்பங்களை கிராம அலுவலகரிடம் கையளிக்கும்போது அவர்களின் குடும்ப நிலை, அவர்களின் வீடுகளில் யாராவது ஒருவர் நிரந்தர வருமானத்தை ஈட்டும் நபர் காணப்படுகின்றார்களா அல்லது நிரந்தர வருமானம் அற்ற வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் குடும்பமா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். துறை சார்ந்தவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட இருக்கின்றது.

விண்ண ப்பிப்பவர்கள் 18 வயதுக்கும் 45 வயதுக்கும் உட்பட்ட நலிவுற்ற குடும்பமாக இருக்க வேண்டும் என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-60,213)

## தண்டம்

சாவகச்சேரி,பெப்.2

வீதிப் போக்குவரத்து விதிமுறைகளை மீறியவர்கள் சிலருக்குசாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுத் தண்டம் விதிக்கப்பட்டது. காலாவதியான சாரதி அனுமதிப் பத்திரத்துடன் வாகனம் செலுத்திய கிளிநொச்சி வாசிக்கு 25 ஆயிரம் ரூபாவும், சாரதி அனுமதிப் பத்திரமின்றி மதுபோதையில் வாகனம் செலுத்திய கொடிகாமம் வாசிக்கு 50 ஆயிரம் ரூபாவும், காப்புறுதிப் பத்திரம் மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் ஆகியவை இன்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 50 ஆயிரம் ரூபாவும் வாகன வரிப் பத்திரம் மற்றும் காப்புறுதிப் பத்திரம் ஆகியவையின்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 27 ஆயிரத்து 500 ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டி ருந்தன. (க-9)

# ரணிலின் பதவி ஆசையே ஐ.தே.க. அழியக் காரணம்

## மத்திய குழுவிலிருந்து தூக்கி வீசப்பட்ட அஜித் பி. பெரேரா எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு, பெப்.2

மக்கள் செல்வாக்கை அதிகம் பெற்றிருந்த ஐக்கிய தேசியக் கட்சி தற்போது அழிவுப் பாதைக்கே சென்று கொண்டிருக்கின்றது. இதற்குக் காரணம் ரணில் விக்கிரமசிங்கவின் பதவி ஆசையே.



இவ்வாறு கருத்துத் தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுவிலிருந்து நீக்கப்பட்ட சஜித் அணியின் முக்கியஸ்தரான நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு ரணிலின் பதவி ஆசையை மீண்டும் நிறைவேற்றியுள்ளது.

அவரின் ஆதரவாளர்கள் மட்டுமே மத்திய செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் கட்சியின் தலைமைப் பதவியில் தொடர அனுமதி வழங்கியுள்ளார்கள்.

இதை ஒருபோதும் ஏற்கவே முடியாது. ஐக்கிய தேசிய முன்னணியின் தலைமைப் பொறுப்பை மட்டும்அவர்கள்சஜித்பிரேமதாஸவுக்கு வழங்கியுள்ளார்கள்.

இந்தத் தீர்மானத்தை சஜித் ஏற்கமாட்டார் என்றே நம்புகின்றோம்.

எனவே, அவர் தலைமையில் புதிய அரசியல் முன்னணி உருவாக வேண்டும்.

அந்தப் புதிய முன்னணி நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டால் மாபெரும் வெற்றியைப் பெற முடியும்.

ஐ.தே.கவின் தலைவராக ரணில் இருக்கும் வரைக்கும் அக்கட்சி முன்னோக்கிய பாதையில் செல்லாது. அழிவுப் பாதையிலேயே தொடர்ந்து செல்லும்என்றார். (எ-22)

## சட்டம், ஒழுங்கு பற்றி கிளிநொச்சியில் கூட்டம்

கிளிநொச்சி, பெப். 2

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க விஷேட கூட்டம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10மணிக்கு நடைபெறவுள்ளது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமாரின் பணிப்பின் பேரில் அவருடைய தலைமையில் கூட்டம் நடைபெறவுள்ளது என்று மாவட்டச் செயலர் திருமதி. றூபவதி கேதீஸ்வரன் பொது அமைப்புக்கள், சிவில் சமூக பிரதிநிதிகளுக்கு அறிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்ற சட்டவிரோத மணல் அகழ்வு, மரம் கடத்தல், கஞ்சா, கசிப்பு கடத்தல், ரவுடிகளின் நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் ஆராயப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (து-214)

## 'கிரா த்துக்கு ஒரு வீடு' மீசாலையில் அடிக்கல்



சாவகச்சேரி,பெப்.2

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மீசாலை மேற்கில் பொருளாதார நிலையில் பின் தங்கிய குடும்பத்துக்கு ஆறு லட்சம் ரூபா பெறுமதியான வீட்டுக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான 'கிராமத்துக்கு ஒரு வீடு நாட்டுக்கு எதிர்காலம்' என்னும் வீடமைப்புத் திட்டத்தின் ஊடாக இந்த வீடு அமைக்கப்படவுள்ளது.

பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு அடிக்கல்லை நடுகை செய்தார். (ஐ-9)

## இல்ல மெய்வன்மைப் போட்டி



யாழ்ப்பாணம் பெப்.2

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள் கடந்த வியாழக்கிழமை அதிபர் மு.செல்வஸ்தான் தலைமையில் விளையாட்டு முதல்வர் ஆர்.ராஜகாந்தனின் ஒழுங்கமைப்பில் கல்லூரியின் மைதானத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக்கிளைத் தலைவர் எஸ். மகேந்திரனும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் எஸ். பார்த்தீபனும் கௌரவ விருந்தினராக பிரபல கட்டட ஒப்பந்ததாரர் கே.வாசீகனும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் மாணவர்களின் அணிநடை சுவட்டு நிகழ்வுகள் மற்றும் கயிறுழுத்தல் போட்டிகள் இடம்பெற்றதுடன் மாணவர்களின் இடைவேளை நிகழ்வும் இடம்பெற்றன.

போட்டியில் வெற்றி பெற்ற வீர வீராங்கனைகளுக்கான வெற்றிக்கேடயங்களை திருமதி. மகேந்திரன் வழங்கி வைத்தார். (ந)

## யாழ்.கோட்டத்தில் இன்று தமிழ்த் தினப் போட்டி

யாழ்ப்பாணம், ஜன.2

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்கானதமிழ்த் தினப் போட்டிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாணம் வலய தமிழ் மொழி உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை மட்டப் போட்டிகளை நடத்தி பாடசாலை மட்டத் தெரிவுகளை எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் வலயக் கல்வி வலய அபிவிருத்திப் பிரிவில் ஒப்படைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாண கோட்ட மட்ட எழுத்தாக்கப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்றும், வலய மட்ட எழுத்தாக்கப் போட்டிகள் அடுத்த மாதம் 12ஆம் திகதி நடைபெறும் என்றும், ஏனைய வலய மட்டப் போட்டிகள் அடுத்த மாதம் 30 ஆம் திகதி நடைபெறும் என்றும் யாழ்ப்பாணம் வலய தமிழ்மொழி உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ-69)

## நாளை மின்தடை

யாழ்ப்பாணம்,பெப்.2

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் நாளை திங்கட்கிழமை மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது. காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ்ப்பாண மாவட்டத்தில்** கலைவாணி சந்தி, கலைவாணி வீதி, கருவப்புலம் வீதி ஆகிய இடங்களிலும், **வவுனியா மாவட்டத்தில்** புதுக்குளம் கோவில்குளம் கிராமம், தந்திரிமலை, சின்னசிப்பிக்குளம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின்பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

## வாடகைக்கு மேல் வாடகை

### வவுனியா நடமாடும் வியாபாரிகள் பாதிப்பு

யாழ்ப்பாணம் பெப். 2

வவுனியா நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள அதிர்ஷ்டலாபச்சீட்டுக் கூடம், வடை வண்டில் மற்றும் குடியிருப்பு வீதியில் அமைந்துள்ள தற்காலிகக் கடைகள் போன்றவற்றுக்கு, நாளாந்த வாடகையாக 50 ரூபா செலுத்தப்பட்ட வேண்டுமென வவுனியா நகரசபைத் தலைவர் இ.கௌதமன் தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பான அறிவித்தல் குடியிருப்பு வீதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக ஒட்டப்பட்டுள்ளது. அதில் மேற்குறிப்பிட்ட இடங்களில் நாளாந்த வாடகை 50ரூபா செலுத்த தவறும் பட்சத்தில், மேற்கூறப்பட்ட வியாபாரங்கள் நகரசபையால் தடை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நடமாடும் வண்டில் வியாபாரம் என நகரசபைக்கு வருடாந்தம் 1270ரூபா செலுத்தப்பட்டு வருகின்றது. இந்த நிலையில், மேலதிகமாகத் தற்போது தினசரி 50 ரூபா அறவிடப்படவுள்ளது.

இதனால் தாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக நடமாடும் வண்டில் வியாபாரிகள் கவலை தெரிவித்துள்ளனர். (ந-18)

JKOA TAC EASY maxell

நவீன தொழில்நுட்ப கருவிகளின் ஊடாக எதிர்காலத்தை நோக்கி...



பாடசாலைகள், பிரத்தியேக வகுப்புகள் மற்றும் காரியாலயங்களுக்கு சிறப்பு விலை!

## Smart Classroom
## திறன் வகுப்பறை

Short throw Projector
Interactive Whiteboard(86" & 96")
Interactive smart touch Panel(65", 75" & 85")

மேலதிக விபரங்கள் மற்றும் இலவச கண்காட்சி தொடர்பிலான தகவல்களுக்கு

Babu: 077 3182838 | Ashok: 077 7725241 | Thanesh: 077 3530655

ஜோன் கீல்ஸ் ஒபிஸ் ஒட்டோமேஸன் (தனியார்) நிறுவனம் www.jkoa.com
E-mail: jkoa@keells.com

## முச்சக்கர வண்டி பதிவுப் பத்திரத்திற்கு

சிறந்த தொகை
குறைந்த வட்டியுடன்
ஒரே நாளில் பெற்றுக்கொள்ளலாம்



OD
முறைப்படி
வட்டியைச் செலுத்தல்

இன்றே தொடர்பு கொள்ளவும்

யாழ்ப்பாணம் 0777 391 449 | வவுனியா 0769 127 751

SINGER FINANCE

Web: www.singerfinance.com | Facebook: SingerFinance

## உயர்மதிப்புள்ள சொத்துக்கள் உயர்மதிப்புள்ள இடத்தில் நீண்டகால குத்தகைக்கு அல்லது விற்பனைக்கு உண்டு

### தெஹிவளை மவுண்லெவெனியாவில், இரண்டாவது சொத்து காலி வீதியில்

A complex (Land 37 P & - 6663 sq.ft built up area) மூன்று வெவ்வேறு தனித்தனி கட்டிடங்களை கொண்ட பாரியகட்டிடதொகுதி மீள அலங்கரிக்கப்பட்டு உடனடியாக குடியேறுவதற்கான நிலையில் காணப்படுகின்றன. முழுமையாகவோ அல்லது தனித்தனி அலகுகளாகவோ குடியேறலாம். சமீபத்தில் அங்குவசித்த அவுஸ்திரேலிய பிரஜைகள் வெளியேறியுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட சொத்துடன் இணைக்கப்பட்ட ஒரே நிலப்பரப்பிற்குள் காணப்படும் சொத்தும் உள்ளது. 15 பேர்ச், 3685 சதுர அடி கொண்ட இந்த இரண்டு மாடி கட்டிடம் காலி வீதிக்கான நுழைவாயிலுடன் அமைந்துள்ளது.

பலபாகங்களை கொண்ட இந்த கட்டிடம், **BPO** அலுவலகம், ஆலோசனை அலுவலகம் மற்றும் வீடு, கடை தொகுதி, வெளிநாட்வர்களிற்கான ஹோட்டல்கள் அல்லது தங்குமிடங்கள், பலதொகுதி அடுக்குமாடி குடியிருப்புகள், வெளிநாட்டு மாணவர்கள், அல்லது வேறு வர்த்தக வாழ்விட நோக்கங்களை கொண்டவர்களிற்கு பொருத்தமானது.கூட்டு குடும்பங்கள் வாழ்வதற்கும் பொருத்தமானது.

### சொத்தின் அம்சங்கள்

- இரண்டு மேல்மாடியற்ற இரு கட்டிடங்கள் (3451 சதுரஅடி 2462 சதுரஅடி).
- ஒரு மேல்மாடியுடன் கூடிய கட்டிடம்.
- அனைத்து கட்டிடங்களும் முழுமையாக TILE மற்றும் A/C பொருத்தப்பட்டவை.
- சுடுநீர் வசதியுடன் கூடிய 09 கழிவறைகள், 10 அறைகள், தாராளமான இடவசதியுடன் கூடிய ஓய்வெடுப்பதற்கான பகுதிகள், 03 சமையலறைகள் (தொழில் புரிவதற்கான அல்லது வாழ்வதற்கான பகுதியாக மாற்றலாம்).
- பணியாளர்கள் கழிவறை, களஞ்சிய அறைகள், பணியாளர்கள் உணவு விடுதி அறைகள்.
- 14+ வாகனத்தரிப்பிடங்கள், வாகனப்பாதைகள் மற்றும் பூந்தோட்டங்கள்.
- 03 நுழைவாயில்கள் (லொறி போன்ற பாரிய வாகனங்களிற்கான பாரிய பாதை).
- 03 PH மின்சாரம் + ATS உடன் தயார்நிலையில் 100 KVA Power Generator.
- தகவல் தொழில்நுட்ப சாதனங்களிற்கான வயர் இணைப்புகள் அனைத்து வசதிகளும்.
- பிரதான இணைப்புடன் தொடர்புபடுத்தப்பட்ட சேர்வர்கள் (ஒன்றை தவிர).
- தனித்தனியான நீர்த்தாங்கிகள், Pressure Pumps.
- தனித்தனியான மின்சார மற்றும் நீர் பாவனை கணிப்பு கருவிகள்.
- மிகவும் பாதுகாப்பான உயர்ந்த மதில்கள் - CCTV கண்காணிப்பு வசதிகள்.
- அமைதியான மற்றும் கௌரவமான அயலவர் சுற்று சூழல்.

வணிக வளாகங்கள், பலவகையான உணவு விடுதிகள், ஹோட்டல்கள், கடற்கரை, பேரூந்து, புகையிரத நிலையங்கள், வங்கிகள், பாடசாலைகள் மற்றும் Shopping Arcades (Odel & Gifts) போன்றன அருகிலேயே உள்ளன (ஒரு நிமிட நடைதூரம்).

வெளிநாட்டவர்கள் அல்லது கோப்ரேட் நிறுவனங்களை சேர்ந்தவர்கள் முழுமையான கட்டிடத்தை குத்தகைக்கு அல்லது கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றனர். தனித்தனியான அலகுகளும் பரிசீலிக்கப்படும்.

பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளலாம், பார்வையிடலாம்.

**0777 760 599 - DELANTHA**

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு advt@uthayan.com, 021 493 1111

ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

# லக்சுமி மணிமண்டபம்

- திருமண வைபவம்
- பூப்புனித நீராட்டு விழா
- பிறந்த நாள் விழா
- விசேட ஒன்று கூடல் நிகழ்வுகள்

போன்ற நிகழ்வுகளுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்

**லக்சுமி மணி மண்டபம்**

தொடர்பு: **இ.அன்னலக்சுமி**
விளையாட்டு அரங்கு வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

அன்னலக்சுமி - 077 125 7796
செல்வா - 076 850 3712
பரமேஸ்வரன் - 077 498 0360

(cs.30947)(11.17)

## காணி விற்பனைக்கு

2 பரப்புக்காணி யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் உள்ளது.முருகமூர்த்தி வீதி. வண்ணார்பண்ணை. யாழ்ப்பாணம்.

**077 846 0804** (CS/30936)(11.17)

## சிறுநீரகம் தேவை

33 வயதுடைய நபர் ஒருவருக்கு
B+ வகையான
சிறுநீரகம் தேவை.

**077 579 2780,**
**077 792 1217**

## மருதாணி அணிவிக்கப்படும்

**திருமணம், பூப்புனித நீராட்டுவிழா** மற்றும் **சகல இதர சுப காரியங்களுக்கும் நீங்கள் கேட்கும் டிசைன்களில் வீட்டிற்கு வந்து** மருதாணி அணிவிக்கப்படும்.

**077 674 5452 - ஆயிஷா**




## J.M.W. தையல் பயிற்சி நிலையம்

பெண்களுக்கான அனைத்து ஆடைகளும் சிறந்த விளக்கத்துடன் தைப்பதற்கு பயிற்றுவிக்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
வெகு விரைவில் ஆரம்பம். (CS/30938)(11.17)

**077 9297474, 078 963 3403**

## சிறுகதை நூல்

"**என் கண்களே சாட்சி**" பரிசுபெற்ற நான்கு சிறுகதைகள் உட்பட பதினொரு சிறுகதைகளின் தொகுப்பு.
ஆசிரியர்:- **எஸ்.பி.கிருஷ்ணன் (வேறற்கேணியன்)**
கிடைக்குமிடம்: **பூபாலசிங்கம் புத்தக சாலை**, யாழ்ப்பாணம் - நல்லூர்
**சிறீலங்கா புத்தகசாலை** - யாழ்ப்பாணம்.
**சிறீ கோணேஸ்வரா** - சாவகச்சேரி
**அகிலிசை புத்தகசாலை** - கிளிநொச்சி
**பார்கவி புத்தகசாலை** - கிளிநொச்சி

தொடர்பு:- 244/4, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

## வர்த்தக நிலையம் விற்பனைக்கு

**யாழ்நகரின் மத்தியில் இரண்டு பரப்புக்காணியில்** அமைந்துள்ள **4500 ச.அடி விஸ்தீரணமுள்ள மூன்று மாடிகளைக் கொண்ட கடைத்தொகுதி** விற்பனைக்குண்டு
**விலை 120 மில்லியன்**

(cs.30942) (13.17)

**தொடர்பு: 075 597 2565**

## மணமகள் தேவை

**MPA**பட்டதாரி இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 49 வயதுடைய விவாகரத்துபெற்ற மணமகனுக்கு 35 இற்கு 40 இற்கு இடைப்பட்ட இந்து கௌரவ குலத்தைச் சார்ந்த மணமகள் தேவை.

| தொடர்புகொள்ளும் முகவரி | தொ.பே. எண் |
| --- | --- |
| சி.அருமைநாயகம் J.P | 076 667 7534 |
| மீசாலை கிழக்கு, மீசாலை. | 077 369 4114 |

## காணி பழைய வீடு விற்பனைக்கு

**கொழும்பு 10 இல் ஆனந்தா கல்லூரிக்கு அருகில் கோயில் வீதியிற்கு 10 அடி தூரத்தில்** அமைந்துள்ள **13 பேர்ச் அளவிலான காணி** மற்றும் **பழைய வீடு விற்பனைக்குண்டு.**
**பேர்ச் ஒன்றின் பெறுமதி 10 மில்லியன் ரூபாவாகும்** (விலை பேசி நிர்ணயிக்கப்படும்)
தரகர்களுக்கு அனுமதியில்லை.

தொடர்பு:
**076 167 4498, 076 587 3438,**
**077 303 9343, 001 323 695 4333**
மின்னஞ்சல்:
tswije28@yahoo.com

(aco.6979) (13.17)

## வெள்ளவத்தையில் விருந்தினர் விடுதி

**அமைவிடம் :- காலி வீதி, வெள்ளவத்தை,**
**பசல்ஸ் லேன். இல.39/1.**
**(வெள்ளவத்தை சந்தைக்கு அருகிலுள்ள வீதி)**

- காலி வீதியிலிருந்து 5 நிமிட நடை தூரத்திலுள்ளது.
- அமைதியான இடம் மற்றும் வாகன தரிப்பிட வசதியையும் கொண்டது.
- மூன்று மாடிகளுடன் 15 அறைகளைக் கொண்டுள்ளது.
- ஒருவர், இருவர், மூவர் மற்றும் குடும்பமாகவும் தங்கக்கூடிய அறைகளைக் கொண்டது.
- குளிரூட்டி மற்றும் சுடுநீர் வசதிகளைக் கொண்ட அறைகள்.
அறையாகவும் வீடாகவும் வாடகைக்குக் கொடுக்கப்படும்.
- ரூ.2500 இலிருந்து 4500 வரையான விலைகளில் அறைகள் வழங்கப்படும்.

(AVA/1084)(11,17)

**077 996 9478 , 077 332 8510**

Mobitel
Master
unlimited
உங்களுக்கு விருப்பமான
UNLIMITED
பக்கேஜைத்
தெரிவு செய்யுங்கள்
அழையுங்கள் 1717
வரையறுக்கப்பட்ட சலுகை Mobitel.lk/master
UNLIMITED
CALLS
மாதாந்தம்
ரூபா. 1500/- மட்டுமே
UNLIMITED
CALLS & DATA
மாதாந்தம்
ரூபா. 3,999/- மட்டுமே
Sri Lanka Telecom
Mobitel

## நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு
## ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

**க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் சித்தியடைந்த ETF அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு நிதியுதவி வழங்குவதற்காக விண்ணப்பம் கோரல்-2019**
**(பாடசாலை விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)**

2019ஆம் ஆண்டு க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் சித்தியடைந்த ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினது அங்கத்தவர்களின் பிள்ளைகள் 5000 பேருக்கு மேற்படிப்புக்காக ஒருவருக்கு பன்னிரண்டாயிரம் ரூபா வீதம் (ரூ.12.000/-) நிதியுதவி வழங்குவதற்கு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை தீர்மானித்துள்ளது.

### விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளல்

- www.etfb.lk இணையத்தளத்தின் மூலம்
- முகவரி எழுதப்பட்ட 9"x4" அளவிலான முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையொன்றை பின்வரும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம்.
- 2020.02.05 ஆம் திகதிக்கு முதல் அலுவலக நேரங்களில் பின்வரும் அலுவலகங்களில்

**பிராந்திய அலுவலகங்கள்**

பிரதான அலுவலகம் : புலமைப் பரிசில் பிரிவு. இல.92. கிருள வீதி. நாராஹேன்பிட்ட. கொழும்பு-05.

01 கம்பஹா
இல.58 B. மேரி பிசோ மாவத்தை.
கம்பஹா
தொ.இல. 033-2234520 / 033-4922530

02 கண்டி
இல.79. வீடமைப்பு செயலகம். யட்டிநுவர வீதி.
கண்டி.
தொ.இல. 081-2233793

03 இரத்தினபுரி
இல.53/1/2. சேனாநாயக்க மாவத்தை.
இரத்தினபுரி
தொ.இல. 045-2222529 / (45-2222530)

04 காலி
இல.30/1. தெவமித்த வீதி.
காலி.
தொ.இல. 091-2245814 / 091-2231129

05 அநுராதபுரம்
இல.87/25. முதலாவது ஒழுங்கை.
தர்மபால மாவத்தை. அநுராதபுரம்
தொ.இல. 025-2222185 / 025-2222150

06 மாத்தறை
இல.63/02. காலிதாஸ வீதி.
மாத்தறை.
தொ.இல. 041-2231877 / 041-2222625

07 களுத்துறை
இல.294. காலி வீதி.
களுத்துறை வடக்கு.
தொ.இல. 034-2237722 / 034-2223040

08 கேகாலை
இல.247/1. கொழும்பு வீதி.
கேகாலை.
தொ.இல. 035-2222991

09 குருநாகல்
இல.27. செஞ்சிலுவை சங்க கட்டடம்.
கச்சேரி வீதி. குருநாகல்
தொ.இல. 037-2228194 / 037-2056394

10 ஹம்பாந்தோட்டை
இல.57. வில்மட் வீதி.
ஹம்பாந்தோட்டை
தொ.இல. 047-2222460 / 047-2222462

11 ஹட்டன்
இல.1ஏ. கினிகத்ஹேன வீதி.
ஹட்டன்.
தொ.இல. 051-2223840

12 பதுளை
இல.9 B. கங்கபட்ட வீதி.
பதுளை.
தொ.இல. 055-2225357 / 055-2224482

13 அம்பாறை
இல.693. மல்வத்தை வீதி
அம்பாறை.
தொ.இல. 063-2222645

14 யாழ்ப்பாணம்
இல.86. 1/2.
நாவலர் வீதி. யாழ்ப்பாணம்.
தொ.இல. 021-2220010

15 வவுனியா
இல.69/1/1. மில் வீதி.
வவுனியா.
தொ.இல. 024-2228225

16 திருகோணமலை
இல.455. ஆந்தன்குளம். கண்டி வீதி.
திருகோணமலை.
தொ.இல. 026-2056606 / 026-2056607

17 நுவரெலியா
இல.164. கண்டி வீதி.
நுவரெலியா.
தொ.இல. 055-2224457 / 052-2224475

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி : 2020.03.27**

பூரணமற்ற மற்றும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எந்த காரணத்திற்காகவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை புலமைப் பரிசில் பிரிவுக்கு சமுகமளித்து ஒப்படைக்கவோ அல்லது பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவோ முடியும்.
**புலமைப் பரிசில் உத்தியோகத்தர். புலமைப் பரிசில் பிரிவு. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை. இல.92. கிருள வீதி. நாராஹேன்பிட்ட. கொழும்பு 05.**

**தவிசாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி**
**ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை.**

மேலதிக தகவல்களுக்கு: புலமைப் பரிசில் உத்தியோகத்தர் 011-2369313, 011-2369685

### அறை வாடகைக்குண்டு

யாழ்.இந்துக் கல்லூரிக்கு அருகில் - சமையலறை வசதியுடன் பெண்களுக்கு மட்டும் அறை வாடகைக்குண்டு.

**076 333 8311**

### பாதுகாப்பு உத்தியோகத்தர் வேலை

யாழ்ப்பாணம். சாவகச்சேரி. மானிப்பாய்ப் பகுதியில் பிரபல தனியார் நிலையத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தர் வேலை உண்டு.

**077 522 8428**

### வாகனம் விற்பனைக்கு

**MINI BUS A/C**
**BUDDY**
விற்பனைக்கு உண்டு.

**077 415 8046**

### வாடகைக்கு வீடு (கொழும்பில்)

கொழும்பில் கல்வி கற்கும் யாழ். மாணவர்கள் மூன்று பேருக்கு தனி வீடு வாடகைக்கு **கிராண்பாஸ்** பகுதியில் அமைதியான இடத்தில் உள்ளது.

**077 382 7452, 021 221 2106**

## தேவை

**திருநெல்வேலி பிரதேசத்துக்கு உட்பட்ட நிறுவனம் ஒன்றுக்கு கணக்காளர் (உதவியாளர்) தேவை.**
**(பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்)**

**தகைமைகள்:-**

- **கணக்காளர் (உதவியாளர்)**
  - க.பொ.த.(உயர்தரம்) சித்தியடைந்திருக்க வேண்டும்.
  - ஆங்கிலம் எழுத, பேச தெரிந்திருக்க வேண்டும்.
  - முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப் படும்.
  - கணினி அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.

**வயதெல்லை 21 - 30 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.**

மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்கு விண்ணப்பிப்போர் தங்களது சுயவிவரக் கோவை. அடையாள அட்டை. போட்டோ பிரதி. சான்றிதழ்களின் போட்டோ பிரதி ஆகியவற்றை இணைத்து 10.02.2020 இற்கு முன்னதாகக் கீழ்க்குறிப்பிட்ட மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

**மின்னஞ்சல் முகவரி:-**
**jobdocumentsbsa@yahoo.com**



## மரண அறிவித்தல்



தோற்றம் 07 . 08 . 1992

மறைவு 29 . 01 . 2020

### செல்வி நீரின் புளோரிற் அமலதாசன் (நீரின்)

யாழ்ப்பாணம் மருதடி வீதியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி நீரின் புளோரிற் அமலதாசன் கடந்த 29.01.2020 புதன்கிழமை கொழும்பில் அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளானந்தம் (கோசி) - லில்லிமணி தம்பதிகளின் பாசமிகு பேர்த்தியும், அமலதாசன் (அமலன்) - மேரி வசந்தி தம்பதிகளின் அன்பு மகளும், நிருஷன், நியூட்டன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அடைக்கலதாசன் - சுகி, அன்ரன் - அருணா, யேசுதாசன் - மேரி அஞ்சலா ஆகியோரின் அன்புப் பெறாமகளும், பிரான்சிஸ் - யூலியற் றஞ்சினி, றோசவேகன் - அன்ரனிற்றா (அம்மாச்சி), குலசேகரம் - லோகேஸ்வரி (ராசாத்தி) ஆகியோரின் பாசமிகு மருமகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 25, றக்கா லேன், நல்லூர் என்னும் முகவரியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து நாளை (03.02.2020) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லடக்கத் திருப்பலிக்காக புனித திரேசம்மாள் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**25, றக்கா லேன்,**
**நல்லூர்.**

(CS/30948(11,17)

**தகவல்:-**
**குடும்பத்தினர்.**

**075 013 2071, 077 373 2230**

## பரஸ்பர இடமாற்றம்

2018/ 2019 ஆம் கல்வியாண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டக் கல்லூரிக்கு (Law) தெரிவான மாணவர் ஒருவருக்கு கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டக்கல்லூரி மாணவர் ஒருவருடன் பரஸ்பர இடமாற்றம் கோரப்படுகின்றது.

**071 494 9248, 071 467 0184**

## வீட்டுப்பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி இருந்து வேலை செய்வதற்கு வீட்டுப் பணிப்பெண் தேவை.


வயது: 40 - 60 இடையில்

**077 991 5075**

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

### கனகரத்தினம் குலசிங்கம்



ஆண்டுகள் பத்து கடந்தபோதும்
ஆறவில்லை எம் இதயம்
மறைந்து ஐந்தாவது ஆண்டினிலே
அம்மாவையும் அழைத்து விட்டீர்
நீங்கள் இறைவன் பாதம்
அடைந்திருப்பீர்கள். என்றாலும்
ஏங்குகின்றோம் எப்போதும்
உமை நினைத்து
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
நாம் வாழும் வரை உம் நினைவு
எமை வாட்டும்.
அமரர் இறைபதம் அடைந்து
பத்து வருடங்கள் கடந்துவிட்டன
அன்னாரின் ஆத்ம சாந்தி வேண்டி
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மலர்வு 29.11.1952

உதிர்வு 23.01.2010

திதி:- வளர்பிறை அட்டமி (02.02.2020)

**சுதுமலை தெற்கு,**
**மானிப்பாய்.**

(ANE/1006)(11.17)

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### திருமதி கோவிந்தம்மா முருகையா

. கண்டியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கோயில் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கோவிந்தம்மா முருகையா கடந்த 31.01.2020 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராமையா - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பையா - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற முருகையாவின் அன்பு மனைவியும், புஸ்பவதி (இராஜரட்ணம் - யாழ்கோ திருநெல்வேலி), இராஜேஸ்வரி (மகேஸ்வரி - லண்டன் ), சிவம் (யாழ்கோ திருநெல்வேலி), சிவதாரணி ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜங்கரன் (நீர்ப்பாசனம் திருநெல்வேலி), செல்வராணி, நாகராஜன் (ஜெய துர்க்கா நகைத்தொழிலகம், மல்லாகம்), கஜேந்திரன் (லண்டன்), சர்மிளா, உதயகுமார் (துரை - நகைத் தொழில்), வித்தியாதரன் (SVM எரிபொருள் நிரப்பு நிலையம், பரமேஸ்வராச்சந்தி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சிவசாந்தன் (படப்பிடிப்பாளர், டொட்லைன்), பிரசாந்தன் (நியூ லலிதா நகை மாளிகை), காலஞ்சென்ற நிரோஷா, சௌமியா (சௌமியா அழகுக்கலை நிலையம் - யமுனா வீதி), விஷ்ணுதரன் (யூனியன் கல்லூரி), பகிராம், நேபகா (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), துஷிகா (யாழ்.இந்து மகளிர் ஆரம்பபாடசாலை), அஜய், அக்சனா ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், மோனலிஷன் (யாழ்.சென்.ஜோண்ஸ் கல்லூரி), ருக்ஷிகா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), பகீத், லஜின் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**238, கோயில் வீதி, நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

(CS/30969)(11,17)

**தகவல்:-**
**குடும்பத்தினர்.**

**077 517 8542**

## மரண அறிவித்தல்



### தம்பையா தருமராசா

(கஜபதி படப்பிடிப்பாளர்)

காரைநகர், களபூமி சத்திரந்தையைப் பிறப்பிடமாகவும், வவுனியா, குருமன்காட்டை வசிப்பிடமாகவும் தற்போது 17/4, ஐயனார் கோயில் வீதி வண்ணார்பண்ணை, யாழ்ப்பாண்த்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா தருமராசா 31.01.2020 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு புதல்வனும், காலஞ்சென்றவர்களான இராஜேந்திரா ஜெயலட்சுமி தம்பதியரின் மருமகனும், சிவமனோகரியின் அன்புக் கணவரும், பைரவியின் (சைவப் பிரகாச மகளிர் கல்லூரி - வவுனியா) அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான மனோன்மணி , இந்திராதேவி, பாலசிங்கம் மற்றும் விமலாதேவி (தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஓய்வுபெற்ற அலுவலகர்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற அம்பலவாணர் மற்றும் தேவமனோரஞ்சிதம், ராஜ்குமார் ஆகியோரின் மைத்துனரும், யதுகுலன் (கல்வி அமைச்சு - கோப்பாய்), ஆரணி (JCBT C ompus) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், சுபாஜினியின் சகலகனும், தனுஸ்ராஜ், சானுஜன், ஹரிதாஸ் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**17/ 4, ஐயனார் கோயில் வீதி,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(cs23669)

# மோட்ச தீப அழைப்பு



கடந்த 18.01.2020 சனிக்கிழமை சிவ ஐக்கியம் அடைந்த
எமது குடும்பத் தலைவி

## அமரர் திருமதி தனபாக்கியம் கணேசஐயா

அவர்களின் மோட்சதீபக்கிரியைகள் இன்று (02.02.2020) ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் மகன் கண்ணன் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், சிவபூசை வழிபாடுகளிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புளியடி வைரவர் வீதி,
உடுவில் தெற்கு, உடுவில்.

குடும்பத்தினர்
077 949 4602, 021 224 2446

(m 12438) (13.17)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கடந்த 05.01.2020 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது
குடும்பத் தலைவி

## அமரர் நல்லையா மகேஸ்வரி

அவர்களின்

அன்னை மடியில்
03 . 02 . 1932

ஆண்டவன் மடியில்
05 . 01 . 2020



அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (01.02.2020) சனிக்கிழமை காலை 7.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (03.02.2020) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செருக்கப்புலம் லேன்,
கோண்டாவில்.

(CS/30916)
(11,17)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை தில்லையம்பலம்

(ஓய்வுபெற்ற தஸ்தா அதிகாரி, உப்பு தொழிலாளர் சங்கத் தலைவர், தேசிய உப்புக் கூட்டுத்தாபனம், ஆனையிறவு)



பிறப்பு 17.08.1932
இறப்பு 27.01.2020

யாழ்.நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், இல.737 மல்லாவி யோகபுரத்தில் வசித்தவரும், தற்போது கொல்லர் புளியங்குளம் மாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தில்லையம்பலம் கடந்த 27.01.2020 திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான லொறிக் கந்தையா - புகனேஸ்வரி தம்பதிகளின் மருமகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், சுசீலா, புஸ்பலதா, நளாயினி, கிருஸ்ணவேணி, கலைவாணி, மதியழகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான நடராசா, சுப்பிரமணியம் மற்றும் நாகம்மா, பராசக்தி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், தேவஞானம், தவராசா, வசிட்டன், காலஞ்சென்ற தயாபரன், செல்வராசா, சபிதா ஆகியோரின் மாமனாரும், பார்வதி, செல்லம்மா, நடேசு, சதாசிவம், வரதராசா, பூராசா, குணலக்சுமி, கமலராணி, காலஞ்சென்றவர்களான அருமைநாயகம், குலசிங்கம், சற்குணசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், ரபேசன், தர்சிகா, சுலோசன், யதுசா, விதுசா, அபிதா, ஆகாஸ், கபிலன், அட்ஷயா, அர்ஷீன், கைலேந்திரா, தனேந்திரா அனுஸ்கா, அத்விகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொல்லர் புளியங்குளம் மாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

A9 வீதி, கொல்லர் புளியங்குளம்,
மாங்குளம்.

தகவல்:-
குடும்பத்தினர்.

077 147 7573

# ENGLISH CLASSES

GRADE - 6 - 11

BASIC இல் இருந்து கற்பிக்கப்படும்.

077 841 9507

# தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபல
**ஹாட்வெயர் கடைக்கு கணக்காளர்**
(பெண்) (21-25)
வேலையாள் (ஆண்) (22.30)

077 507 8272

# தேவை

கொழும்பு தெஹிவளையில் 3 பேர் கொண்ட வீட்டில் தங்கி இருந்து வேலை செய்வதற்குப் பெண் தேவை.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

077 197 5192

# தவறிவிட்டது

417491538 V தேசிய அடையாள அட்டை, Nursing IC, 5 Bank Book தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழுள்ள இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

076 467 8923

# விற்பனைக்கு

19l தண்ணீர் போத்தல் விற்பனைக்குண்டு
தொடர்பு: 077 77 222 15

# கொள்வனவு

நெல், தேங்காய், கொப்பரா கொள்வனவு.
நேரில் கொண்டு வரவும்.
தொடர்பு: 279/9, K.K.S. வீதி, கொக்குவில்,
(பழைய ராஜா மில்) யாழ்ப்பாணம்.

# மணமகள் தேவை

1989 இல் பிறந்த கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பாதுகாப்பு உத்தியோகத்தராக வங்கியில் பணிபுரியும் R.C. மணமகனுக்கு மணமகள் தேவை.

076 706 3174, 077 911 6346

# அறை வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம் K.K.S. வீதியில் இந்துக் கல்லூரிக்கு அருகில் 2 ஆண்பிள்ளைகளுக்கு மட்டும் சகல வசதியும் உள்ள அறையுண்டு.
படிக்கும் பிள்ளைகளுக்கு மட்டும்.

831/34, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
021 222 1781

# இலவச பாடநெறி

- முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நெறி
- உளவியலும் உளவளதுணையும்
- ஆசிரியர். பயிற்சி நெறி
- ஆங்கிலம்
- திறன் அபிவிருத்தி பயிற்சி

மேலதிக விவரங்களுக்கு:-

**AMAZON COLLEGE**
87, Kandy Road, Jaffna.
(Opposite of Old Park)
Tel: 077 270 3494, 077 270 3758

# வாடகைக்கு

யாழ் நகரில் (ஆனைப்பந்தி) கட்டடத் தொகுதி வாடகைக்கு மேல் மாடி 3 கடைகளும் கீழ்மாடி 3 கடைகளும் ஒரு களஞ்சிய அறையும் வாடகைக்கு உண்டு.
நிறுவனங்களிற்கு உகந்தது.

தொடர்புகளுக்கு
076 831 3674

# வேலையாள்கள் தேவை

பரந்தனில் உள்ள பண்ணைக்கு ஆடு, மாடு, வீடுகளையும் பராமரிப்பதற்கு ஆண், பெண், குடும்பமாகவும் தங்கி வேலை புரியலாம். (தங்குமிட வசதிகள் உண்டு) கவர்ச்சியான **சம்பளம்** பேசித்தீர்மானிக்கலாம்.

076 324 9977
077 412 1100

# உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம்
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

# தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா?
➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

# உடனடி வேலைவாய்ப்பு Immediate Vacancies

✓ Business Development Manager (வணிக மேம்பாட்டு முகாமையாளர்)
✓ Lecturers (விரிவுரையாளர்கள்)
- English (ஆங்கிலம்)
- Councelling (உளவளத்துணை)
- Teacher training (ஆசிரியர் பயிற்றுவிப்பாளர்)

✓ Students Counsellors (மாணவ ஆலோசகர்)
✓ Area Coordinators (பிராந்திய இணைப்பாளர்கள்- பகுதி நேரம்)

தகுதியுடைய விண்ணப்பங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்

**Amazon College**
87, Kandy Road, Jaffna.
T.P 021 561 2151, 021 561 6300
077 270 3494 amazonjaffna@gmail.com WWW.amazoncollege.lk

# விழிநீர் அஞ்சலி



எமது ஆலயத்தில் நிர்வாக சபை உறுப்பினராக இருந்து அரும்பணி ஆற்றிய

**தங்கராஜா அன்பானந்தன்**

அவர்களின் பிரிவால் துயருறுகின்றோம்.
அன்னாரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்கள்.

**பரிபாலன சபையினர்,**
**வண்.வடமேற்கு ஸ்ரீவிசுவேச விநாயகர் ஆலயம்.**

# துயர் பகிர்கின்றோம்

தோற்றம்
29 . 04 . 1955

மறைவு
30 . 01 . 2020



அமரர்

## லயன் தங்கராஜா அன்பானந்தன்

(செயலாளராக பல வருடங்கள் யாழ் லயன்ஸ் கழகத்தின் சேவையில்)

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**யாழ்லயன்ஸ் கழக நண்பர்கள்**

# கண்ணீர் அஞ்சலி



தென்மராட்சி கல்வி வலய விவசாயபாட ஆசிரியையாகிய

**அமரர் ஜெகதீஸ்வரி சுப்பிரமணியவேல்**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

**தென்மராட்சி கல்வி வலய**
**விவசாய பாட ஆசிரியர் ஒன்றியம்**

# மரண அறிவித்தல்கள்

மலர்வு
30
...
06
...
1941



உதிர்வு
30
...
01
...
2020

## திருமதி கமிலஸ்தேவி வெல்லீஸ் அல்பன் பஸ்ரியன்

(கமலலெல்லிஸ்)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமிலஸ் தேவி வெல்லீஸ் அல்பன் பஸ்ரியன் (கமலலெல்லிஸ்) கடந்த **(30.01.2020)** வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான யோசவ் நீக்கிலஸ் (மனேச்சர்), சிசிலியா லீலா தம்பதிகளின் இரண்டாவது புதல்வியும், காலஞ்சென்ற அல்பன் பஸ்ரியனின் அன்பு மனைவியும், ரெறென்ஸ் (நிஜேஸ்), நிலானி ஆகியோரின் பாசமிகு தாயாரும், அஜித் இயேசுராஜன், அன்ரனிற்றா ஜக்குலின் ஆகியோரின் அருமை மாமியாரும், அன்ரனி நிலாஜனின் பாசமிகு அம்மம்மாவும், பஸ்ரி டிவினேஸ், எறின் டிவைஷ்ணவி ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், ரஞ்சிதம், காலஞ்சென்ற பார்பரா மற்றும் சொர்ணம், பரிமளம், இராசசூரி, காலஞ்சென்றவர்களான அரசசூரி, அருட்சகோதரி நவதிரேஸ் மற்றும் புஸ்பம், றேமசூரி, விஜயசூரி, குணசூரி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை **(03.02.2020)** திங்கட்கிழமை பிற்பகல்**3.00** மணியளவில் புனித கதிரை அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அதன் பின்பு சில்லாலை புனித கதிரை மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சில்லாலை வடக்கு,**
**பண்டத்தரிப்பு.**

தகவல்:
